# விதைகள்...

## பாகம்-3

சகோதரி.
லதா டேவிட்

# விதைகள் :: பகுதி–3

## என்னுரை...

*விதைகளையும் தந்து; அதற்குரிய விளைச்சலையும் தருகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்துவதில்; நானும் கர்த்தருக்குள் மகிழ்கிறேன்.*

*"விதைகள்" 1, 2-ஆம் பகுதிகளை எழுத தேவனுடைய கிருபை போதுமானதாக இருந்ததைப் போலவே 3-ஆம் பாகத்திற்கும் அவருடைய கிருபை போதுமானதாக இருந்தது. இனிமேலும் 4-ஆம், 5-ஆம், ... கர்த்தருக்கு சித்தமானால் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை தாமதித்தால் அதுவரைக்கும் எழுதப்போகும் அத்தனை பகுதிகளுக்கும் அவருடைய கிருபை தொடர்ந்து வரும், சந்தேகமேயில்லை. ஏனென்றால் வாக்குமாறாதவர்தான் வாக்களித்துமிருக்கிறார்.*

*"விதைகள்" என்ற சத்தியத்தின் மேலே தொடர்ச்சியாக தேவனுடைய ஆவியானவர் வெளிச்சம் தந்தார். இருளில் இருப்பவர்கள் மேல் வெளிச்சம் பிரகாசிக்கத்தக்கதாக ஆழங்களில் இருந்தவைகளை மேலெழும்பி வரும்படிச் செய்தார். விதை துளிர்த்து வளர்ந்தது, கிளையடித்து செழித்தது. இக்கடைசிக் காலங்களில் தேவ இராஜ்யத்தின் செய்திகளைச் சுவிசேஷமாக அறிவிப்பவர்கள் மலையேறும்போது கால் சறுக்காமல் இருக்க தேவையான பாதரட்சைகளை வாங்கிக் கொடுக்க, இந்த வெளிப்பாடுகள் மிகப்பிரயோஜனமாக இருக்கும் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.*

*இயேசு பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்தது உண்மை...*
*இல்லையென்று சொல்லவில்லை.*
*ஆனால் அவர் எழுந்து வாசலருகே வந்திருப்பது*
*உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்?*
*தெரிந்து கொள்ளுவோம்; அவருக்குப் பாதையை ஆயத்தப்படுத்துவோம்...*

*கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவருக்குப் பாதைகளைச் செவ்வைப்பண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டாகும் என்றும், தீர்க்கதரிசன ஆகமங்களில் எழுதியிருக்கிற பிரகாரமாய்;*
*யோவான் வனாந்தரத்தில் ஞானஸ்நானங்கொடுத்து, பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக்குறித்துப் பிரசங்கம்பண்ணிக்கொண்டிருந்தான்.*
*மாற்கு 1 : 3-4*
*என்ற வசனத்திற்கேற்ப யோவான்ஸ்நானகன்தான் என்றைக்கோ வழியை ஆயத்தப்படுத்திவிட்டாரே என்று நினைத்துக் கொண்டு, இன்னும் தூங்காதிருங்கள்.... பொறுப்பு எல்லோருக்கும் உண்டு.*

*விதைக்கிறவன் ஒருவன் விதைக்க புறப்பட்டான்...*

*அந்த "ஒருவன்" யாரோ ஒரு முகமறியாத '**X**' என்பவர் மட்டுமல்ல; நீங்களும் நானும் கூடத்தான்! என்ன தயாராகிவிட்டீர்களா? விதைப்புக்கு....*

## ஒரு நிமிஷம்!

விதைகள், விதைகள் பகுதி-2 எழுதி முடிக்க கர்த்தர் இயேசுவின் கிருபை போதுமானதாக இருந்தது. அவருக்கே மகிமையுண்டாவதாக. நான் வேண்டிக்கொண்டதற்கும் அதிகமாக என்னில் கிரியை செய்கிற அவருடைய வல்லமையின்படியே எனக்குச் செவி கொடுத்து, பதில் தந்து எழுத உதவி செய்தார். (பரிசுத்தாவியானவர் பெருமூச்சுகளுடன் ஜெபித்ததினால்; தேவனுடைய வல்லமை என்னில் கிரியை செய்தது.) அதனால் நான் ஜெபித்ததை விட அதிகமாக எனக்குக் கிடைத்தது! அல்லேலூயா! **Halleluijah!** (ரோமர். 8:26) (எபேசி.3:20)

## இன்னும் சில வார்த்தைகள்:

விதைகள் முதல் பகுதியில் 90% பண ஆசீர்வாதத்தைக் கருவாக வைத்தும், இரண்டாம் பகுதியில் 50/50 -யாக (அதாவது 50% பண ஆசீர்வாதத்தையும், மீதி 50% வேதத்தின் வேறு பல சத்தியத்தையும்) எழுத தேவன் உதவி செய்தார். பகுதி 3ல் 2% பண ஆசீர்வாதம் பற்றியது. இது (விதை) தொடர்பாகவே இன்னும் சில காரியங்களை எழுதும்படி என் ஆவியில் ஏவுதல் இருந்தபடியால் தொடர்கிறேன். இயேசு முன்னே சென்றிருக்கிறார்! சொன்னதையே சொல்வதில் தவறில்லை, அது நல்லது. வேதமும் அதைத்தான் சொல்கிறது. நிருபங்களை வாசிக்கும் போது 'பவுல் ஏன் எழுதினதையே திரும்பத் திரும்ப எழுதுகிறார்?' என்று நினைத்ததுண்டு.

***பிலி. 3:1 ...எழுதினவைகளையே எழுதுவது எனக்கு வருத்தமல்ல, அது உங்களுக்கு நலமாயிருக்கும்.***

ஒரு தடவை சொல்லும் போதே கீழ்ப்படிந்திருந்தால் அவர் ஏன் திரும்பத் திரும்பச் சொல்லப் போகிறார். (மத்.22:1, மாற்.10:1, லூக்.23:20, யோவான்.8:8, 1கொரி.15:1, கலா.1:9, பிலி.4:4, 2 தீமோத். 2:26, எபி.5:12, வெளி.19:3) திரும்பத் திரும்பச் சொல்லும் போது மீண்டும் ஞாபகப்படுத்துகிறோம், செய்யும்படி தூண்டியும் விடுகிறோம். சில வேளைகளில் வேறுவழியில்லாதபடி செய்து; கீழ்ப்படிதல் என்ற வேதப் பிரமாணத்திற்குள் நம்மை நடத்தியும் விடுகிறது. நல்லதுதானே? கிளி சொன்னதைத்தான் திரும்பச் சொல்லுகிறது. சலிக்கிறதா? இல்லையே!

ஒரு பள்ளிக்கூடம், ஒரு வகுப்பறை, ஒரு காட்சி... ஆசிரியர் விலங்கியல் (**Zoology**) பாடம் நடத்தி முடித்த பிறகு; ஒரு பையனை எழுப்பி 'நீரிலும் நிலத்திலும் வாழும் ஓர் உயிரினத்தின் பெயரைச் சொல்லு' என்றார். பையன் உடனே 'தவளை' என்றான். உடனே ஆசிரியர் 'நீரிலும் நிலத்திலும் வாழும் இன்னொரு உயிரினத்தின் பெயரையும் சொல்லு' என்றார். யோசித்தான், 'ஆமை என்று சொல்லலாமா? அது நிலத்தில் பெரும்பாலும் இருக்காது'. 'ம்... சொல்லு' என்றார் ஆசிரியர்.

'மீன், அமீபா, கடல் குதிரை, கடல் பசு, திமிங்கலம்! சரி! இதெல்லாம் சரி வராது.' கீழ்க் கண்ணால் பக்கத்தில் பார்த்தான். பக்கத்து பையன்கள் உதட்டுக்குள் சிரித்துக் கொண்டிருந்தனர். எதுக்கு வீண் வம்பு என்று சில வினாடிகள் யோசனை செய்து விட்டு 'இன்னொரு தவளை' என்றான்! ஆசிரியர் முகத்தில் 'ஈ' ஆட்டத்தை முடித்திருந்தது!

அந்த 'இன்னொரு தவளை' விஷயம்தான் இங்கேயும்! பரவாயில்லை, இது முடிகிற விஷயமல்ல என்று ஆண்டவர் ஆரம்பத்திலேயே சொல்லி விட்டாரே!

வசனம் ஒன்றுதான், சத்தியம் ஒன்றுதான், ஆனால் அதைச் சுற்றி மொய்க்கும் ஆவிக்குரிய கண்கள் ஆயிரமாயிரம்! 'ஒரேயொரு வசனத்தை வைத்தே என்னால் ஆயிரம் பிரசங்கம் பண்ண முடியும்' என்கிறார் ஒரு பிரசங்கியார். காரணம் ஒவ்வொருவரின் ஆவிக்குரிய கண்களுக்கு முன்பாக வசனங்கள் வரும்போதெல்லாம் அதன் மேலிருக்கும் முத்திரை உடைக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது. இது முடிவுக்கு வராத ஒன்று. ஏனென்றால் உலகம் முடியப் போகும் கடைசி வினாடியின் முன் வினாடிவரை பிறக்கும் மனிதனுக்கும் வசனமும், அதிலிருக்கும் ஜீவனும் தேவைப்படுகிறது. (யோவான்.10:10)

‘விதை’களை உள்ளர்த்தமாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கும் வேத அடிப்படையிலான புத்தகங்கள் எவ்வளவோ வந்து விட்டதே, இன்னும் இதெல்லாம் எதற்கு? என்று கேள்வி எழும்பு முன்னதாகவே பதிலும் வருகிறது:

நம் கண் எதிரிலேயே நம்மால் பார்க்க முடியாத ஒரு சிறு இடம் இருக்கிறது என்று சொன்னால் நம்புவது கடினம். அப்படி இருக்குமானால் அதை வாழ்நாள் முழுவதும் கவனிக்காமலா இருப்போம்? என்று கேட்போம். 17-ஆவது நூற்றாண்டில்தான் நமது கண்ணின் விழித்திரையில் இப்படி குருட்டுப்புள்ளி ஒன்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. விழித்திரையில் இந்த இடத்தில் ஒளி உணர்ச்சிகள் உள்ள உயிரணுக்கள் கிடையாது. இக்கறுப்புத் திட்டை யாரும் கவனிப்பதேயில்லை; ஏனென்றால் நெடுங்காலமாகவே அதற்குப் பழக்கப்பட்டுவிட்டோம்! இந்தக் குறைவை நமது கற்பனைத் திறன் நம்மையறியாமலேயே ஈடு செய்கிறது. இக்கறுப்புத் திட்டை ‘black dot’ ஐ நாம் கண்டு கொள்ளாமல் விட்டுவிடுவதற்கு ‘பழக்கம்’ மட்டுமே காரணம்.

## இதை நிரூபிக்கச் சின்னப் பரிசோதனை:

மூக்குக் கண்ணாடி போட்டிருப்பவர்கள் அதன் ஒரு லென்சின் மீது சிறு காகிதப் பட்டையை, நடு மையத்திலில்லாமல் ஓரமாக ஒட்டுங்கள் முதல் சில நாட்களுக்கு இது தொந்தரவாக இருக்கும். ஆனால் ஓரிரு வாரங்களுக்குப் பிறகு அது இருப்பதையே கவனிக்க மாட்டீர்கள்.

ஆனால் இரு கண்களிலுமுள்ள குருட்டுப் புள்ளிகள் பார்வை புலங்களின் வெவ்வேறு இடங்களில் அமைந்திருக்கின்றன. அதனால் இரண்டு கண்களினாலும் பார்க்கும்போது இந்தக் குறைபாடு சரிசெய்யப்பட்டு விடுகிறது. ஆகவே பிரச்சனையில்லை என்று முடிவுக்கு வந்துவிட முடியாது. 10 மீட்டர் தொலைவில் உள்ள ஒரு வீட்டை ஒரு கண்ணை மூடிக்கொண்டு பார்க்கும்போது, ஒரு ஜன்னல் இருப்பதற்குப் போதுமான ஒரு மீட்டர் குறுக்களவுள்ள இடம் நம் கண்ணுக்குத் தெரிவதில்லை இந்தக் குருட்டுப்புள்ளியால்! இது என்ன சின்ன விஷயம்தானே என்று நினைக்காதீர்கள், வானத்தைப் பார்க்கும்போது 120 பூரண சந்திரன்களுக்குச் சமானமான பரப்பு நம் பார்வைக்குத் தெரியாமல் போய்விடுகிறது! சந்தேகமேயில்லாமல் இது பெரிய விஷயம்தான்!

இதே பிரச்சனை நமது ஆவிக்குரிய கண்களிலும், கண்ணோட்டத்திலும் நடப்பதால்; ஒவ்வொருவரும் ஏதாவது ஒன்றைப் பார்க்காமல் விட்டுவிடுகிறார்கள்; அடுத்தவன்(ள்) அதைப் பார்த்துவிடுகிறான்(ள்). அதாவது எல்லோரும் விஷயம் தெரிந்தவர்கள்தான்; ஆனால் தெரிந்து கொண்ட விஷயங்கள்தான் வேறு வேறு! இன்னொரு விதத்தில் சொல்லப்போனால், எல்லோரும் விஷயம் தெரியாதவர்கள்தான்; ஆனால் தெரிந்து கொள்ளாத விஷயங்கள்தான் வேறு வேறு!

ஜன்னல் தெரியாவிட்டால் பரவாயில்லை, போனால் போகிறதென்று விட்டுவிடலாம். ஆனால் 120 பூரண நிலாக்களையே பார்க்க முடியாமல் போகுமானால்? அது கண்டிப்பாக கவனிக்கப்பட வேண்டிய விஷயம்!

இதனால்தான் ஒரே சத்தியத்தைப் பற்றி பல ஊழியக்காரர்கள் பல பல புத்தகங்கள் எழுத வேண்டியதாயிருக்கிறது, அல்லது பேச வேண்டியதாயிருக்கிறது. இதற்கு மேல் புரியாமல் போவதற்கு எதுவுமில்லை.

இன்னொரு விஷயம்; நான் எழுதும் புத்தகங்கள் கோர்வையாக (continuity) இல்லாமல்; துண்டு துண்டாக இருப்பதாகவும் சில அபிப்பிராயங்கள் வந்தது. எனக்கும் புரியவில்லை; ஆண்டவருடைய நடத்துதல் அப்படித்தான் இருக்கிறது. எல்லாத் தரப்பினருக்கும் புரிவதற்காக; ஆளுக்கொரு பகுதி பிரயோஜனமாக இருக்கும் என்பதற்காகவும்தான். ‘அனுதின தியானம்’ போல தினமும் ஒரு பகுதி என்று வாசிக்கவும் வசதியாகவும் இருக்கும்.

## சத்துரு அதைச் செய்தான்! (மத்.13:25,28)

கோதுமைக்குள்ளாக சத்துரு வந்து, களை விதைக்கும் காட்சியை மத்தேயு 13-ஆம் அதிகாரத்தில் பார்க்கிறீர்கள்: ஏதேன் தோட்டத்தில் களைகள் இல்லாதிருந்தது; சாத்தான்

ஏவாளைச் சந்திக்கும்வரை! அன்று ஏவாள் தன்னுடைய எல்லைக்குள்ளாகச் சாத்தான், களை விதைக்க அனுமதி கொடுத்ததன் விபரீதம் இன்றும் நின்றபாடில்லை, தொடர்கிறது.

சாத்தான் ஒரு தனி மனிதனின், அல்லது அவனது குடும்பத்தின் எல்லைகளில் களை விதைக்க வருவது; அவர்கள் நித்திரைபண்ணும் நேரங்களில்தான் நடக்கிறது. ***மத். 13:25 மனுஷர் நித்திரை பண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான்.***

இராத்திரியில், தூங்கும் நேரத்தில் என்று அர்த்தம் அல்ல, தேவனுடைய பிரசன்னத்தை விட்டு விலகியிருக்கும் நேரத்தில், அவரை விட்டுப் பின்மாற்ற ஜீவியம் செய்யும் நேரத்தில், ஆவியில் சோர்வுற்றிருக்கும் நேரத்தில், ஜெபக்குறைவு ஏற்படும் நேரத்தில், சத்துரு களையை விதைக்கிறான்.

எல்லோரும் நல்லவர்கள்தான்; சாத்தான் நுழையும் வரை! அவனை உள்ளே விட்டால் சும்மா இருக்க மாட்டான்; அவனால் சும்மா இருக்கவும் முடியாது.

காலையிலேயே எழும்பும் போது எழுந்திருக்க முடியாதது போல இருக்கும். தலை வலிக்கிற மாதிரி இருக்கும். சரிதான், அவன் களை விதையைப் போட்டு விட்டான் என்று நிச்சயித்துக் கொள்ளலாம். உடனடியாக ஜெபித்து அந்த விதை வேர் விட்டு விடாதபடிப் பிடுங்கி எறிந்து விட வேண்டும். இல்லாவிட்டால் ஒரு நாலைந்து மணி நேரத்திற்குள் அது வளர்ந்து பரவி விடும். சல்லி வேர்களை விட்டு விடும். அதைப் பிடுங்குவது மிகவும் கடினமானதாகிவிடும்.

பிறகு தலை சுற்றும், சரியாக யோசிக்க முடியாது, மூளையை யாரோ கசக்குவது போல இருக்கும்.

இதையெல்லாம் செய்வது ஒரு குட்டிச் சாத்தானின் வேலைதான் என்று தெரிந்திருந்தாலும்; அவனை வெளியே அனுப்ப மனசு வராது.

நம்மை ஜெபிக்க விடாதபடி ஜெப அறை (Prayer Room) கதவை முன்னதாகவே போய் பூட்டி போட்டு விடுவான். பிறகென்ன நம் எல்லையெங்கும் பாதாளத்தின் வாசல் மேற்கொள்ள, அன்றைய தினத்தை சாத்தானுக்கு விட்டு கொடுக்க வேண்டியக் கட்டாய நிலைக்குத் தள்ளப்படுவோம். அடுத்த நாள் புதிய கிருபையைப் பெற்றுக் கொள்ளும்வரை, இந்தப் போராட்டத்தை நீடிக்க விட வேண்டியதாயிருக்கும். ஒரு சிலருடைய அடுத்த நாளிலும் சாத்தான் தன்னுடைய தொடர் ஓட்டத்தை நடத்துவான்.

தேவன் களைகளை அனுமதித்திருப்பதன் காரணத்தை மத்.13:29-ல் பார்க்கிறோம். பயிர்களின் வேர்களுடன் களைகளின் வேர்களும் பின்னிப் பிணைந்து விடுவதால்; பிடுங்கும் போது பயிர்களுக்கும் பிரச்சனை. அதாவது பிடுங்கி எறிவது அவருடைய சித்தமாக இருந்தாலும்; பயிர்களின் நலன் கருதித்தான் களைகளையும் அனுமதிக்கிறார். ***மத். 13:29 … வேண்டாம், களைகளைப் பிடுங்கும் போது நீங்கள் கோதுமையையுங்கூட வேரோடே பிடுங்காதபடிக்கு, இரண்டையும் அறுப்பு மட்டும் வளர விடுங்கள்.***

## *ஏன் ? (வளர்ச்சியடையாத விசுவாசிகளின் இருதயத்தில் வந்துவிழும் விதை)*

'என்னுடைய நண்பர்கள் (Friends) நல்லவர்கள், என்னை விட நல்லவர்கள். ஆனால் அவர்கள் இயேசுவை அறியாமல் விக்கிரக வழிபாட்டில் இருக்கிறார்கள். அவர்கள் பரலோகம் வர முடியாதா? அது எப்படி நியாயமாகும்?'

பதில் பல கோணங்களில் (angle-ல்) இருந்து தர முடியும்; பரிசுத்தாவியானவர் உதவி செய்வார். இயேசுவை அறியாத புறஜாதியார் நல்லவர்கள்தான். ***ரோமர் 2:14 அன்றியும் நியாயப்பிரமாணமில்லாத புறஜாதிகள் சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறபோது, நியாயப்பிரமாணமில்லாத அவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கிறார்கள். ரோமர் 2:15 அவர்களுடைய மனச்***

***சாட்சியுங்கூடச் சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும், நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள்.***

ஆனால் எல்லா விஷயங்களிலும் அல்ல. அவர்களுடைய கூடுதல் (Plus) நற்பண்புகளை நம் கண்களுக்கு முன்பாகக் கொண்டு வருவதும், குறைகளை (Minus) இரகசியமாக்கி விடுவதும் சாத்தானுடைய புத்திசாலித்தனம், தந்திரம் என்றும் சொல்லலாம்.

தேவனை அறியாதவர்கள் நல்லவர்களாக இருந்தாலும், அவர்கள் ஆராதிக்கும் தேவன் நல்லவனில்லையே! அவன் சாத்தான் (பிசாசு, பேய், பூதகணங்கள் என்று உலகத்தாரால் அழைக்கப்படுபவன்). அவன் நீதியில்லாத தேவன்! பிரதான தேவ தூதனாக இருந்து, பெருமையினால் தேவனை விடப் பெரியவனாக முயற்சி செய்த போது, தேவனால் தள்ளி விடப்பட்டவன். அவன் விழுந்த வேகத்தில் பாதாளம் உருவானது, தேவனுடைய கோபத்தினால் அதில் அக்கினி பற்றிக் கொண்டது! (ஏசாயா. 14:13,14)

அந்த கெட்டுப்போன, கெட்ட தேவனால் தன்னை ஆராதிக்கும் ஜனங்களைப் பரலோகத்துக்கு நிச்சயமாகக் கொண்டுபோக முடியாது. ஏனென்றால் பரலோகத்துக்கு வாசல் இயேசு மாத்திரமே! (யோவான். 10:9,18:16) சாத்தான் வாசல் அல்ல. ஆனால் “நானும் வாசல்தான்” என்று பிரசங்கம் செய்து (சற்று உற்றுப் பார்க்கவும்) அவன் மக்களை ஏமாற்றி வருகிறான்.

அதனால் ‘இயேசு’ என்ற வாசல் வழியாக மாத்திரம்தான் பரலோகத்துக்குள் பிரவேசிக்க முடியும். புற மதத்தைச் சார்ந்தவர்கள் நல்லவர்களாக இருந்தாலும்; அவர்கள் தெரிவு செய்திருக்கும் வாசல் (சாத்தான்) தவறானதாக இருப்பதால் பரலோகத்துக்குள் போக முடியாது. சுவருக்குள்ளாக நுழைந்தும் போக முடியாது. தேவனை அறியாத ஜனங்கள் பல விஷயங்களில் நல்லவர்களாக இருப்பதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அவர்களுடைய சிருஷ்டிகர் நல்லவர்! அவர்தான் இயேசு!! இயேசுவால் படைக்கப்பட்ட யாவரும் அவருடைய சாயலைத் தங்களையறியாமலாவது பிரதிபலிக்கத்தான் செய்வார்கள்; வேறு வழியில்லை, அது அவர்களுடைய நிர்ப்பந்தம்.

அப்படியானால் தேவ ஜனங்கள் (இரட்சிக்கப்பட்டவர்கள்) கெட்டவர்களாக இருந்தாலும் பரலோகம் போக முடியுமா? அதெப்படி நியாயம்? இது அடுத்த கேள்வி விதை. தேவன் இயேசுவினுடைய பிள்ளைகள் நல்லவர்களாக இல்லாவிட்டாலும், பாவத்தில் வாழ்ந்துகொண்டிருந்தாலும், அவர்களுடைய வாசல் ‘இயேசு’ வாக இருப்பதால், அவர்கள் சரியான வாசலை தெரிவு செய்திருப்பதால் பரலோகத்துக்குப் போக முடியும். ஆனால் ... பாவத்தோடு அல்ல! என்பது ஆணித்தரமான வேத சத்தியம். (மத்தேயு. 7:21)

கண்டிப்பாகத் தன்னை ஆராதிக்கும் ஜனங்களைப் பரிசுத்தப்படுத்தி பரலோகத்தில் சேர்க்க இயேசு வல்லவராயிருக்கிறார். அவரால் ஆகாத காரியம் ஒன்றும் கிடையாது. (லூக்கா. 1:37) பரிசுத்தப்படுத்துவதற்காகத்தான் பரிசுத்தாவியானவரை அனுப்பினார். உச்சக்கட்டப் பாவங்களைக் கூடக் கழுவி சுத்திகரிக்கும் ஆற்றல் உள்ளது இயேசுவின் இரத்தம்! இன்னும் தீர்க்கமாகச் சொல்லப் போனால், இயேசுவின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட முடியாத ஒரு பாவத்தை எந்த மனிதனாலும் செய்ய முடியாது! எவ்வளவு முயற்சித்தாலும் சாத்தானால் செய்ய வைக்க முடியாது. (1 யோவான். 1:7)

ஆனால் இந்த நம்பிக்கை, அனுகூலங்கள் புறஜாதியாருக்கு இல்லையே! அவர்களுடைய தேவனான சாத்தான் பாதாளத்துக்குப் போகும் வாசலாயிருக்கிறான். அவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாவிட்டால், அவன் காட்டும் பாதையில்தான் போயாக வேண்டும், வேறு வழியில்லை. (மத். 7:13)

பாதாளத்தின் வாசலுக்குப் போகும் பாதையில் நடந்து கொண்டிருக்கும் அவர்களின் கால்களைப் பரலோக வாசலுக்குத் திசை திருப்பத்தான் இக்காலங்களில் சுவிசேஷ அறிவிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. (மத். 24:14) அகில உலகமெங்குள்ள சகல தேசங்களிலும் சுமார் 1,90,900 கடைசி கால அறுவடை வயல்களில் (Last Harvest Field Ministries) வேலை

நடந்து கொண்டிருக்கிறது. (அதாவது மிக முக்கியமான சுவிசேஷ ஊழியங்களின் எண்ணிக்கை இது. சிறு ஊழியங்கள் கணக்கில் சேர்க்கப்படவில்லை.) சாத்தானால் மதிமயக்கப்பட்டு, தேவனில்லாத ஜனங்களின் நற்கிரியைகளைப் பார்த்து குழம்பும் மக்களுக்கும், இயேசுவை ஏற்றுக் கொண்ட பிறகும் பாவத்தில் வாழும் மக்களுக்கும் இந்த 'வனாந்திர குரல்' எச்சரிப்பாக வருகிறது. (யோவான். 8:32)

## பேசாதிருங்கள்! (உங்கள் பேச்சு நச்சு விதைகளாகும் அபாயம்):

***ரோமர் 14:4 மற்றொருவனுடைய வேலைக்காரனைக் குற்றவாளியாகத் தீர்க்கிறதற்கு நீ யார்? அவன் நின்றாலும் விழுந்தாலும் அவனுடைய எஜமானுக்கே அவன் உத்தரவாதி; அவன் நிலை நிறுத்தப்படுவான்; தேவன் அவனை நிலைநிறுத்த வல்லவராயிருக்கிறாரே.*** தேவ ஜனங்களுக்கு விரோதமாக, முக்கியமாக தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு விரோதமாக பேசிப் பேசியே, அதைப் பொழுதுபோக்காக, அவலாக சவைத்துக் கொண்டிருப்பவர்கள் ஏராளம் ஏராளம். இந்தத் தவறை ஒரு 'ஆவிக்குரிய நாகரீகமாக' நினைத்துப் பெருமை வேறு பட்டுக்கொள்கிறார்கள். ஊழியக்காரர்கள் தேவனுடைய வேலைக்காரர்கள். அவர்கள் நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கும் அளவுக்கு மலிவானவர்கள் (Cheap) இல்லை. நம் தேவன் எவ்வளவு பெரியவர் என்பதைத் தெரிந்துக் கொண்டால், அவருடைய வேலைக்காரர்களின் மகத்துவமும் தெரிய வரும்.

நம்முடைய அண்டவெளியில் 100 முதல் 10000 மில்லியன் நட்சத்திரங்கள் இணைந்து ஒரு கேலக்சியாக (Galaxy) உருவாகின்றன. இப்படி 20 (Galaxy) கேலக்சிகள் ஒன்று சேர்ந்தால், அது ஒரு கிளஸ்டர் (Cluster) ஆகும். 1930 வரை வானத்தில் 40 செக்ஸ்டிலியன் (Sextillion) (40க்குப் பிறகு 22 பூஜ்ஜியங்கள் போட வேண்டும்) நட்சத்திரங்கள் இருப்பதாகக் கணக்கு போடப்பட்டிருந்தது. அதன்பிறகு 'நட்சத்திரங்களைக் கணக்கிடவே முடியாது' என்று தெரிவித்து விட்டனர். (எரே. 33:22)

நம் கண்களுக்குப் புலப்படும் சமீபத்திய நட்சத்திரம் ஆல்பா செஞ்சுரி. (Alpha Centuri). ஒளியின் வேகத்தில் பயணம் செய்தால் இந்த நட்சத்திரத்தை அடைய 4 1/2 ஆண்டுகள் ஆகும்! (நம் சூரியனை 1 1/2 நிமிடத்தில் அடையலாம்). தொலை நோக்கியினால் பார்க்கக் கூடிய நட்சத்திரக் கூட்டங்கள் 6,500 மில்லியன் ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் உள்ளது!

ஓரியன் பெல்ட்டில் (Orion Belt) அமைந்துள்ள பெட்டெல்கீஸ் (Betelgeuse) என்ற நட்சத்திரத்தின் விட்டம் 500 மில்லியன் கி.மீ. இந்த நட்சத்திரத்தின் உட்பகுதி வெறும் கூடாக இருக்குமானால்; பூமி அதனுள்ளேயே சூரியனைத் தன்னுடைய வழக்கமான பாதையில் சுற்றிவர முடியும்! (பூமியின் சுற்றுவட்டப் பாதை 300 மில்லியன் கி.மீ. தூரம் மாத்திரமே)

நம் தேவன் எவ்வளவு பெரியவர் என்பதை நிரூபிக்க நான் எடுத்திருக்கும் இந்த முயற்சி "புறக்கணிக்கத் தக்க அளவில்" மிகக்குறைவுள்ளதாகத்தான் இருக்கும் என்று யோசிக்கிறேன். அப்படிப்பட்டவருடைய வேலைக்காரர்களை நாம் எவ்வளவு குறைவாக மதிப்பீடு செய்து விட்டோம்! (ஏசாயா. 54:17) தேவனுடைய கோபத் தீ பட்சிக்க ஆரம்பிக்கும்முன்னதாக மன்னிப்புக் கேட்டு மனம் திரும்பி விடுவது நல்லது.

இவ்வளவு பெரிய தேவன் தன் வேலைக்காரர்களிடம் சின்ன வேலையையா கொடுத்துச் செய்யச் சொல்வார்? பாதாள, நரக வல்லமைகளில் இருந்து உலக மக்களைத் தப்புவிக்கும் ஆற்றல் பொருந்திய தேவனுடைய வசனங்களை அவர்கள் சுமந்து செல்கிறார்கள். அது சாதாரணப்பட்ட வேலையல்ல. சாத்தான் தன் முழுப்பலத்துடன் எதிர்த்து வருவான். ஒரு கையால் பட்டயம் எடுத்து அவனுடன் போர் செய்து கொண்டே, அடுத்த கையால் செங்கல் எடுத்துக் கொடுக்கும் அந்த மகத்துவமான தேவ ஊழியக்காரர்களுக்கு உதவி செய்யாவிட்டால் கூட பரவாயில்லை, உபத்திரம் செய்யாமலாவது இருக்கக் கூடாதா?

அவர்களிடம் ஆயிரம் குறைகள் இருக்கலாம், இல்லையென்று சொல்லவில்லை. அதற்காக அவர்களுடைய அப்பா அவர்களை உங்கள் கையில் விட்டுக் கொடுத்துவிடுவார் என்று மட்டும் கனவிலும் நினைக்க வேண்டாம். (யாக். 4:12) (2 பேதுரு. 2:11)

நம்முடைய பிள்ளைகள் ஒரு தவறு செய்து விட்டால் (அது மரணத்துக்கு ஏதுவான தவறாக இருந்தால் கூட) அவனுக்காகத் தேவனிடம் போராடி ஜெபித்து, அவனைக் கண்டித்து எப்படியாவது அவனை மீட்டுவிடத்தான் வழி பார்ப்போமே தவிர, அவனை ஒழித்தா கட்டுவோம்? அநீதியான உலக மக்களான நாம் நம் பிள்ளைகள் மீது இவ்வளவு அன்பு பாராட்டும்போது, நீதியின் தேவனாகிய நம் பரம பிதா தன்னுடைய பிள்ளைகள் மீது, தன்னுடைய வேலைக்காரர்கள் மீது வைராக்கியம் பாராட்டுவதும், அவர்களை மீட்டு இரட்சிப்பதும் அதிக நிச்சயமல்லவா? (நீதி. 24:16)

அப்படியானால் ஊழியக்காரர்களின் தவறுகளை கண்டும் காணாதது போல போய்க்கொண்டே இருக்க வேண்டுமா? கண்டிக்க வேண்டாமா? அப்போஸ்தலர் உபதேசத்தில் இதற்கான ஆலோசனைகள் இருக்கின்றன. (1 கொரி. 5:5,6,7) என்றாலும் யாரும் அதைச் சரியாக அப்பியாசம் (Follow) பண்ணுவதில்லை. ஊழியக்காரர்களின் கண்களில் இருக்கிற துரும்பை எடுக்கிறேன் பேர்வழி என்று புறப்பட்டு, தங்கள் கண்ணில் இருந்த உத்திரத்தால் அவர்களை இடித்து தள்ளிவிட்டு அசடு வழிந்தவர்களை நான் பார்த்தபோது, இது தேவைதானா என்று யோசித்தேன். (மத். 7:4)

சுட்டும் விரலை நீட்டும்போது, மற்ற நான்கு விரல்களையும் நம் இருதயம் இருக்கும் திசையில் Direction-ல் மடங்காதபடி யாராலுமே நீட்ட முடியாது. அப்படி முயற்சித்தால் விரல்கள் தானாகவே விரிந்து விடும்!

## யோனாவும் ஆமணக்கு விதையும்: (Magic Seeds)

இது "விதைப்பும் அறுப்பும்" நியதியின் மேல் ஒரு தாக்குதலை உண்டாக்குகிறது. இயற்கைக்கு மாறான காரியங்களைச் சில நேரங்களில் தேவன் அனுமதிக்கிறார்; நாம் சில விஷயங்களை விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காக. ஆனால் தொடர்ச்சியாக இப்படிப்பட்ட அதிசயங்களை எதிர்பார்ப்பது பாதுகாப்பானதல்ல.

தொடுவானத்திற்குக் கீழே, சூரிய அஸ்தமன நேரத்தில், அது கடலினுள் மூழ்கும்போது ஒரு அற்புதமான பச்சைக் கதிரை வீசுகிறது. ஆனால் மேகம் எதுவுமில்லாத வானத்தில் சூரியன் சிந்தும் இந்தக் கடைசிக் கதிர்கள் அபூர்வமானவை. இயற்கை ரசிகர்களுக்கு இது ஒரு வாய்ப்பு (chance!)

ஒரு கணக்கீட்டின் படி லட்சத்தில் ஒருவர்தான் இதைப் பார்த்திருக்கின்றனர். அப்படியே பார்த்தாலும் இது அபூர்வமானது என்று தெரியாமல் தவற விட்டவர்களும் இருக்கின்றார்கள். நம் பூமியின் வெளி மண்டலம் (air surface) ஒரு பிரமாண்டமான முப்பட்டகம் போல் செயல்படுகிறது. இதனூடாகத்தான் நாம் சூரியனைப் பார்க்கிறோம். மேற்புறம் நீலம்-பச்சை விளிம்புடனும், அடிப்பகுதி மஞ்சள்-சிவப்பு விளிம்புடனும் காணப்படுகிறது. அஸ்தமன நேரத்தில் சூரியனின் பெரும்பகுதி அடிவானத்திற்குக் கீழாகப் போய்விடுவதால், மேற்புறத்திலுள்ள நீலம்-பச்சை விளிம்பைப் பார்க்க முடிகிறது.

வானம் நீலக்கதிர்களைச் சிதறடித்து விடுவதால் மீதமிருக்கும் பச்சைக் கதிரைக் காண முடிகிறது. இன்னும் சில நேரங்களில் தெளிவில்லாத வான மண்டலம் நீலம், பச்சை இரண்டு கதிர்களையுமே சிதறடித்து விடுவதால், பச்சைக் கதிரையும் பார்க்க முடியாமல் போய் விடுகிறது.

தொடுவானம் மேடுபள்ளங்களோ, காடுகளோ, கட்டடங்களோ இல்லாமல் நேர்க்கோடாக இருந்தால் பச்சைக் கதிருக்கான அனுகூலங்கள் அதிகம். இப்படிப்பட்ட சூழ்நிலை கடலில் இருக்கிறபடியால் மாலுமிகளுக்கு இந்த வாய்ப்புகள் சற்று அதிகம் கிடைக்கிறது. அடி வானத்தில் ஒளி கசியும் தன்மை சற்று அதிகமாக இருந்தாலும் வாய்ப்பு இருக்கிறது. 100 மடங்கு பெரிதான உருப்பெருக்கி தொலை நோக்கி கொஞ்சம் உதவும்.

ஒரு தினசரியில் இச்செய்தியை வாசித்தது ஞாபகம் வருகிறது. ஜூல்ஸ்வெர்னின் (Jules Vern) கதாநாயகி (இளவரசி) இந்த பச்சைக் கதிரைப் பார்ப்பதற்காக உலகம் முழுவதும் சுற்றினாளாம். என்றாலும் காணமுடியாது போனாளாம்!

சாதாரணமாக இந்தப் பச்சைக் கதிர்த் தோற்றம் இரண்டே வினாடிக்கே நீடிக்கிறது. மிகச் சாதகமான ஒரு சூழ்நிலையில் 5 நிமிடங்கள் நீடித்து அற்புதம் நடத்தியது இந்தப் பச்சைக் கதிர்கள். (Green Rays)

யோனாவின் தலைக்கு மேலாக ஓர் ராத்திரியில் ஒரு ஆமணக்கு விதையில் இருந்து ஒரு செடி தோன்றி ஓங்கி வளர்ந்து படருகிறது! (தேவன் அற்புதம் செய்யும் நேரங்களில் இயற்கை விதிகள் செயல்படாமல் கை கட்டி ஓரமாக நின்று கொள்கிறது.) ஓர் உண்மையை யோனாவுக்குக் காலம் கடத்தாமல் உடனடியாகப் புரிய வைக்கவேண்டிய அவசரத்தில் இருந்தார் தேவன். ஆமணக்குச் செடி தானாக வளரும்வரைக் காத்திருக்க முடியாத சூழ்நிலை. அதனால் ஒரு அற்புதத்தின் சூழ்நிலையில் தன்னுடைய அன்பை, தன்னுடைய இருதயத்தின் பரிதவிப்பை அவனுக்கு விளக்குகிறார். அதற்குப் பிறகு எதுவும் எழுதப்படவில்லையென்றாலும், யோனா புரிந்து கொண்டிருப்பார் என்று நம்பலாம்.

விதைப்பின் விஷயத்தில் கூட ஆரம்பக் கட்டத்தில் தேவன் ஓர் அற்புதத்தை செய்யலாம். அப்படி வரும் திடீர் ஆசீர்வாதம் நம்முடைய படிப்பினைக்காக மாத்திரமே! இது தொடர்ச்சியாக வராது. அடுத்த கட்டத்திலிருந்து விதைத்துத்தான் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இன்னொரு காரியத்தைக் கவனித்திருப்பீர்கள். இந்த அற்புத விளைச்சல் நீடித்திருப்பதுமில்லை. ஒரே நாளில், ஒரே பூச்சி, ஒரேயொரு படையெடுப்பில் அரித்துப் போடப்பட்டது! தேவன் அற்புதத்தை அனுமதித்ததன் நோக்கம் ஒன்று, அதை யோனா புரிந்து கொண்டது வேறு மாதிரியாக இருந்தது.

## *"அந்த ஆமணக்கின் மேல் யோனா சந்தோஷப்பட்டான்!" இங்கேதான் வந்தது பிரச்சனை!*

***1 கொரி. 15:9 இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத் தக்கவர்களாய் இருப்போம்.***

இப்படித்தான் பல வேளைகளில் தேவ ஜனங்களின் எல்லைகளிலும் நடந்து விடுகிறது. தேவனுடைய நோக்கத்தைப் புறக்கணித்து விட்டு, சந்தோஷத்தை மட்டும் கணக்கில் எடுக்கும் போது அந்த ஆசீர்வாதத்திற்கு அழிவு தீவிரிக்கிறது.

தேவன் தன்னுடையவர்களை ஆசீர்வதிப்பதன் ஒரே பிரதான நோக்கம்; அதைத் தன்னுடைய இராஜ்யப்பணிகளுக்கு செலவிடுவதற்காக மாத்திரமே. வலப்புறமோ, இடப்புறமோ அதை மாற்ற (Flexible) ஆக்க வழியே இல்லை.

நாம் அனுபவிக்கக் கூடாது என்றல்ல. ஆனால் அது அடுத்த அல்லது அதற்கடுத்த கட்டம்தான்! நாம் வாழ்ந்து சுகித்திருந்தால்தான் ஆலயம் கட்டச் செங்கல் சுமக்க முடியும், சாந்து குழைக்கவும் முடியும். சாப்பிடாவிட்டால் மயக்கம் வரும், தூக்கு நூலைக் கூட கையில் பிடிக்கப் பலமிருக்காது.

அடுத்து இன்னும் ஒரு காரியமும் இருக்கிறது. இப்படிப்பட்ட திடீர் ஆசீர்வாதங்கள் வந்து, அது இல்லாமல் போகும்போது, அது எரிச்சலுக்கு வித்திட்டு, அதைத் தூண்டி வளர்க்கிறது. அதனால் வசனத்திற்குக் கீழ்ப்படிந்து விடுவதே பாதுகாப்பானது. (யோனா. 4:6-10) ஆமணக்குச் செடியின் நிமித்தம் சந்தோஷம் வந்தது தான், ஆனால் கொஞ்ச நேரத்துக்குள்ளாகவே அந்த சந்தோஷம் எரிச்சலாகவும், பரிதவிப்பாகவும் மாறிப்போனது.

திடீர் ஆசீர்வாதம் சந்தோஷமானது தான். ஆனால் அந்த சந்தோஷத்துக்கு எதிராகப் போரிட எரிச்சல், பரிதவிப்பு என்ற இரண்டு எதிரிகள் கடந்து வருவார்கள்.

## *சிலர் விசுவாசிக்காமல் போனால் என்ன ? (ரோமர். 3:3)*

***ரோமர் 3:3 சிலர் விசுவாசியாமற்போனாலுமென்ன? அவர்களுடைய அவிசுவாசம் தேவனுடைய உண்மையை அவமாக்குமோ?*** அதனால் பரலோகம் ஸ்தம்பிக்கப்

போவதில்லை. எவரெஸ்ட் சிகரத்தின் உச்சத்தில் இருக்கும் பனிப்பாறைகளின் அளவீடுகளைச் சொன்னால் நீ நம்பவில்லை, அதனால் அங்கே பனிப்பாறைகளே இல்லாமல் போய்விடுமா? அது அங்கே இருக்கவே இருக்கத்தான் செய்யும். உருவமில்லாத தேவனை நம்ப மாட்டேன், கண்ணால் பார்த்தால்தான் ஈடுபாடு (Concentration) வருகிறது. அதனால் ஒரு உருவத்தை வைத்து வணங்கினால் பரவாயில்லை என்று வாதாடினால் யாருக்கு நஷ்டம்? உங்களுக்குத் தான். (அதே நேரத்தில் பிசாசுக்கு லாபம்). காற்றைக் கண்ணால் பார்க்க முடியாவிட்டாலும், காற்று வீசுகிறது என்பதை ஒத்துக் கொள்கிறோம். உஷ்ணத்தையும் இவ்விதமாகவே ஒத்துக் கொள்கிறோம். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக் கொள்ளும் விஷயத்தில் மட்டும் பாரபட்சம் ஏன்? விசுவாசிக்க முடியாததினால்தான்.

முதலாவதாக தேவனை நாம் நம் கண்களால் காணமுடியாது, அப்படிப் பார்க்க வேண்டிய அவசியமும் இல்லை என்பதை விளங்க வைக்க நான் ஒரு கிறிஸ்தவ தொலைக்காட்சி (Christian TV Programme) நிகழ்ச்சியில் பார்த்த ஒரு கதையைக் கொண்டு வருகிறேன்.

ஒரே ஓர் ஊரிலே... ஒரு கூட்ட ஜனங்கள் வாழ்ந்து வந்தார்கள். (உதாரணத்திற்கு ஒரு 213 பேர்கள் என்று வைத்துக் கொள்வோம்) அந்த ஊரில் உள்ள 213 பேருக்குமே இரண்டு கண்களும் தெரியாது! இரண்டு கண்களுமே நன்றாக கண்கள் தெரிகிற ஒரு வெளி ஆள் இந்த ஊருக்குள் தெரியாத்தனமாக வந்து வகையாக மாட்டிக் கொள்கிறான். கேள்விக்கு மேல் கேள்வி கேட்டு ஆளுக்கு ஆள் அவனை பிய்த்து எடுத்து விடுகின்றனர்.

மாட்டிக்கொண்ட Mr. X. சொன்ன எதையுமே அவர்கள் நம்பவில்லை, அவர்கள்தான் உலகத்தையே பார்த்திராத குருடர்களாச்சே. "வானம் என்பது கையை நீட்டித் தொட்டு விடும் உயரத்தில்தான் இருக்கிறது என்றும் தொட்டால் அது பஞ்சு போல மென்மையாக இருக்கும்" என்றும் சொன்னார்கள். மனிதன் எப்படி இருப்பான் என்று Mr. X. கேட்டதற்கு, அவர்கள் தந்த விளக்கம். ஒரு மரவட்டையை (ஒரு வகையான பூச்சி, தரையில் ஊர்ந்து செல்லும்) ஞாபகப்படுத்தியது. தலையை கிறுகிறுக்க வைத்து விட்டது!

ஆனால் யாரும் அவனைக் கண்களால் பார்க்க முடியாவிட்டாலும், அவனை உணர்ந்து, புரிந்து, அறிந்து கொண்டார்கள்! அது எப்படி? அவனுடைய வார்த்தைகளால் மாத்திரமே! அந்த ஊரின் தலைவனின் மகள் அவனுடைய வார்த்தைகளால் கவரப்பட்டு அவனை விரும்பித் திருமணமும் செய்து கொள்கிறாள்!

அவளை அழைத்துக் கொண்டு தன் சொந்த தேசத்துக்கு வருகிறான். 10 வருடங்கள் கடந்தோடுகிறது, பிள்ளைகள் பிறக்கிறார்கள், வளர்கிறார்கள், அவளோ கண் பரிசோதனைக்குக் கூட மருத்துவமனைக்கு வரமாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கிறாள். அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் எவ்வளவோ ஆலோசனைகள் கொடுத்தும் அவள் ஏற்கவில்லை. தீர்க்கமாக அவள் சொன்ன ஒரே பதில்: (கொஞ்சம் கவனமாக வாசியுங்கள் அப்போதுதான் புரியும்.) "என் கணவரை இதுவரை நான் பார்த்ததில்லை, என்றாலும் எனக்கு அவரை நன்றாகத் தெரியும்!" சுற்றியிருந்தவர்கள் ஸ்தம்பித்துப் போனார்கள். ***யோவான் 20:29 அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்.***

## *இந்தப் பார்வையைத்தான் தன்னுடைய விஷயத்தில் தேவன் எதிர்பார்க்கிறார்.*

அப்படியே தேவன் தன்னைப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறவன் பார்த்துக் கொள்ளட்டும் என்று எதிராக தோன்றினாலும் எப்படிப் பார்க்கமுடியும். நம் கண்கள் என்ன அவ்வளவு பெரியதா? அவர் அண்ட வெளியை விட பெரிய உருவமுடையவராக அல்லவா இருப்பார்? அதனால்தான் அவர் தன்னை ஆவியாக (உருவமில்லாதவராக) வெளிப்படுத்துகிறார். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்போது, அவரை நம் ஆவியில் நாம் காண முடியும். ஓர் எறும்பு நம்மைப் பார்க்க வேண்டும் என்று விரும்பினால் அதனால் முடியுமா? நம் உடம்பின்

மிகச் சிறிய பகுதியைத்தான் அது பார்க்கும், அதுவும் அதற்கு என்னவென்று புரியாது. எறும்பு நம்மை முழுமையாகப் பார்க்க வேண்டுமானால், எறும்பு நம்மைப் போல பெரியதாக மாற வேண்டும் அல்லது நாம் எறும்பாக மாற வேண்டும். இயேசு அப்படியாகத்தான் நமக்காக இந்த உலகத்திற்கு வந்தார். (யோவான். 1:18) அதுமட்டுமல்ல, நாமும் அவரைப் போல மாற வேண்டும் என்பதற்காக பரிசுத்தாவியானவரையும் நமக்காக அனுப்பினார். அவருடைய தயவினால் நாம் இயேசுவின் சாயலாக நாள்தோறும் மறுரூபமடைந்து வருகிறோம். அவர் உலகத்திற்கு வந்திருந்த காலத்தில் அவரைக் கண்டவர்கள் இயேசுவின் உண்மையான உருவத்தைப் பார்க்கவில்லை. அவரின் மனித சாயலைத்தான் பார்த்தார்கள்.

இக்காலங்களில் பரிசுத்தாவியானவர் தேவனை நம் ஆவியில் தரிசிக்க அனுகூலங்களை உருவாக்கித் தந்திருக்கிறார். வீண் பிடிவாதத்தால் பரலோகப் பாக்கியங்களை இழந்து போகாதபடி எச்சரிக்கையாயிருப்போம். (2 பேதுரு. 2:10) (யூதா. 1:8)

அவர்களுடைய அவிசுவாசம் தேவனுடைய உண்மையை அவமாக்குமோ? ***(ரோமர். 3:3)*** நடக்காது, தேவனுடைய மகத்துவங்களைத் தூஷிக்க, அதை இல்லை என்று சொல்ல அவிசுவாசிகளுக்கு அதிகாரம் கிடையாது. தேவனுடைய மகிமையை அழித்துப் போடும் ஆற்றல் "அவிசுவாசத்திற்கும்" கிடையாது.

"தேவன் என்று ஒருவர் இல்லை, இயேசு கிறிஸ்து தேவன் இல்லை, அவர் சரித்திரப்பூர்வமானவர் இல்லை, அவர் சாதாரண மனிதர்தான், அவர் ஒரு மகான் அவ்வளவுதான், அவர் சிலுவையில் சாகவில்லை, மயக்கமாக இருந்தார், சிலுவையில் இறந்தார் ஆனால் உயிரோடு எழும்பவில்லை, அவருடைய கல்லறை காஷ்மீரில் இருக்கிறது, அவர் திருமணம் ஆனவர்" சொல்லி முடியாத அளவில் தேவ தூஷணங்கள்! (2 பேதுரு. 2:10)

ஏன் இப்படி? தேவனுடைய உண்மையைப் பொய்யாக்க முயற்சிக்கும் சாத்தானின் அணுகுமுறைகள். அவனுடைய பொறாமையினால் இது நடக்கிறது! (பிர. 4:4). இந்த அறிக்கைகளை மக்கள் மனதிலும், தேவ ஜனங்களுடைய இருதயத்திலும் கொண்டு வந்து விதைக்கிறான். எந்த விதையாக இருந்தாலும், அது விதைக்கப்பட்டபின் தன் வேலையைக் காட்டத்தான் செய்யும்; அதாவது முளைக்க ஆரம்பிக்கும்.

## இப்படியாக இந்த அரளி விதைகள் ஓங்கி வளருகின்றன, பரவுகின்றன.

தெய்வத்துவமல்லாத உலகக் காரியங்களையே தூஷிக்கத் தயங்காத உலக ஜனங்கள், பரமகாரியங்களை விட்டா வைப்பார்கள்? மாயையிலும் இலேசான மனிதன் சந்திரனில் இறங்கியதையே ஒத்துக் கொள்ளாத கூட்டத்தார், அண்டசராசரங்களைப் படைத்த தேவாதி தேவன் பூமியில் இறங்கியதை எப்படி ஒத்துக் கொள்வார்கள்?

**"America had never put a man on the moon"** என்று குரலெழுப்பி "நாசா"வுக்கு **(NASA)** எதிராகப் புறப்பட்டிருக்கும் இந்தக் கூட்டத்தாரிடம் மாட்டிக் கொள்ளாமல் இருப்பதே நல்லது என்று தோன்றுகிறது. மனிதன் சந்திரனில் இறங்கியது உண்மையா? பொய்யா? என்பது இங்கே இப்போது பிரச்சனையல்ல. இதை நம்ப ஆரம்பித்தால், தேவன் இயேசு இந்த உலகத்தில் இறங்கியது உண்மையா? என்ற சந்தேகத் தீயும் இருதயத்தில் பற்றிப் பிடித்துக் கொள்ளும் அபாயம் நேரிடும். சாத்தான் இப்படித்தான் காய்களை நகர்த்துவான், கடைசியில் தடை **(Check)** வைத்து விடுவான். நாம் எச்சரிக்கையாக இருக்காவிட்டால் சாத்தானின் கண்ணிகளில் நம் கால்கள் மாட்டிக் கொள்வது நிச்சயம்.

சந்திரனில் மனிதன் இறங்கியது பற்றி **(Moon landing)** 40 வருஷங்களுக்குப் பிறகு ஏன் இந்த சந்தேகம் வருகிறது? என்று கேட்டால்; "யாரும் இதுவரை இதைப்பற்றி மிகச்சரியான ஆராய்ச்சியை மேற்கொள்ளவில்லை" என்கிற பதில் வருகிறது. இயேசு கிறிஸ்து சரித்திரப் பூர்வமானவரா? என்ற கேள்வி கூட 2000 வருஷங்களைக் கடந்து தான் வந்து

கொண்டிருக்கிறது. காணக்கூடிய உலக காரியங்களிலேயே இவ்வளவாக சந்தேகங்கள் எழும்பும் போது; காணக்கூடாத நித்தியத்தின் காரியங்களில் உலக மக்களுக்கு சந்தேகங்கள் எழும்புவதில் ஆச்சரியம் இல்லைதான். அதனால் என்ன, இவர்களுடைய சந்தேகங்கள் தெய்வத்துவ காரியங்களில் பாதிப்பை ஏற்படுத்தப் போவதில்லை.

தேவனுடைய மகத்துவங்களைத் தூஷிக்கும் “டாவின்சி கோட்” (The Da Vinci Code) என்ற சினிமா, புதிய ஏற்பாடு ஒரு கற்பனை (False Testimony) என்கிறதான இவர்களுடைய கணக்கீடு, பெரும்பாலான கிறிஸ்தவர்களின் வீடுகளில் மாட்டப்பட்டிருக்கும் “கடைசி இராப்போஜனம்” (Last Supper) ஓவியம் பற்றியதான சர்ச்சைகள், இப்படியாக இந்த தூஷணப் பட்டியல் நீளுகிறது. இந்த விசுவாச துரோகங்கள் அந்திக்கிறிஸ்துவின் இரகசிய பதுங்கு அறைகளில் இருந்து வெளிப்படுகிறது. (2 தெச. 2:3)

சந்திரனில் மனிதன் இறங்கிய விவகாரத்திற்கு (Moon Landing) எதிராக “நாசா” (NASA) பதிலடி கொடுத்த போதிலும், அந்த விளக்கம் சரியாக ஏற்றுக் கொள்ளத்தக்க விதத்தில் இருந்த போதிலும்; அது எடுபடாமல் போனது. வாக்குவாதம் செய்யும் திறமையால், முயலுக்கு 3 கால்கள் என்று நிரூபிக்க முடியும். (“சொல்லுகிற விதத்தில் சொன்னால் காக்கை கூட வெள்ளையடா” என்று நான் படித்த ஒரு தமிழ் செய்யுள் ஞாபகத்துக்கு வருகிறது.) ஆனால் அது உண்மையில்லையே!

அதைப் போலவே நம் தேவனாகிய இயேசுவுக்கெதிரான காரியங்கள் கூட இதுவரை பேச்சாற்றலால் ஜெயிக்கப்பட்டுள்ளன. ஆனால் உண்மை என்னவென்பதைப் பரலோகம் அறியும், இயேசுவை உள்ளடக்கிய நமக்கும் தெரியும். (1 கொரி. 2:15) “நாசா”-வில் (NASA) என்ன நடந்ததென்பது அதன் எல்லைக்குட்பட்டவர்களுக்குத் தெரியும். அவர்களுக்கு என்ன தெரியுமோ அதுதான் நிஜம். மற்றவர்கள் சொல்வது நிஜமல்ல, ஒரு அனுமானம்தான், ஏன் பொய்யாகக் கூட இருக்கலாம்.

Why is the flag fluttering if there is no air or wind on the Moon? Why did America make a signal on the moon that could be seem from earth? Who did the filming? Powerful Cosmic Radiation உள்ள சந்திரனில் எப்படி மனிதன் நடக்க முடியும்? ஒன்றுக்கு மேற்பட்ட நிழல்கள் வந்தது எப்படி? உண்மையில் இது மனித சஞ்சாரமில்லாத “நிவேடா பாலைவனத்தில்” (Nevada Desert) ஒளிப்பதிவுக்கூடம் (Studio) அமைத்து எடுக்கப்பட்ட காட்சி தான் (Shooting) என்று முடிக்கிறார்கள். சில நிமிடங்கள் ஓடும் ஒரு துண்டு ஒளிப்பதிவு (Video clip) ஒன்றும் இணைக்கப்பட்டிருந்தது. அதில் ஆம்ஸ்ட்ராங் இறங்கி காலடி பதிக்கும் நேரத்தில் அந்த செயற்கை அமைப்பு (Settings) உடைந்து விழுகிறது! திரைமறைவிலிருந்து சிலர் அதை சரி செய்வதற்காக ஓடி வருகிறார்கள்!! (இவர்கள் இவர்களுக்கு முன்பாகவே சந்திரனில் கூடாரம் அடித்து வாழ்ந்து கொண்டிருந்தவர்களா என்று நினைக்கத் தோன்றுகிறது.!) (http://www.stuffucanuse.com/fake_moon_landings/moon_landings.htm) (http://hightechbiz.com/pub/moonlanding.html) நீ கழுகைப்போல உயரப்போனாலும், நீ நட்சத்திரங்களுக்குள்ளே உன் கூட்டைக் கட்டினாலும், அவ்விடத்திலிருந்தும் உன்னை விழத்தள்ளுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஒபதியா 1:4

இதைப் பார்த்துக் கொண்டிருந்தபோது “நிஜமாகத்தான் இருக்குமோ” என்று பொறி ஒன்று என்னில் கிளம்பியது. “நிஜமாக இருக்குமோ? என்ற சந்தேகம் எனக்கு. நிஜமேதான், சந்திரனுக்கு இதுவரை யாரும் போகவில்லை, போகவும் முடியாது, அதற்கானச் சூழல் (Datas) நம்மிடம் இல்லை, இப்படி சொல்றதையெல்லாம் நம்பற கோமாளிகளாய் இருந்தால் சூரியனுக்கே கூட போயிட்டு வருவார்கள் நம்மாட்கள்” என்றான் என் மகன்! (பச்சை மரத்துக்கே இந்த நிலை என்றால் பட்ட மரங்களின் கதி?) விசுவாசிகளையே குழப்புகிறானே சாத்தான்? வெளியே நிற்பவர்களின் நிலை என்ன? (1 பேதுரு. 4:18) எச்சரிக்கையாய் இருப்போம், ஆகாத சம்பாஷணைகள் நம்மைக் கெடுத்துவிடும். (1 கொரி. 15:33)

சந்திரனில் முதலாவது இறங்கி நடந்தவரைப் பேட்டி கண்டபோது அவர் சொன்னது, மனிதன்

சந்திரனில் நடந்தான் என்பதை விட மெய்யான தேவன் இயேசு இந்த உலகத்தில் நடந்தார் என்பதே பெரிய விஷயம் என்றார்.

## *விதைப்பு வீணாகாதபடி பாதுகாக்க...*

### ஏழைகளை நினைத்துக் கொள்ளும்படி பவுல் ஆலோசனை சொல்கிறார். (கலாத். 2:20)

**1. நன்மை செய்ய வேண்டும்.** (அப். 10:38) (1 தெச. 5:15) ஏழைகளுக்குக் கொடுக்கும் போது "நன்மை செய்கிறோம்." அடுத்ததாக வசனத்திற்குக் கீழ்ப்படிகிறோம். கீழ்ப்படியும்போது தேவன் நம்மை நோக்கிப் பார்க்கிறார். நம்மைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யும்போது அது "+" ஆகி விளைச்சலின் மகசூலையும் அதிகப்படுத்துகிறது. (லூக்கா. 6:27)

**2. செய்ய வேண்டியவர்களுக்குச் செய்ய வேண்டும்.** (ரோமர். 16:2) அதாவது தேவையுள்ளவர்களுக்குச் செய்ய வேண்டும். எப்படியாவது நன்மை செய்து தேவனிடமிருந்து ஆசீர்வாதத்தை வாங்கி விட வேண்டும் என்பதற்காக நம் உதவி தேவையில்லாதவர்களுக்கு உதவி செய்ய முற்படுவோமானால் எப்படி இருக்கும் தெரியுமா?

ஞாயிறு வகுப்பு (Sunday Class) நடந்து கொண்டிருந்தது. ஞாயிறு பள்ளி ஆசிரியை பிள்ளைகளைப் பார்த்துக் கேட்டார். "தினமும் யாராவது ஒருவருக்கு ஏதாவது ஒரு சின்ன உதவியாவது செய்ய வேண்டும் என்று சொல்லியிருந்தேனே, எங்கே ஒவ்வொருவராக எழும்பி நின்று அவரவர் செய்த நன்மைகளைச் சொல்லுங்கள்" என்றார். ஒவ்வொருவராக சொல்லிக் கொண்டே வந்தனர். டவுண் பஸ்ஸில் (Town Bus) சில்லறையில்லாமல் தவித்த ஒருவருக்குச் சில்லறை கொடுத்து உதவி செய்தேன் என்றான் பிரபு". என்னுடைய ஏழை நண்பனுக்குப் பேனா வாங்கிக் கொடுத்தேன் என்றான் அருண். சொல்லிக்கொண்டே வந்தனர். "வயதான ஒரு பாட்டிக்கு ரோட்டைக் கடக்க நானும் என்னுடைய எட்டு நண்பர்களும் உதவி செய்தோம்" என்றான் குமார். வயதான ஒரு பாட்டியை ரோட்டைக் கடந்து கூட்டிக் கொண்டு வர ஒன்பது பேர் எதுக்கு? என்றார் ஞாயிறு பள்ளி ஆசிரியர். "அந்தப் பாட்டிக்கு ரோட்டைக் கடக்க வேண்டாமாம், அவங்க சொல்லச் சொல்லக் கேட்காமல் நாங்கதான் பாட்டியைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தோம்" என்றானே பார்க்கலாம்! ஞாயிறு பள்ளி ஆசிரியர் வகுப்பை அத்துடன் முடித்துக் கொண்டார்!

இப்படிப்பட்ட நன்மைகளால் என்ன பிரயோஜனம்? யோசித்துப் பாருங்கள். செழித்து வளர்ந்திருக்கும் பயிர்களுக்கு நடுவாகக் கொண்டு நம் விதைகளை விதைப்பதினால் பிரயோஜனம் எதுவுமில்லை. அந்த விதை முளைவிடுவதற்காகச் சூழ்நிலைகள் கொஞ்சம் இருந்தாலும் தொடர்ந்து அது வளர முடியாது, பலனும் தராது. (ரோமர். 15:21)

**3. சோர்ந்து போகாமல் செய்து கொண்டே இருக்க வேண்டும்.** ஆரம்பத்தில் இருந்த உற்சாகம் நாளாக ஆகக் குறைந்து போவது மிகவும் ஆபத்தானது. தொடர்ச்சியாக விதைக்கும் அனுபவத்துக்குள் வர வேண்டும். இதுவரைக்கும் நிறைய செய்துவிட்டோம் போதாதா? என்று சத்துரு கேள்விகளால் இருதயத்தை நிறைப்பான். (கழுதை மெலிந்து கட்டெறும்பான கதை ஒன்றுண்டு) மிக விழிப்புடன் இருக்க வேண்டிய காலக்கட்டம் இது.

**4. நன்மை தூஷிக்கப்படாதபடிப் பார்த்துக் கொள்ள வேண்டும்.** நாம் செய்யும் காரியங்களைப் பார்க்கும் சுற்றியுள்ள கிறிஸ்துவில் வளராதவர்கள், பெயர்க்கிறிஸ்தவர்கள், புறஜாதியார் அதன் காரண காரியம் தெரியாமல், புரியாமல் வாய்க்கு வந்தபடி எதையாகிலும் பேசி வைப்பதால் நம்முடைய நீதி சில நேரங்களில் அவமதிப்புக்குள்ளாகிறது. (1 கொரி. 2:15) (யூதா. 1:8) (இவர்களுக்கு அவல் இடிக்க உலக்கையும் உரலும் தேவையில்லை) இதனால் தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுகிறது,

விளைச்சல் கெட்டு ஆத்துமாக்களுக்குப் பேரிழப்பும், பாதாளத்தின் வல்லமைகளுக்கு இலாபமும் உண்டாகிறது.

**5. இரகசியத்தில் செய்யப்பட வேண்டும்.** (மத். 6:3) (தேவையானால் வீட்டில் உள்ளவர்களுக்குக் கூடத் தெரியாமல்.) நாம் செய்யும் நீதி மற்றவர்களுக்குத் தெரிய வேண்டும் என்ற எண்ணமே இன்னும் பெருமை சாகவில்லை என்பதைத் தான் காட்டுகிறது. நம்முடைய நீதியின் விளைச்சலைவிட பெருமையா முக்கியம்? நம்முடைய பெருமையினால் நீதியின் விளைச்சல் பாதிக்கப்படுவதை விட நாம் விதைக்காமல் இருப்பது நலமாயிருக்கும். (மத். 6:2) இரகசியத்தில் விதைக்க முடியாத பிரச்சனை இன்றளவும் சபைகளில் இருக்கிறது. இதை மாற்ற வேண்டியது அவசியம். இதற்கான மாற்று ஆலோசனைகளை, சபைப் போதகர்களே தெரிவு செய்து சபைக்கு அறிவித்து; அவர்களுடைய விளைச்சலைப் பாதுகாத்துக் கொடுக்கலாமே?

## *கிறிஸ்துவின் சிந்தை:*

நமக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது. (1 கொரி. 2:16) அதுதான் உண்மை; அப்படியிருக்க வேறுமாதிரியான சிந்தனைகள் எழும்ப என்ன காரணம்? அவற்றை விதைப்பது யார்? அதுதான் தெரியுமே. நாம் இலேசாகக் கதவைத் திறந்தாலே போதும், உள்ளே நுழைந்து, சௌகரியமாக உட்கார்ந்து, நம் சிந்தனைப் பகுதியை பொறுப்பெடுத்துக் கொள்கிறான் அந்த பொல்லாதவன். அதனால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் "கிறிஸ்துவின் சிந்தை" யின் மீது சாத்தான் தன்னுடைய சிந்தனைகளைக் கொடி வீசிப் படர வைக்கிறான். நாளடைவில் சிந்தனைப் பகுதி கெட்டுப் போகிறது. நாம் இரட்சிக்கப்பட்டவர்கள், ஆவிக்குரியவர்கள், விசுவாசிகள் என்று நமக்கு நிச்சயமாகத் தெரியும். அப்படியிருக்க நம் யோசனைகளின் விபரீதம் நம்மையே குழம்ப வைக்கிறது. இது எப்படி சாத்தியம் என்று கலங்க வைக்கிறது. "சத்துரு இதைச் செய்தான்" என்பதைக் கண்டுபிடிக்க இவ்வளவு நாட்கள் ஆகிப்போனது!

ஒரு இளம் செடியின் தண்டு புவியீர்ப்புக்கு எதிராகவே எப்போதும் உயர்ந்து வளருகிறது என்பது எல்லோருக்குமே தெரிந்திருக்கும். என்றாலும் வேகமாக சுழலும் சக்கரத்தின் விளிம்பில் பொருத்தப்பட்டிருந்த விதைகள் மேல் நோக்கி முளைக்காதபடி புவியீர்ப்பை எதிர்த்து சக்கரத்தின் மையத்தை நோக்கி (உள்பக்கமாக) முளைவிடும்படி செய்தார் "நைட்" Knight. (பிரிட்டிஷ் தாவரவியல் விஞ்ஞானி) விரைவான சுழற்சியினால் உண்டாகும் "மைய விட்டோடும் சக்தி" புவியீர்ப்பு விசையையும் வென்று விட வல்லது என்று இவர் நிரூபித்துக் காட்டினார். அதைப் பயன்படுத்தி செடியை அவர் ஏமாற்றி விட்டார்!

சாத்தானோ தேவ ஜனங்களை ஏமாற்றி விட்டான்! கிறிஸ்துவின் பரிசுத்த சிந்தனைகளைத் தன்னை நோக்கித் திரும்பும்படி கவர்ந்திழுத்தான். (கலா.5:19) உன்னதங்களை நோக்கியிருந்த கிறிஸ்தவர்களின் கவனத்தைத் திசைமாற்றி தன்னுடைய வல்லமையால் உலகத்தைச் சுற்றிவரும்படி செய்தான். மாட்டிக் கொண்டவர்கள் "குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை" என்று சொல்லிச் சமாளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தேவனுடைய வசனத்துக்குக் கீழ்ப்படியாமல் அவனை ஓட ஓட விரட்ட முயற்சித்தவர்களின் வஸ்திரங்களை உரிந்து அவமானப்படுத்தி அனுப்பி வைத்தான். (அப்.19:16) தேவ பிள்ளைகளின் கிறிஸ்துவின் சிந்தையைத் தன்னுடைய சிந்தையாக (சாத்தானின் சிந்தனைகள்) மாற்றுகிறான். சாத்தானின் சிந்தனைகள் எப்படி இருக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். ஏனென்றால் எல்லோருமே அதை அனுபவித்திருப்போம். சாத்தான் நம்முடைய இருதயத்தின் மீது நச்சு வேர்களைப் படரவிடுமுன்பாக நம்முடைய சிந்தை கிறிஸ்துவினுடையதைப் போல் இருந்தது. இப்போதோ நம்மைத் திசை திருப்பி விட்டான். சாத்தானின் சிந்தனைகள் எவ்விதமாக இருக்கிறது என்பதைச் சில வசனங்களில் பார்ப்போம்.

மேட்டிமை (பெருமை) தலைதூக்குகிறதென்றால் அங்கே கிறிஸ்துவின் சிந்தை இல்லை என்பது நிச்சயம். (ரோமர்.11:20) நம் தேவன் இயேசு தாழ்மையின் ரூபமாய் நமக்காக

வந்தவர். இப்படியாகக் கிறிஸ்துவுக்கடுத்த காரியங்களை ஆராய்ந்து நம்முடைய சிந்தை யாருடையது? என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

அடுத்ததாக புறஜாதியாருடைய சிந்தனைகளை "வீணான சிந்தனைகள்" என்கிறது வேதம். நாமும் முற்காலத்தில் அப்படித்தான் இருந்தோம். பிரயோஜனமில்லாத, ஒன்றுக்கும் உதவாத சிந்தனைகளால் உலகத்தைச் சுற்றி வந்து கொண்டிருந்தோம். நம்முடைய சிந்தனைகள் புறஜாதியாருடைய சிந்தனைகளுடன் ஒத்துப் போகிறதென்றால் அது கிறிஸ்துவின் சிந்தையாயிருக்க முடியாது. கிறிஸ்து இல்லாத இடத்தில் கிறிஸ்துவின் சிந்தை தோன்றச் சந்தர்ப்பமே இல்லை.

நாம் கிறிஸ்துவில் வளர்ந்து வருகிறோம் என்பதைக் காட்டும் விதமாக ஆவிக்குரிய சபைக்குப் போய்க்கொண்டிருப்போம், ஊழியங்கள் செய்து கொண்டிருப்போம். என்றபோதிலும் நம் இருதயத்தில் "வேறே சிந்தை" வரச் சந்தர்ப்பம் உண்டு என்பதை பிலி.3:15ம் வசனம் நமக்கு வெளிப்படுத்துகிறது. என்றாலும் நம் "சிந்தனைகளில் பிரச்சனை" என்றால் பரிசுத்தாவியானவர் உடனுக்குடன் அதை வெளிப்படுத்திவிடுவார் (நம் மனச்சாட்சி நம்மைக் குற்றப்படுத்துவதன் மூலம்)

இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால்; இவ்வுலக ஐசுவரியவான்களின் (வாக்குத்தத்தப் பங்காளிகள் அல்லாத) மனதில் "இறுமாப்பான சிந்தை" இருக்கும் என்று வேதம் சொல்லுகிறது. அவர்கள் இயேசுவை அறியாததினால் அவருடைய தாழ்மை அவர்களுக்குத் தெரியாமல் போகிறது. சாத்தானை அறிந்திருக்கிறபடியினால், அவன் சொன்ன வழிகளிலெல்லாம் சென்று சம்பாத்தியம் பண்ணியபடியினாலும் சிந்தனை பாதிக்கப்படுகிறது. இறுகி விடுகிறது, இளகல் இல்லாமல் போகிறது. இந்தக் கடின மனம் நம் சிந்தனையைக் கெடுத்துவிடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். உலக ஐசுவரியங்களைப் பார்த்து மதி மயங்காதபடி இருதயத்துக்குக் காவலிடுவோம். (1 தீமோத். 6:17)

## *கிறிஸ்துவின் சிந்தையைக் காத்துக்கொள்ள என்னென்ன செய்யலாம் என்பதையும் பார்த்துவிடுவோம்.*

**பதில்: ஜெபம்தான்!** ஆனால் விசுவாசத்துடன் ஜெபிக்க வேண்டும். அப்போது தேவன் தரும் சமாதானம் புறப்பட்டு வரும். அது நம்முடைய இருதயங்களையும், அதன் சிந்தனைகளையும் சுற்றி வேலியடைக்கும். பிறகு அதில் உண்மையுள்ளவைகள், ஒழுக்கமுள்ளவைகள், நீதியுள்ளவைகள், கற்புள்ளவைகள், அன்புள்ளவைகள், நற்கீர்த்தியுள்ளவைகள், புண்ணியமுள்ளவைகள், புகழுள்ளவைகள் ஆகியவற்றை மட்டுமே யோசிக்க வைக்கும். சாத்தானுடைய விதைகளின் கலப்படம் இருக்காது. கிறிஸ்துவின் பரிசுத்த சிந்தனையாக அவைகள் துளிர் விடும். (பிலி. 4:6-8)

- ☛ பிறகு நமது சிந்தையில் "ஜீவனும் சமாதானமும்" இருக்கும். (ரோமர். 8:6)
- ☛ பரிசுத்தாவியானவர் நம் இருதயத்தின் நினைவுகளை அவ்வப்போது "ஸ்கேன்" (Scan) பண்ணி, சரிப்படுத்துவதற்கேதுவாக பெருமூச்சுடன் ஜெபிக்க ஆரம்பிக்கிறார். (ரோமர். 8:27)
- ☛ "ஏக சிந்தை"யைத் தருவார். (பி-. 2:2)
- ☛ "தேறினவர்க"ளாக மாற்றுவார். கிறிஸ்துவைப் போலச் சிந்திக்க நமக்குப் பயிற்சி கொடுக்கிறார் பரிசுத்தாவியானவர். நாம் சிந்திப்பது போலவே நாளடைவில் மாறிக்கொண்டே வருவதால்; முடிவில் மறுரூபமாகி அவரைப் போலவே, அவரைத் தரிசிக்கப் புறப்பட்டிருப்போம். அல்லேலூயா!

நம் இரட்சிப்பின் வஸ்திரங்களை அவனிடம் தொலைத்து விடாமல் பத்திரப்படுத்துவோம். வசனத்திற்குக் கீழ்ப்படியும் போது தேவன் நம்மை நோக்கிப் பார்க்கிறார். அதனால் அருகில் நிற்கமுடியாதபடி சாத்தானின் வல்லமைகள் எரிக்கப்படுகிறது. அதனால் அவன் நம்மை

விட்டு ஓடிப் போகிறான். சாத்தான் தன்னுடைய விஷ விதைகளை முளைக்க வைக்க நாம் ஏன் நம்மை அவனுக்கு விட்டுக் கொடுக்க வேண்டும். நாம் தேவனுடைய விளை நிலங்கள் என்பதை மறக்காதிருப்போம்.

## *தாவீது Vs. உரியாவின் மனைவி: (விதைப்பு Vs. அறுவடை)*

**இது "யுத்தத்திற்குப் புறப்படுகிற காலம்".** தேவனுக்காக யுத்தம் செய்யக் கொடுக்கப்பட்டிருக்கும் கடைசி நாட்கள். யுத்தத்தைத் தவிர்த்து ஓய்வெடுக்க முயற்சிக்காதிருப்போம். அப்படி ஓய்வெடுக்கும் நேரத்தில் வீண் அலுவல்காரர்களாக மாறுவதால் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்யச் சாத்தான் நம்மைத் தூண்டிவிட அவனுக்கு வழியமைத்துக் கொடுக்கிறோம். (2 தெச. 3:11) உப்பரிகையின் மீது உலாத்திக் கொண்டிருந்த தாவீது ராஜா உதாரணத்துக்காக இப்போது இறங்கி வருகிறார். (2 சாமு. 11,12 அதிகாரங்களை வாசியுங்கள்).

அவர் யுத்தத்திற்குப் போகாத காரணத்தினால் ஒரு பயங்கரமான விஷ விளைச்சலுக்குச் சாத்தான் விதைகளைக் கொண்டு வந்து தருகிறான். அவனும் பெற்றுக் கொண்டு விதைத்ததினால் தேவ கோபம் விளைச்சலாக 12ஆம் அதிகாரத்தில் தாவீதின் எல்லைகளுக்குள் இறங்குகிறது. தாவீது இரகசியமாக சதித்திட்டம் தீட்டுகிறான்; தேவனோ வெளியரங்கமாகக் கூரை மீது அதை வெட்ட வெளிச்சமாக்கிவிடுகிறார். (வண்டவாளம் தண்டவாளம் ஏறி வருகிறது.)

இங்கே தாவீது செய்த இரகசியப் பாவத்தைவிட; யுத்தத்தில் வைராக்கியம் பாராட்டின உரியாவுக்கு விரோதமாக அவன் தீங்கு செய்ததுதான் தேவனுடைய பார்வைக்கு அதிகக் கோபமூட்டியிருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. (2 சாமு. 11:11) ஊழியத்திற்காக அழைக்கப்பட்டிருந்தும் சாக்குப்போக்குச் சொல்லி சும்மா தூங்கிக் கொண்டிருக்கும் தேவ ஜனங்கள்; வைராக்கியமாக தேவனுக்காக நிற்கும் ஊழியர்களுக்கு விரோதமாக எழும்பும் காட்சிகளை இப்போதும் கடைசி அறுவடை வேலை நடந்துக் கொண்டிருக்கும் இடங்களில் பார்க்கலாம். இது சத்துருவின் அக்கால விதையின் தாக்கமாகத்தான் இருக்க முடியும். இப்படிப்பட்டவர்களால் தேவனுக்கு உண்மையாய் ஊழியம் செய்துவரும் ஊழியர்கள் தாக்கப்படுகிறார்கள். ஊழியங்களும் முடங்கி விடுகின்றன. சாத்தான் கிண்டலாக வெற்றிச் சிரிப்பு சிரித்தபடி சபையைத் திரும்பிப் பார்த்துவிட்டு போய்க்கொண்டிருக்கிறான், கவனியுங்கள்!

தாவீது தன் குறி தப்பவில்லை என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தான். ஆனால் விழுந்த அந்த வினாடியிலிருந்தே விதை முளைப்பதற்குத் தயாராகி விடுகிறது என்ற தாவரவியல் உண்மையை அவன் உணர்ந்திருக்கவில்லை. (2 சாமு. 11:27)

இனிமேல் விளைச்சலைக் கவனிப்போம். இது நமக்கெல்லாம் திருஷ்டாந்தமாக இருப்பதற்காகவே தாவீதுக்கு சம்பவித்தது என்பதை நினைவில் நிறுத்தியபடி விளைச்சலைக் கவனித்திருப்போம்.

தாவீதின் "விளைச்சலின் செய்தி"யை (Message) தேவனிடமிருந்து பெற்றுக் கொண்ட தேவ ஊழியன் "நாத்தான்" குதிரையின் மீதேறி மின்னலாய்ப் பாய்ந்து வருகிறார்! அவனுடைய குற்றத்தைச் சுட்டிக் காட்டி; அதனுடைய விளைச்சல் எவ்வளவு பயங்கரமாக இருக்கப்போகிறது என்பதையும் சொல்லுகிறார். "நீ துரோகம் பண்ணி முடித்தபின்பு; உனக்குத் துரோகம் பண்ணுவார்கள்" (ஏசா. 33:1) என்ற வசனம் அவனுக்குப் பலித்தது. (2 சாமு. 12:11ம் வசனத்தை இங்கே எழுத விரும்பவில்லை; நீங்களே வாசித்துப் பாருங்கள்.)

ஆனால் தாவீது எதிர்வார்த்தை எதுவும் பேசவில்லை. "கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தேன்" என்று தன் பாவத்தைத் தவறாமல் ஒத்துக் கொள்கிறான். இங்கே ஒன்றைக் கவனிக்க வேண்டும். "நான் உரியாவுக்கு விரோதமாகப் பாவம் செய்தேன்" என்றோ, "பத்சேபாளுக்கு விரோதமாகப் பாவம் செய்தேன்" என்றோ சொல்லாமல், தேவனுக்கு விரோதமாகச் செய்ததாகச் சொல்கிறான். உண்மை அதுதான். நாம் எந்தவொரு மனிதனுக்கும் விரோதமாகச் செய்கிற பாவம் தேவனுக்கு விரோதமாகவேச் செய்ததாகக்

கணக்கு வைக்கப்படுகிறது. காரணம், எந்தவொரு மனிதனையும் படைத்தவர் தேவனே என்பதால்.

தன் பாவத்தை உணர்ந்து அறிக்கையிடுகிறான்... என்றாலும் விதை முளை விட்டது. தேவன் அவனை மன்னிக்கின்றார்... என்றாலும் முளை துளிர்விட்டது. தொடர்ந்து அவனுக்கு ஆறுதல் செய்கிறார்... அவன் தன்னைத் திடப்படுத்திக் கொள்கிறான்... என்றாலும் துளிர் வளர்ந்தது. அடுத்தபடியாக யுத்தங்களில் வெற்றிகளைத் தருகிறார்... என்றாலும் பயிர் வளர்ந்து பூப்பூத்தது.

பிறகு என்னவெல்லாம் நடந்திருக்கும் என்பதைத் தொடர்ச்சியாக தாவீதின் சரித்திரத்தை வாசித்தால் புரியும். அவைகள் வார்த்தைகளால் எழுத முடியாத அளவில் இருப்பதால் வசனத்தை மட்டும் சொல்கிறேன். (2 சாமு. 15:16, 16:21,22) அவன் அறுவடை செய்தது; தாவீதின் 51ம் சங்கீதத்தில் வருகிறது.

செய்த பாவத்தை மறக்க முடியாமல் தத்தளிக்கிறான் (வச.3). அவனுடைய "பரிசுத்தம்" பறிபோனது, அசுத்தனானான் (வச.7). சந்தோஷம் இல்லாமல் போனது (வச.8). சரீர பலவீனம் தாக்குகிறது (வச.8). வெட்கம் மூடுகிறது (வச.9). அக்கிரமத்தினால் இருதயத்தில் சுத்தமில்லை, அபிஷேகத்திலும் பிரச்சனை வருகிறது (வச.10). தேவனுடைய சமூகத்தை விட்டுப் பிரிக்கப்படுகிறான் (வச.11). இரட்சிப்பின் சந்தோஷம், அபிஷேகத்தின் சந்தோஷம் நீங்கிப் பின்மாற்றம் வருகிறது (வச.12). உரியாவின் இரத்தப்பழி வேறு (வச.14). ஜெபிக்க முடியாமல், தேவனைத் துதிக்க முடியாமல் இருதயம் நொறுக்கப்படுகிறது (வச.15-17).

ஒரு வினாடி மூளையில் தோன்றிய ஒரு சிறிய பாவ எண்ணத்தால்; வருடக்கணக்கில் நொந்து வெந்து அலைகிறான். எங்கோ எப்போதோ கேள்விப்பட்ட ஒரு வாசகம் நினைவுக்கு வருகிறது. அது: "ஒரு பாவத்தைச் செய்து; அதனால் கிடைக்கும் சந்தோஷத்தை விட, அந்த பாவத்தை செய்யாமல் தப்பித்து விடுவதில் கிடைக்கும் சந்தோஷம் ஆயிரம் மடங்கானது" என்பதே அது.

கம்பியில்லாத ஜன்னல் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு, மூன்றாம் மாடியிலிருந்து குதிக்கப்போகிறாயா? சிந்தித்துவிட்டுக் குதி! ஒருவேளை மருத்துவர்கள் உன்னைக் காப்பாற்றி விடலாம்... என்றாலும் தழும்புகள்?

விஷத்தைக் குடிக்கப்போகிறாயா? சிந்தனை செய்! ஒரு வேளை காப்பாற்றப்படலாம்... என்றாலும் பக்க விளைவுகள். (Side effects)?

தீக்குளிக்கப் போகிறாயா? காப்பாற்றிவிடுவார்கள் தான்... என்றாலும் விகாரமாக மாறப்போகும் உன்னுடைய உருவம்?

தாவீதைத் தேவன் மன்னித்து, அவனுடைய காயங்களையெல்லாம் கட்டினார் தான்... என்றாலும் விளைச்சல்? சிந்திப்போம்.

## கிருபை மா கிருபை, என்னை மீட்க வந்த தேவகிருபை (இயேசு):

இயேசுவின் சிலுவைப் பாடுகள் மூலமாக நமக்கு என்னென்னவெல்லாம் உண்டோ, அதெல்லாம் கிருபையாக நமக்குக் கிடைக்கிறது. பாவம், சாபம், நோய், வறுமை, மரணம், பாதாளம், நரகம் இவைகள் எல்லாவற்றிலுமிருந்து விடுதலையோ விடுதலை! எல்லாம் இலவசமாக, ஒரு பைசா கூட நாம் கொடுக்கவில்லை. நமக்குக் கிடைத்திருக்கும் விடுதலைக்காக கைகளை உயர்த்தி அல்லேலூயா என்று ஆர்ப்பரிப்போம். (ரோமர். 3:24)

ஆதாமினால் விதைக்கப்பட்ட ஒரு தவறான வித்தினால் விளைந்த விளைச்சலின் விஷத்தினை உட்கொண்டதால் கணக்கிலடங்காதோர் மரித்துவிட்டனர்... மரித்துக் கொண்டிருக்கின்றனர்... பிதாவாகிய தேவனின் நீட்டின கரத்தின் கோபாக்கினையையும், அதனால் நடந்த காரியங்களைப் பழைய ஏற்பாடு முழுவதுமாக வாசித்துக் கொண்டே வரும்போது; காரிருள் என்னை வந்து மூடியதைப் போலிருந்தது. புதிய ஏற்பாட்டிற்குள் பிரவேசித்தபோது; இயேசு

தன்னுடைய கிருபையினால் பிதாவின் கோபத்துக்கு நம்மை விலக்கிக் காப்பாற்றினார் என்ற சத்தியத்தை அறிந்தபோது; அந்த சத்தியம் என்னை விடுதலையாக்கிற்று. காரிருள் ஒரு போர்வை போல் தன்னைச் சுருட்டிக் கொண்டு மறைந்து போனது. (ரோமர். 5:15)

"சின்ன சிட்டுக் குருவியே, சின்ன சிட்டுக் குருவியே,
உன்னை சந்தோஷமா படைச்சது யாரு?
அங்கும் இங்கும் பறந்துக்கிட்டு, ஆனந்தமாப் பாடுறியே,
உன்னை அழகாகப் படைச்சது யாரு?" - மிக அழகான பாடல் ...

உயர் மின் அழுத்த கம்பிகளைத் தொடுவது என்பது எவ்வளவு ஆபத்தானது என்பது; அதில் வரையப்பட்டிருக்கும் மண்டையோட்டின் படத்தைப் பார்த்துத்தான் தெரிய வேண்டும் என்று அவசியமில்லை. ஆனால் அந்த கம்பிகளின் மேல் குருவிகள் எந்தவித ஆபத்தில்லாமல் ஆனந்தமாக உட்கார்ந்து கதை பேசுகிறதே, அதெப்படி சாத்தியமாகிறது? குருவியின் உடலை மின்னோட்டம் ஒரு கிளைப் பகுதியாக எடுத்துக் கொள்கிறது. அவற்றின் கால்களுக்கு இடையிலான குறுகிய பகுதி; கிளைப் பகுதியுடன் ஒப்பிடும்போது மாபெரும் அளவுள்ளதாயிருக்கிறது. எனவே குருவியின் உடல் வழியே செல்லும் மின்சக்தி வலுவிழந்து தீங்கற்றதாக மாறி விடுகிறது. இவ்விதமாக தேவன் இயேசுவின் கிருபைகளும் செயல்படுகிறது என்று அனுமானிக்கலாம். நம்முடைய பாவங்களுக்குத் தக்கதாக தேவன் நமக்குச் சரிக்கட்டாதபடி இயேசுவின் கிருபை நம்மைக் காக்கிறது. இந்த நாட்களிலும் நாம் சங்காரமாகாதபடி, செத்துப் போகாதபடி இயேசுவின் கிருபை நம்மைச் சூழ்ந்து; பாதுகாப்பு வளையமாகிறது.

"ஐயா, ஐயா இது தெரியாதா?
ஒரு ஆண்டவர் நமக்கு மேலே இருக்கிறார்
எங்களைக் (குருவியை) காக்கிற ஆண்டவர் உங்களைக் காக்க மாட்டாரோ?
அவர் உங்களைத்தானே ரொம்பவும் நேசிக்கிறார்."

## அவர் உங்களைத்தானே ரொம்பவும் நேசிக்கிறார் (பாடலின் தொடர்ச்சி)

அக்காலங்களில் (பழைய ஏற்பாட்டின் நாட்களில்) ஒரு தவறு செய்தாலும் போதும்; அதனால் விழும் அடி சகிக்கக் கூடாமலிருந்தது (உதாரணமாக தாவீதைச் சொல்லலாம்). ஆனால் இக்காலங்களிலோ அதே போல பல நூறு தவறுகள் செய்தவர்கள் கூட கிறிஸ்துவின் கிருபையினால் அந்த பாவங்கள் நீங்கி சுத்திகரிக்கப்பட்டு "நீதிமான்கள், பரிசுத்தவான்கள்" என்ற மகிமையான பெயர்களுடன் வாழ்ந்து வருகிறார்கள். (ரோமர். 5:16) மின் கம்பிகளின் மீது அமரும் சிறிய பறவைகள் தனது இறக்கை அல்லது அலகினால் கம்பத்தைத் தொட்டுவிட்டால்; உடனே மின்சாரம் தாக்கி மடிந்து போகிறது. இது அடிக்கடி நிகழ்ந்ததால்; ஜெர்மானியர்கள் மின் கம்பிகளின் தாங்கிகளில் காப்பிடப்பட்ட இருக்கைகளை அமைத்தனர்.

ஆதாமின் மீறுதலினால் மரணம் சகல மக்களையும் தன் ஆளுகைக்குள் (Control -ல்) பிடித்திழுத்து வைத்துக் கொண்டது. ஆனால் இயேசுவின் கிருபை எல்லோரையும் விடுதலையாக்கி; எல்லோருக்கும் நித்திய ஜீவனை வாக்களித்தது. (ரோமர். 5:17) ஒரு சின்னக் குருவிக்கு இவ்வளவு கிருபை பாராட்டக் கூடுமானால்; இயேசுவின் சாயலாக மாறுவதற்காக அழைக்கப்பட்ட தன்னுடைய ஜனங்கள் மீது கிருபை பாராட்டுவது மிக அதிகமாக இருக்குமல்லவா? (ரோமர். 5:20)

சில நேரங்களில் பறவைகள் அருகில் வராமலிருப்பதற்காக மின்கம்பிகள் காப்புக் கூடுகளுக்குள்ளாக வைக்கப்படுகின்றன. இவ்விதமாகவே கிருபையானது நித்திய ஜீவனைப் பெறுவதற்காக நம் ஜீவனைக் காத்துக் கொள்கிறது. (ரோமர். 5:21)

"ஆமாம் சிட்டுக் குருவியே!
ஆமாம் சிட்டுக் குருவியே!

இது மனுஷங்களுக்குத் தெரியவில்லையே

இந்த உண்மையும் ஏனோ புரியவில்லையே" (பாடலின் தொடர்ச்சி)

இயேசு நமக்காக வந்து, மரித்து, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை விலக்கிக் காத்துக் கொண்டார். (கலா. 3:13) இந்த சத்தியத்தை அறியாமல் இன்றும் பலர் நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக முயற்சி எடுத்து தோற்றுப்போகிறார்கள். அவர்களெல்லோரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையிலிருந்து விழுந்து போனவர்கள். (கலா. 5:4) அறுந்துபோன மின்சாரக் கம்பிகள் தரையில் கிடப்பதை அறியாமல் இருட்டில் நடக்கும் பாதசாரிகள், விலங்குகள் விபத்துக்குள்ளாவதை அடிக்கடி கேள்விப்படுகிறோம். சத்தியத்தை அறிந்து கொள்ளுங்கள்; அது உங்களை விடுதலையாக்கும். (யோவான். 8:32) சத்தியத்தை அறிந்து கொள்வதில் ஆர்வம் இல்லாமல் ஏனோதானோ என்று ஓடிக்கொண்டேயிருப்பீர்களாயின் நீங்கள் இன்னும் உங்கள் கட்டுகளிலேயே இருப்பீர்கள். (1 கொரி. 15:17) அதனுடனேயே நீங்கள் ஓடிக் கொண்டேயிருப்பதனால் கட்டுகள் பலத்து இறுகிப் போகின்றன. கடைசியில் கழுத்தை நெறித்துப் போடுகின்றன (யோவான். 8:24).

## *எறும்புகளைக் கவனித்துப் பாருங்கள்* (நீதி. 6:6, 30:25)

நம்முடைய உடலை வெறும் கூடாக்கினால்; அதனுள் 10,00,000 எறும்புகளை அடக்க முடியும். எறும்பின் அளவுக்கு நம்முடைய உடலைச் சிறியதாக்கிக் கொண்டு அவற்றின் எல்லைகளுக்குள் நுழைய முடியாது என்பதால்; கையில் ஒரு உருப்பெருக்கி (Lens) லென்சுடன் அவற்றின் எல்லைகளுக்கு வெளியே நின்று கொள்ளுங்கள், கவனியுங்கள்.

"நண்பர்கள் பிளவுபட்டால் காரியம் நடக்காது" என்ற பழமொழி இயந்திரவியலுக்கும், எறும்பிற்கும் அவ்வளவாகப் பொருந்தாது, கொஞ்சம் பொருந்தும். விசைகள் வெவ்வேறு திசையில் செயல்பட்டாலும் பயனற்றதாகிவிடுவதில்லை. எறும்புகள் வெவ்வேறு திசையில் செயல்பட்டுத்தான் தன் காரியத்தைச் சாதித்துக் கொள்கின்றன என்பது இன்றும் பலருக்குத் தெரியாது. விசைகளின் "தொகுபயன்" தான் எறும்புகளின் சாதனைக்குக் காரணம். எறும்புகளினிடத்தில் விசேஷமான ஒத்துழைப்பு இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் நீங்கள்; சற்றுக் கூர்ந்து கவனித்துப் பார்க்கும்போது; அது வெறும் கற்பனையே என்பது புரிந்துவிடும், என்கிறார் ஆராய்ச்சியாளர் "Girilov".

மற்றவை என்ன செய்கிறது என்பதைப் பற்றி கொஞ்சம் கூட கவலைப்படாமல் ஒவ்வொரு எறும்பும் தன்தன் போக்கிலேயே வேலை செய்வதைப் பார்க்க முடியும்.

**எலாச்சிச் ('Elawchich')** என்ற விலங்கியல் ஆராய்ச்சியாளர்; எறும்புகள் வேலை செய்யும் விதத்தை பற்றித் தன்னுடைய "இயல்பூக்கம்" என்ற நூலில் எழுதியுள்ளார். பத்துப் பதினைந்து எறும்புகள் தங்களுடைய இரையைச் சம தரையில் இழுத்துச் செல்லும்போது; அவை ஒரே விதமாகச் செயல்படுகின்றன. மேலோட்டமாகப் பார்க்கும்போது ஒத்துழைப்பு இருப்பது போலத் தோன்றுகிறது. ஆனால் இரை (சிறிய பச்சைப் புழு என்று வைத்துக் கொள்வோம்) ஒரு கல்லினால் தடுக்கப்படும்போது ஓட்டம் தடைபடுகிறது. அப்பொழுது "ஒத்துழைக்க" வேண்டும் என்ற அறிவு இல்லாமல் ஒவ்வொன்றும் தன்தன் வழியில் தடையைச் சமாளிக்க முயலுவதைப் பார்க்கலாம். ஒன்று வலது புறமாக, மற்றொன்று இடது புறமாக, முன்புறமாக, பின்புறமாக இப்படியாக இழுக்கிறது.

பிறகு இடத்தை மாற்றிக் கொள்கின்றன. புழுவின் வேறுவேறு பகுதிகளைப் பற்றிக் கொண்டு தன்தன் இஷ்டப்படி நகருகிறது. 4 எறும்புகள் ஒரு திசையிலும், 6 எறும்புகள் மற்றொரு திசையிலும் இழுக்கிறது. எறும்புகளின் இழுவிசைகளின் தொகுப்பால் ('plus +') 6 எறும்புகள் இழுக்கும் திசையில் பூச்சி நகருகிறது.

நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரமாக இருக்கும் சபையினுள் இயங்கிக் கொண்டிருக்கும் 5 வகையான தேவனுடைய ஊழியக்காரர்கள், 9 விதமான வரத்தைப் பெற்ற சபையின் ஊழியர்கள், விசுவாசிகள் இவர்களின் செயல்பாட்டையும் பார்ப்போம். (விதைகள் பகுதி இரண்டிலும் (Part II) இதைப் பற்றி எழுதியிருக்கிறேன்.)

நாமும் சபைக்குள்ளாக இருப்பதால்; அதன் அங்கமாக இருப்பதால் கவனிப்பது எளிதாகவே இருக்கும். ஒருமனப்பாடு இல்லை என்பது என்னவோ உண்மைதான். ஆனால் ஆண்டவருடைய வேலைகள் எப்படியாவது நடந்து கொண்டுதான் இருக்கிறது. (பிலி. 1:15-18) உபதேசக் குழப்பங்கள் இருந்தாலும்; ஒரு சில காரியங்களில் ஊழியர்கள் ஒன்றித்துப் போகிறார்கள் என்பதை மறுக்க முடியாது.



அவை என்னவென்றால்: ஒரு சில பொதுப்படையான வேத சத்தியங்கள் தான் (தொகுபயன்). (1) இயேசுவே ஆண்டவர், அவர் மாத்திரமே இரட்சிப்புக்கு வழி என்பதை எல்லோருமே அறிவுறுத்துகின்றனர். (2) எல்லோருமே சுவிசேஷத்தை அறிவிக்கிறார்கள். (3) ஊழியங்களுக்காக விதைக்கிறார்கள், செலவு பண்ணப்படத் தங்களை ஒப்புக் கொடுக்கிறார்கள். (4) அன்பு, தானதர்மம், ஆவிக்குரிய கிரியைகள், சாட்சியின் வாழ்க்கை இப்படிப்பட்ட காரியங்களும் பொதுப்படையாக இருக்கிறது. இதனால் தேவ இராஜ்ஜியக் கட்டுமானப் பணி வெற்றியாக நடந்து கொண்டுதான் இருக்கிறது; ஒரு வேளை வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும். சீக்கிரமே இலக்கை எட்டிவிடும்.

ஒத்துழைப்பு இல்லாமலேயே ஒரே இலக்கை நோக்கி; ஓடுவது ஆச்சரியமான விஷயம்தான் இல்லையா? தேவனால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை.

## “இலக்கை நோக்கித் தொடருவோம், இலட்சியம் நம் இயேசுவே” (பிலி. 3:14)

இன்னொரு முயற்சியும் செய்வோம். ஒரு பிஸ்கெட் (Biscuit) துண்டைக் கீழே போட்டு 25 எறும்பை விட்டு அதை இழுக்க வைப்போம். “அ” என்ற இலக்கை நோக்கி மெதுவாக நகர ஆரம்பிக்கிறது. முன்புறத்தில் இழுத்துச் செல்லும் எறும்புகளுக்குப் பின்புறமுள்ள எறும்புகள் முன்னோக்கித் தள்ளி உதவி செய்கின்றன என்றே பார்க்கும்போது தோன்றும்.

ஆனால் ஒரு கத்தியினால் பின்புற எறும்புகளைச் சிறிதளவு பிஸ்கெட்டுடன் சேர்த்து தனியே பிரித்து விட்டுக் கவனித்தால்; பிஸ்கெட் முன்பைவிட வேகமாக முன்னோக்கி நகருகிறது. இதிலிருந்து பின்புற எறும்புகள் பிஸ்கெட்டை முன்னோக்கித் தள்ளவில்லை; பின்னோக்கித்தான் இழுத்திருக்கின்றன என்பது தெரிகிறது.

பிஸ்கெட் துண்டை இழுத்துச்செல்ல 4 எறும்புகளின் முயற்சியே போதும். ஆனால் முயற்சிகளை ஒருமுகப்படுத்தாததினால் முன்புறம் தள்ளுவதற்கு 25 எறும்புகள் தேவைப்பட்டன.

ஒருமனப்பாடு இருந்திருந்தால் என்றோ எழுப்புதல் வந்திருக்கும். (அப். 2) அது இல்லாத காரணத்தினால் தான் எழுப்புதல் தாமதிக்கிறது. அதுமட்டுமல்லாமல் அநேகமாயிரம், கணக்கிலடங்காத அளவுக்கு ஊழியக்காரர்களையும் தேவன் எழுப்ப வேண்டியதாயிருக்கிறது. (அப். 8:4) எப்படியோ சுவிசேஷ வேலை நடந்தால் சரி. ஆத்துமாக்கள் காப்பாற்றப்பட்டால் அது போதும். பரலோகம் நிறைவு (Overflow) பெற்றே ஆக வேண்டும்; அது மிக முக்கியம். (மத். 11:12) பாதாளமும், நரகமும் திவாலாக வேண்டும்; அது அதை விட மிக மிக முக்கியம்! (எரே. 7:31)

19ம் நூற்றாண்டில் தான் அமெரிக்காவைச் சேர்ந்த நகைச்சுவை எழுத்தாளரான மார்க்டுவைன் (Comedy writer MarkTwine) என்பவர் இதைக் கவனித்திருக்கிறார்.

வெட்டுக்கிளியின் கால் ஒன்றை இரண்டு எறும்புகள் பிடித்து ஆளுக்கொரு பக்கமாக இழுக்கிறது. “ஏதோ தவறு நடந்து விட்டது” என்பது புரிகிறது. ஆனால் “என்ன தவறு?” என்று தீர்மானிக்க முடியாமல் இரண்டு எறும்புகளும் பேசித் தர்க்கிக்கின்றன. வாக்குவாதம்

முற்றி சண்டையில் முடிகிறது. மீண்டும் சமரசம் ஆகிக் கொண்டு மீண்டும் அதே முட்டாள் தனமான வேலையைத் தொடர்கின்றன! நொண்டி எறும்பிற்கு இழுக்கத் திராணியில்லை. நல்ல எறும்பு அதையும் சேர்த்து இரையுடன் இழுத்துச் செல்கிறது. தன்னுடைய எடைக்குச் சமானமான இன்னொரு எறும்பையும் வெட்டுக்கிளியின் காலுடன் சேர்த்து இழுத்துச் செல்கிறது அந்த பரிதாபகரமான எறும்பு. அது பற்றாது என்று நொண்டி எறும்பு இரையை எதிர்த்திசையில் (Opposite direction) இழுப்பதையும் இன்னும் நிறுத்தவில்லை!

உண்மையில் முற்காலங்களில் இந்த அளவிலான குழப்பங்கள், பிரிவினைகள் சபையில் இல்லை. (அப். 2:44) இக்கடைசிக் காலங்களில்தான் அதிகரித்திருக்கிறது. இது சரியானதல்ல என்பது எல்லா ஊழியர்களுக்கும் தெரிந்துதான் இருக்கிறது. (1 கொரி.11:18) என்றாலும் தவிர்க்க முடியாமல் செய்த தவறையே செய்து கொண்டிருக்கிறார்கள். திராணியில்லாவிட்டாலும் தேவனுக்காக எதையாவது செய்ய வேண்டும் என்று துடிக்கிறார்கள்; பாராட்டித்தான் ஆக வேண்டும்.

ஆனால் அளவுக்கதிகமான போராட்டங்கள் ஊழியர்களின் எல்லைகளில் ஏற்படுவதற்கு காரணம் இந்த ஒற்றுமை இல்லாததினால் என்பது தெளிவாகிறது. (1 கொரி. 13:11)

புத்தகத்தை மார்க்ட்வைன் நகைச்சுவையாக எழுதுகிறார். "உண்மையில் எறும்பு எதுவுமே செய்வதில்லை. தன்னை அப்பாவியான ஒருவர் உற்று நோக்கிக் குறிப்பெடுக்க முயற்சிக்கிறார் என்பது தெரிந்ததும்தான் அவைகள் வேலை செய்யவே தொடங்குகின்றன!"

மற்றவர்கள் தன்னுடைய popularity-ஐ (புகழ் மயக்கம்) கவனிக்க வேண்டும்; என்று நினைப்பது தான் சுவிசேஷ வரலாறுகளின் அடிச்சறுக்கல்கள் (drawbacks). (மத்தேயு. 6:4,6,17,18)

சொல்ல வருவது என்னவென்றால்; ஊழியர்களைக் குறை சொல்லாமலிருப்போம். எப்படியாவது தேவத் திட்டத்தின்படி தேவாலயத்தைக் கட்டி முடித்து விடுவார்கள். அவர்களுக்காக ஜெபிப்பதை மாத்திரம் நிறுத்த வேண்டாம்; மீதி காரியத்தைத் தேவன் பார்த்துக் கொள்வார்.

இந்த எறும்பிடம் போய் ஞானத்தைக் கற்றுக் கொள்ளச் சொல்கிறார் தேவன்! அவற்றை விட 10,00,000 மடங்கு பெரிய அளவில் இருக்கும் மனிதர்களாகிய நமக்கு அவைகளுக்கு இருக்கும் ஞானம் கூட "சேமிப்பு" (savings) விஷயத்தில் இல்லை என்கிறார். இதை நாம் வெட்கத்தோடு ஒத்துக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

அது மட்டுமல்ல, கோடை காலத்தில் ஆகாரத்தை "சம்பாதிக்கிறது". இந்த விஷயத்திலும் நமக்கு அதற்கொப்பான ஞானம் இல்லையென்கிறது வேதம்.

இதற்குக் காரணம் எறும்பிடம் இருக்கும் ஒன்று நம்மிடம் இல்லை, அது "சுறுசுறுப்பு". நம்மிடம் இருக்கும் ஒன்று எறும்பிடம் இல்லை, அது "சோம்பேறித்தனம்". எறும்பு தூங்குவதை நாம் பார்த்திருக்க மாட்டோம். காலை 6 மணிக்கு இருக்கும் அதே சுறுசுறுப்பு பகல் 12 மணிக்கும் சாயங்காலம் 5 மணிக்கும் பார்க்க முடியும். இராத்திரி 10 மணிக்கும் சுறுசுறு என்று அலையும். 12 மணிக்கு எழும்பி விளக்கைப் போட்டால் சுறுசுறுசுறு! அதிகாலை 3.30 க்குப் போய்ப்பாருங்கள்; சுறுவோ சுறு! தேவன் இங்கே தூங்க வேண்டாம் என்று சொல்லவில்லை; எறும்பிடம் போய் ஞானத்தை, உழைப்பை, சேமிப்பை, சுறுசுறுப்பைக் கற்றுக் கொள்ளுங்கள் என்கிறார். போலியான ஒருமனப்பாடு உள்ள அற்ப ஜந்துவான எறும்பு தன்னுடைய ஆகாரத்தைத் தன் புற்றில் கொண்டு போய் சேர்ப்பது சாத்தியமாகிறது என்றால்... தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டு, அவரிடமிருந்து ஜீவ சுவாசத்தைப் பெற்று, அவருடையச் சிந்தையைப் பெற்று, அவருடன் உன்னதங்களில் உட்கார்ந்து, அவருடைய சாயலணிய துடித்துக் கொண்டிருக்கும் நாம்... ஏன் சாதிக்க முடியாது?

## *ஆகாரப் பஞ்சம்:*

***(ஆமோஸ். 8:11 ...இதோ நான் தேசத்தின் மேல் பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும்; ஆகாரக் குறைவினால் உண்டாகிய தாகமுமல்ல, கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சத்தை அனுப்புவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர்***

***சொல்லுகிறார்.)***

**வசனத்தை வாசிப்போம். சகோ. வின்சென்ட் செல்வக்குமார் என்ற கர்த்தருடைய ஊழியக்காரர் ஓர் உபவாசக் கூடுகையின் போது கொடுத்த செய்தியின் சில முக்கியமான சாராம்சம்தான் இது. (கூடுதலாகவும் சில விஷயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.)**

**சுனாமியை (Tsunami) ஐ விட ஆபத்தான subject இது. சுனாமி ஆபத்து கடற்கரையோரம் மட்டும்தான். இதுவோ எங்கும் பரவலாக, முழுவதுமாக. வசனம் ... விதை (கோதுமை மணி) கிடைக்காத பஞ்சம் தேசங்களில் வந்தால் விளைச்சலின் நிலை என்ன? விளைச்சலே இருக்காது இல்லையா? இப்படியான சூழ்நிலை வருமா? சாத்தியம் தானா? என்ற கேள்விகள் எழும்பாமல் இருக்காது. ஏனென்றால் இக்காலங்களில் வசனங்களுக்குக் குறைவில்லை. எங்கு பார்த்தாலும் எண்ண முடியாத அளவிலான சபை கூடுகைகள், கணக்கிலடங்காத தேவ ஊழியர்கள், ஆகாரத் திரட்சி, ஜீரணம் கூட ஆகாத அளவுக்கு! (வசனத்தைக் கேட்பதுடன் நின்று விடுவதால். கிரியைகளுக்குள் வராத வசனங்கள் செயலிழந்துப் போவதால்).**

**"இது நடக்கும்" என்று வேதம் முன்னறிவித்திருப்பதால் சாத்தியம் தான். அதற்கான அறிகுறிகளும் தெரிய ஆரம்பித்து விட்டன. இப்போது அல்ல, 1970-லிருந்தே அந்திக் கிறிஸ்துவின் இந்த வஞ்சகங்கள் உலக சபைக்குள்ளாக புகுந்து விட்டது. 'Eccumienical Movement' & 'W.C.C Movement' (World Church Council) இந்த இரண்டு அமைப்புகளும் வசனம் கிடைக்காத பஞ்சத்தை உருவாக்குவார்கள். அதாவது Bible கிடைக்காதபடி செய்வார்கள். (2 தெச. 2:3)**

**வீடு வீடாக நுழைந்து; துப்பாக்கியைக் காட்டி மிரட்டி, வேத புத்தகங்களை வாங்கித் தீக்கொளுத்தும் அந்தக் காலச் சம்பவங்கள் இனிமேல் நடக்கப் போவதில்லை. இப்போது நாம் வைத்திருக்கும் சத்திய வேதத்திற்குப் பதிலாக போலியான வேதாகமங்களைத் (Duplicate Bibles) தயாரித்து உங்கள் கைகளில் கொடுத்து விடுவார்கள், அவ்வளவுதான்! (1 யோவான். 4:1) உண்மையான வேதாகமங்களின் எண்ணிக்கை குறைய ஆரம்பிக்கும். அதாவது வேதமே இல்லாமல் போகாது. வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் என் வார்த்தைகள் ஒழியாது என்று தேவன் சொல்லியிருக்கிறாரே! (மத். 5:18)**

**அப்படியானால் என்னதான் நடக்கும்? வேதத்திற்கு பஞ்சம் வரும் அவ்வளவுதான். தேசத்தில் பஞ்சம் என்றால் அரிசி இல்லாமல் போகாது. கிலோ 15 ரூபாய்க்கு விற்கப்பட்ட அரிசி 500 ரூபாய்க்கு விற்கப்படும். அப்போது ஏழைகளால் அரிசியை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. நடுத்தர வகுப்பினர் 100 கிராம் வாங்கிச் செல்வார்கள். பணக்காரர்கள் வேண்டுமானால் 5 கிலோ வாங்கிக் கொள்வார்கள். ஆனால் வயிறு நிறையாது, திருப்தி இருக்காது, பற்றாக்குறைகள், பசி, பட்டினியால் வியாதிகள், சாவுகள், கூக்குரல்கள், ஓலங்கள் சகிக்க முடியாத காட்சிகள் உருவாகும். வசன பஞ்சம் நேரிடும் போது வாலிபர்களும், கன்னிகைகளும் சோர்ந்து போவார்களாம். (ஆமோஸ். 8:13) அந்த வாலிபர்களும், கன்னிகைகளும் வேறு யாருமல்ல, இதை வாசித்துக் கொண்டிருக்கும் உங்கள் பிள்ளைகளும், அவர்களின் பிள்ளைகளும் தான்!**

## *ஐயோ, மனசு பதறுகிறது, என்ன செய்யலாம்?*

**யோசேப்பு செய்தது போல செழிப்பான இந்நாட்களிலேயே நம்முடைய இளைய தலைமுறையினருக்காக வசனங்களைச் (வேதங்களை) சேர்த்து வைக்கலாம். (ஆதி. 41:48) மிகக் கஷ்டமான சூழ்நிலை இருந்தாலும் குடும்பத்தில் ஆளுக்கொரு பைபிள் கட்டாயம் வைத்திருக்க வேண்டும். கொஞ்சம் வசதி படைத்தவர்கள் ஆளுக்கு இரண்டு, அல்லது மூன்று வாங்கிக் கொண்டு இல்லாதவர்களுக்கு இப்போதே கொடுக்க ஆரம்பிக்கலாம். வசதியுள்ளவர்கள் மாதா மாதம் பத்துக்கு மேற்பட்ட (25, 50, 100 என்று அவரவர் பொருளாதாரச் சூழ்நிலைக்கு ஏற்ப) வேதங்களை வாங்கி இல்லாதவர்களுக்குக் கொடுக்கலாம். அல்லது**

சேகரித்து வைத்துக் கொண்டு யோசேப்பு செய்தது போலச் செய்ய வேண்டும். வேதம் வேண்டும் என்று கேட்டுத் தேவையுடன் வருபவர்களுக்கு எடுத்துக் கொடுக்கலாம். **Bible Centre-**ல் வேதத்தை வாங்கும் போது கூட 20 ரூபாய் அதிகமாகக் கொடுத்து வாங்கலாம். வேதாகமச் சங்கம் நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருப்பதால் அதற்கு ஆபத்து எதுவும் வந்து விடாதபடி முதலில் அதைப் பாதுகாக்க வேண்டும்.

வேதாகமம் (**Bible**) வாங்கும் போது பேரம் பேசக் கூடாது. அது கடைச் சரக்கல்ல, நம்மை நித்திய ஜீவனுக்குள் அழைத்துச் செல்லப் போகிற ஜீவ வார்த்தைகள். **Zip** வைத்த பைபிள் வாங்காமல் இருப்பது நல்லது. அது விலை அதிகமாக இருப்பதால் அதிக எண்ணிக்கைகளில் வாங்க முடியாமல் போகும். 100, அல்லது 80 ரூபாய்க்கான வேதங்களை வாங்கினாலே போதுமானது. வேதம் அழகு பார்ப்பதற்காக அல்ல, உயிரைக் காப்பாற்றுவதற்காக! வசனங்களைப் பிடித்துக் கொண்டுதான் நீந்திக் கரை சேர வேண்டும்!

இந்தப் போலியான வேதத்தைத் தயாரிப்பவர்கள் என்ன செய்வார்கள் என்றால்; சபை ஒருங்கிணைப்பு என்ற பெயரில் சகல சபை மக்களையும் ஒன்றாகக் கூட்டுவார்கள். இக்காலங்களில் இப்படிப்பட்ட காரியங்களைப் பார்க்க முடிகிறது. பாரம்பரிய சபைகளுக்குள்ளாக இப்படிப்பட்ட வேலைகளில் ஈடுபட்டிருந்த இந்தப் போலி வேதாகம தயாரிப்பாளர்கள்; இப்போது "பெந்தெகொஸ்தே" (**Pentecost**) அனுபவமுள்ள சபைகள் மத்தியிலும் தங்கள் கைவரிசையைக் காட்டி, அவர்களிலும் பலரை வசப்படுத்திவிட்டார்கள். அதாவது சிலை வணக்கம் செய்யும் விக்கிரக ஆராதனைக்காரருடன் ஆவிக்குரியவர்கள் ஒருங்கிணைந்து ஆராதனை நடத்துகிறார்கள். இது எப்படி இருக்கிறது? (2 கொரி. 6:14)

இவர்களின் அடுத்த திட்டம் "மத ஒருங்கிணைப்புத் திட்டம்". இதில் கிறிஸ்தவர்களுடன் சாத்தானின் தூதர்களை வழிபடும் புறஜாதியாரும் சேர்ந்து ஆராதனை செய்வார்களாம்! அதில் மாட்டிக் கொண்டால்; பிறகு இதிலும் மாட்டிக் கொள்ள வேண்டிய சூழ்நிலை வரத்தான் செய்யும்.

பணத்தைக் காட்டியும் சபை மக்களை வசப்படுத்துகிறார்கள். வேதாகமக் கல்லூரிகளை (**Bible colleges**) பலவற்றை விலைக்கு வாங்கி விட்டார்களாம்.

இவர்கள் இந்தப் போலி வேதாகமத்தில் என்னென்ன சொல்ல முயற்சிக்கிறார்கள் என்பதையும் எழுதி வைத்து விடுகிறேன்; கடந்தோடுகிறவர்கள் வாசித்துச் செல்ல வசதியாக இருக்கும். (ஆப. 2:2)

- "இயேசுவே வழி" என்ற வேத சத்தியத்தை மாற்றி; "இயேசுவும் வழி" என்ற தவறான உபதேசத்தின் அடிப்படையில் எழுதப்படுகிறது. (கலா. 1:7)
- வேதம் பரிசுத்தாவியானவரால் எழுதப்பட்டது என்ற சத்தியம் இவர்களால் மறுக்கப்படுகிறது. வேதத்தில் தேவனுடைய வார்த்தைகளும் உண்டு, மனிதனுடைய வார்த்தைகளும் உண்டு, சாத்தானின் வார்த்தைகளும் உண்டு என்பது இவர்களின் கருத்து.
- மோசேக்குத் தேவன் தன்னை வெளிப்படுத்தியது போலவே புறஜாதியாருக்கும் தேவன் தன்னைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தித்தான் இருக்கிறார். ஆகையால் மற்ற வேதங்களையும் புறக்கணித்து விட முடியாது என்பது இவர்களின் வாதம்.
- யூதாசுக்குள் சாத்தான் புகுந்ததினால்தான், இயேசு சிலுவையில் அறையப்பட்டச் சூழ்நிலை வந்தது, உலகத்திற்கே மீட்பும் வந்தது. அதனால் சாத்தான் ஒருவகையில் நல்லவன் என்பது இவர்களது கருத்து. இது போல பல உதாரணங்களை காட்டுகிறார்கள்.
- உலகத்தின் பேரழிவுகள், இயற்கை சீற்றங்களுக்குத் தேவன்தான் காரணம் என்பதால்; அவர் நல்லவரில்லை என்பதான கருத்துகளையும் புகுத்தியிருக்கிறார்கள்.

இவர்களிடம் சிக்கிக் கொள்ளாமலிருக்க என்ன செய்ய வேண்டும் என்பதையும் பார்த்து விடுவோம். இதுதான் எல்லாவற்றையும் விட மிக முக்கியமானது.

**"ஜெபம் + உபவாசம்" தான் வஞ்சிக்கிற அந்திக்கிறிஸ்துவின் வல்லமைகளை அடையாளம் கண்டு கொள்ள ஒரே வழி.**

மோசே சீனாய் மலையின் மேல் ஏறிப்போய் தேவனோடு தனித்திருந்தான். நாற்பது நாட்கள் புசிக்காமல் குடிக்காமல் இருந்தான். இது ஜெப அனுபவத்தைக் குறிக்கிறது. தேவனை முகமுகமாக தரிசித்துப் பேசும் அனுபவம், தேவனோடு உபவாசித்து தனித்திருக்கும் போதுதான் கிடைக்கும். வீட்டிலோ, அல்லது ஏதாவதொரு உபவாச ஜெபக் கூடுகைகளிலோ மணிக்கணக்கில் உபவாசித்து ஜெபிக்கிறவனுக்குத் தேவனை நன்றாகத் தெரியும். அவருடைய பிரசன்னம் தெரியும். தெய்வத்துவங்களை நன்றாகப் புரிந்து கொள்வான். அதன் பிறகு அந்திக் கிறிஸ்துவின் காரியங்களைக் காட்டிச் சாத்தான் அவனை ஏமாற்ற முயன்றாலும் அது நடக்காது. ஜெபிக்கிறவனிடம் சாத்தானின் பாச்சா பலிக்காது. அது எப்படி? அவன் தான் தேவனை நேராகவே தரிசித்துப், பேசி விட்டு வந்திருக்கிறானே?

சீனாய் மலையில் இருந்து கற்பலகைகளில் தேவனுடைய வார்த்தைகளை வாங்கிக் கொண்டு இறங்கி வந்து கொண்டிருக்கும் மோசேயை வழிமறித்து, சில வேதபுரட்டுக்காரர்கள், (அந்திக் கிறிஸ்துவால் ஆளப்படுகிற யாராவது ஒருவர்) தேவனுக்கு விரோதமாக சில காரியங்களைச் சொல்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம்.

அதாவது "இயேசு கிறிஸ்து ஆண்டவர் இல்லை. வீணாக அவரை நம்பி இவ்வுலக சந்தோஷங்களை இழந்து போகாதே. பாவம் செய்வது தவறல்ல. அதுவும் மனிதனுடைய சாதாரண இயல்புகளில் ஒன்று அவ்வளவுதான். என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். தேவன் யாரையும் எதுவும் கேள்வி கேட்க மாட்டார், நரகத்தில் தள்ள மாட்டார். அது, இது" என்று சொன்னால் மோசே நம்புவானா? நிச்சயமாக நம்ப மாட்டான். அவன் தான் தேவனுடைய மகிமையை நேரிலேயே பார்த்திருக்கிறானே! இங்கேதான் வெற்றியின் இரகசியம் இருக்கிறது. "ஜெபமே ஜெயம்" என்ற அனுபவப்பூர்வமான வார்த்தைகளை நம் முன்பாக சென்று போன விசுவாசிகள் சும்மா எழுதி வைக்கவில்லை.

வேத வாசிப்பு, ஜெப நேரங்களை அதிகப்படுத்தினாலே போதும்; பாதாளத்தின் வல்லமைகளுக்கு நம்மைத் தப்புவித்துக் கொள்ளலாம். இதெல்லாம் புதிதானதல்ல. நினைவு தெரிந்த நாள் முதலாக நம் அம்மா, பாட்டி சொல்லி சொல்லி வரும் வாசகங்கள்தான்.

"இன்று ஆனந்த விகடன் வாசித்தீர்களா?" "இன்று குமுதம் வாசித்தீர்களா?" என்றெல்லாம் பேருந்து நிலைய 'Book stalls' எழுதியிருப்பதைப் பார்க்கும்போது; சாத்தானுக்கு இருக்கிற வேகம், அக்கறை நமக்கில்லையே என்று வருத்தம் வரத்தான் செய்கிறது. "இன்று வேதம் வாசித்தீர்களா? இன்று ஜெபம் செய்தீர்களா?" 'Stickers' அச்சிடுவோம், வீதி நெடுக ஒட்டுவோம்!

## *இச்சை (Lust) (ரோமர். 7)*

விஞ்ஞானிகள் இதை "இயற்கையானது" என்றும், இதில் "தவறு எதுவும் இல்லை" என்றும் சொல்லி வருவது தெரிந்த விஷயம். மனோதத்துவ நிபுணர்கள் இதை "மனசு சம்பந்தப்பட்ட வியாதி"களாகக் குறிப்பிட்டு வருவதும் தெரிந்த விஷயம்தான். (ரோமர். 1:21-29) ஆனால் உண்மையில் இது தேவனுக்கு விரோதமான பாவம் என்பதும், பரலோகப் பாதையின் வழியாக சாத்தானால் உருட்டி விடப்படும் இராட்சத விதை என்பதும் பலருக்கும் தெரியாத விஷயம். ரோமர் 7ஆம் அதிகாரத்தை முழுவதுமாக வாசித்துப் பாருங்கள்.

பாவம் செய்கிற எந்த மனிதனும் அதை விரும்பிச் செய்வதில்லை. பாவம் செய்யாமல் வாழ வேண்டும் என்கிற பரிசுத்தமான சிந்தனைதான் எல்லா மனுஷருக்குள்ளும் இருக்கிறது. ஏனென்றால் எல்லோரும் பரிசுத்த தேவனால் படைக்கப்பட்டிருப்பதால். பிறகு ஏன் இப்படி நடக்கிறது? சாத்தானின் பூட்டுகள் தான் காரணம்! (அப். 16:23,24) ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தால் கதவின் வெளிப்புறமாக பூட்டு தொங்குவது தெரிகிறது. வெளியே இருந்து

யாராவது ஒருவர் திறந்தால்தானே வெளியே வரமுடியும்? அந்த ஒருவர் யார்? வீட்டின் பின்வாசலைத் (back door) திறந்து கொண்டு வெளியே வந்து விடலாமே என்று யோசிக்கலாம். நீங்கள் நினைக்கும் அளவுக்கு சாத்தான் முட்டாளல்ல, முன்னொரு காலத்தில் பரலோகத்தின் பிரதான தூதர்களில் ஒருவனாக இருந்தவன். அவன் முதலில் பின்வாசல் கதவைப் பூட்டி விட்டு வந்து தான் முன் வாசல் கதவைப் பூட்டினான்!)

"இச்சை" (முட்டை) என்கிற பாவம் முதலில் "கண்களின் இச்சை" (கம்பளிப்பூச்சி) என்ற வாசல் வழியாகத்தான் உள்ளே நுழைகிறது. அடுத்ததாக அது "சிந்தனை இச்சை" (கூட்டுப்புழு)வாக உருமாற்றம் அடைகிறது. அதற்கடுத்ததாக "சிந்தனை இச்சை" (வண்ணத்துப்பூச்சி)யாக மாறி விடுகிறது. கடைசியில் உயிரைக் குடிக்கிறது. பாவத்துடன் விளையாடாதிருப்போம்.

இந்தப் பிரச்சனையில் இருந்து விடுதலையாக மனிதர்கள் முயற்சிக்காமலில்லை. (புறஜாதியாருக்குச் சொல்லவில்லை, தேவ ஜனங்களுக்காகத்தான் பவுல் இந்தக் கடிதத்தை எழுதுகிறார்) சுய அடக்குதல் "Self control" (மனதை அடக்கும் பயிற்சிகள்), 'Meditation' (தியான முயற்சிகள்), 'Counselling' (ஆலோசனைகள், புத்திமதிகள்) முயற்சிகள் எடுக்கிறார்கள்தான். கொஞ்சம் பலன் கிடைத்தது போலத் தோன்றும் அவ்வளவுதான். பிறகு மறுபடியும் வேதாளம் முருங்க மரத்தில் ஏறிக்கொள்ளும்; கீழே இறக்கினால் தோளில் தொங்கியபடி கதை வேறு சொல்லும்!

## *சரீர முயற்சியினால் சாத்தானை ஜெயிக்க முடியாது. (1 தீமோ. 4:8)*

இச்சை என்றால் கண்களின் இச்சை மட்டுமல்லாது சரீரத்தின் சகல அவயவங்களையும் ஒப்பிட்டுக் கொள்ளலாம். அடுத்தவனின் மனைவி, சகோதரி, மகள், பேத்தியின் மீது என்று மட்டும் அர்த்தப்படுத்தாமல் அடுத்தவரின் வீடு, நிலம், வாகனம், மாடு, கோழி, நாய், கண்ணாடித் தொட்டிக்குள் கிடக்கும் மீன் என்று எதுவானாலும் இருக்கலாம். கண்கள் இருப்பதால் பார்க்க வேண்டிய கட்டாயம்தான்; அது தவறில்லை. ஆனால் "இது எனக்கு இருந்தால்"? எனக்குச் சொந்தமாக மாற்ற என்ன செய்யலாம்? "இப்படிப்பட்ட கண்ணோட்டம்" தான் பாவமாகிறது. (யாத்.20:17) அந்தப் பாவம் கர்ப்பம் தரிக்கும் போது மரணத்தைப் பெற்றெடுத்து நம் கைகளில் தருகிறது. அதற்குத் தாலாட்டுப் பாடக் கூட நாம் இருக்க மாட்டோம். (யாக். 1:15)

சரீரம் மாமிசத்திற்கு விரோதமாகவும், மாமிசம் சரீரத்திற்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. நமக்குள்ளாகவே சண்டை நடக்கிறது. பரிசுத்தாவியானவருக்கும் சாத்தானின் வல்லமைகளுக்கும் நடுவாகப் போராட்டம்! நியூட்டனின் "மூன்றாவது இயக்க விதி" எல்லோருக்கும் தெரிந்த விதிதான்; ஆனால் சிலருக்குப் புரியாத விதி. நமக்கு வசனங்கள் தெரியும் தான். தினமும் வேதத்தை வாசிக்கிறோம், வசன அடிப்படையிலான பிரசங்கங்களைக் கேட்கிறோம். புரிந்து கொள்கிறோமா? என்பதுதான் கேள்விக்குறியாகிறது.

ஒவ்வொரு செயலுக்கும் அதற்குச் சமமாக, அல்லது எதிரிடையான எதிர்ச் செயல் ஒன்று இருப்பதாக இவ்விதி கூறுகிறது. அதாவது ஒரு குதிரை வண்டியை இழுக்கும் போது; வண்டியும் குதிரையை இழுக்கிறது! ஒரு கண்ணுக்குத் தெரியாத போராட்டம் அங்கே நடக்கிறது. (ஆவி & சரீரம்) போல! நம்முடைய மாமிசத்தில் நன்மை வாசமாயிருப்பதில்லை என்று வாசிக்கிறோம்; அப்படியானால் அதில் தீமைதான் வாசமாயிருக்கிறது. ஆனால் நம்முடைய ஆவியில் நன்மை வாசமாயிருக்கிறது, அதில் தீமை வாசமாயிருக்கவில்லை.

குதிரையும் வண்டியும் ஒன்றையொன்று இழுக்கும் போது; இருந்த இடத்திலேயேதானே இருக்க வேண்டும்? ஆனால் வண்டி நகருகிறதே! விசைகள் சமமாக இருந்த போதிலும் ஏன் ஒன்றையொன்று ரத்து செய்து கொள்ளவில்லை? அப்படியானால் இந்த விதி தவறா? இல்லையில்லை, நாம் புரிந்து கொண்டதுதான் தவறு. சமமான விசைகள் ஒரே விதமான செயலைத்தான் செய்ய வேண்டும் என்பதில்லையே? அது அந்த பொருளையும், அது

விசையை எதிர்த்து செயல்படும் எதிர்ச்செயலின் மதிப்பையும் பொறுத்தது.

இச்சை என்ற "பாவத்துக்கு" நம்மை இழுக்க சாத்தானின் வல்லமைகள் நம் சரீரத்தின் வழியாக ஆவியை நோக்கிச் செயல்படுகிறது. ஆனால் அந்த "பாவத்திலிருந்து" நம்மை இழுக்க பரிசுத்தாவியானவரின் வல்லமை நம் ஆவியிலிருந்து சரீரத்தை நோக்கிச் செயல்படுகிறது! (இப்போது புரிந்திருக்கும்).

குதிரை இழுக்கும் போது வண்டி எதிரிடையாக செயல்படாவிட்டால்; கொஞ்சம் தள்ளி விட்டதுமே வண்டி ஓடத் தொடங்கி விடுமாதலால் குதிரை நமக்குத் தேவையற்றதாகி விடுகிறது. வண்டியின் எதிர்ச்செயலைத் தொடர்ச்சியாக சமாளிப்பதற்காகவே நமக்கு குதிரை தேவைப்படுகிறது!

பரிசுத்தாவியானவர் மட்டும் நமக்காகப் போராடாவிட்டால்; நம் இச்சை என்ற கொடிய பாவம் திசை தெரியாமல் தறிகெட்டுப் பாய்ந்தோட ஆரம்பிக்கும். கடைசியில் வண்டி பாதாளத்துக்குள் பாய்ந்தோடி விடும். பரிசுத்தாவியானவரின் அபிஷேகம் எந்த அளவில் முக்கியமானது என்பது புரிந்திருக்கும்.

வண்டியின் வேகத்தைக் கட்டுப்படுத்திச் சரியான பாதையில், சரியான இடத்துக்கு அழைத்துச் செல்ல குதிரை பயன்படுகிறது. அபிஷேகம் இல்லாமல் இலக்கை அடைய முடியாது. முற்காலங்களில் அப்படி இருந்தோம் தான். ஆனால் இயேசு கிறிஸ்து மாமிசத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார், பூட்டை உடைத்தார், நம்மை வெளியேக் கொண்டு வந்தார், "யெகோவா நிசி" என்ற கொடிகளை நம் கைகளில் தந்தார். தேவனுடைய பிள்ளைகளின் சொத்துக்களைக் (பரிசுத்தமும் இதில் அடங்கும்) கைவசப்படுத்தி வைத்திருக்கும் சாத்தானின் எல்லைகளுக்குள்ளாக அவைகளை மேலும் மேலும் நாட்டுவோம்.

நம் ஆசை இச்சைகளைச் சிலுவையில் அறைந்திருக்கிறோம். சிலுவையில் அறையப்பட்ட எதுவானாலும் செத்துத்தான் ஆக வேண்டும். சிலருக்கு இச்சை செத்து விட்டது. சிலருக்குக் குற்றுயிரும், குலையுயிருமாக சிலுவையில் போராடிக் கொண்டிருக்கிறது. சீக்கிரமாகச் செத்து விடும் நம் விலாவில் சொருகப்படும் ஈட்டியால்!

## கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள்: (மத். 7:7)

வேதத்தில் நாய்களைப் பற்றி ... பல வசனங்கள் எழுதப்பட்டிருக்கிறது. பெரும்பாலும் அவைகளைப் பற்றி நல்ல செய்திகள் இருப்பதில்லை. அதனால் பல கிறிஸ்தவர்கள் நாய் வளர்க்கப் பிரியப்படுவதில்லை. ஆனால் உலகில் வாழும் மிக முக்கியமான 3,500 வகையான மிருகங்களில் எனக்கு முதலில் பிடித்தது நாய்கள்தான்!

எங்கள் வீடு இருக்கும் ரோட்டில் ஒரு ஆதரவற்ற, புறக்கணிக்கப்பட்ட நாய் (Street dog) வசித்து வருகிறது. சரியானபடி சாப்பாடில்லாமல் வேதனையோடு அலைந்த அந்த நாய் நாளடைவில் "தேடி" என்னைக் கண்டுபிடித்தது. என்னில் கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருந்ததினால் தினமும் அதற்குச் சாப்பாடு கொடுப்பேன்.

நான் வெளியே வராமலிருந்தால்; என் கவனத்தை ஈர்ப்பதற்காக முன்வாசல் பக்கமாக வந்து நின்று குரைக்கும். நான் வெளியே சாப்பாட்டை எடுத்துக் கொண்டு வர அது வசதியாக இருக்கும். இவ்விதமாக அது "கேட்டுப்" பெற்றுக் கொண்டது.

குரைத்தும் சில வேளைகளில் நான் வெளியே வராவிட்டால்; வாசல் கதவை (Gate) முன் கால்களால் உரசி சத்தத்தை உருவாக்கும்; அப்போது என்னால் சத்தம் கேட்டு வெளியே வர முடிந்தது. இவ்விதமாக "தட்டி" கதவைத் திறக்க வைத்தது.

ஐந்தறிவுள்ள அந்த நாயின் செய்கைகளைக் கவனித்துப் பார்க்கும் போது; அதற்கு வேதத்தின் பிரமாணங்களைக் கற்றுக் கொடுத்தது யார்? என்று நினைக்கத் தோன்றியது. நம்மை உருவாக்கிய தேவன்தான் அதையும் உருவாக்கினார் என்பதால் அதற்கும் தேவனைத் தெரியும். (அதற்குப் பேச முடியாததினால் அதற்கு தேவனைத் தெரியாது என்று நாம் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறோம்.)

அது போகட்டும். நம் தேவைகளைத் தேவனிடம் பெற்றுக் கொள்ள நான் ஜெபிக்க வேண்டும் என்பதை இப்படியாக கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள் என்று மூன்று விதமாகப் பிரித்துத் தேவன் இயேசு கற்றுத் தருகிறார்.

ஒரு முறை நான் சாப்பாடு கொண்டு வருவதற்கு சில நிமிடங்கள் தாமதம் ஆனது. வந்து பார்த்தால் நாங்கள் குடியிருக்கும் முதல் மாடிக்கு (1st floor) 7 படிகள் வரை ஏறி வந்து கொண்டிருந்தது! ***மத்தேயு 11:12 யோவான்ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும் பரலோக ராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது; பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள். அல்லேலூயா!***

விதைக்கிறவனுக்கு விதையைத் தருகிறவர் தேவன்தான் என்று பார்த்தோம். அதுமட்டுமல்ல "வயல்வெளி" யையும் நாம் கேட்டுத்தான் பெற்றுக் கொள்ள வேண்டும். விதையைக் கேட்கும் முன்னதாகவே வயலைக் கேட்பது நல்லது. வயலிருந்தால்தான் விதைக்க முடியும்.

யோசு. 15:18, நியா. 1:14 ஆகிய வசனங்களில் காலேப்பின் மகள் அக்சாள் தன் கணவன் ஒத்னியேலுடன் புறப்படும் போது நடக்கும் காரியங்களைப் பார்ப்போம்.

தன்னுடைய அப்பா தனக்குச் சீதனமாக நல்ல வயல் வெளியைத் தருவார் என்று கடைசி வரை எதிர்பார்த்திருந்தாள்; அனால் அந்த எதிர்பார்ப்பை மனசுக்குள்ளேயே வைத்திருந்தாள். அவளுடைய மனதின் விருப்பத்தை அவள் வெளிப்படுத்தாதவரை அவளுக்கு அது கிடைக்கவில்லை. வாகனத்தில் ஏறும்வரை அவள் கேட்கவில்லை. இனிமேலும் கேட்காவிட்டால் கிடைக்காது என்று புரிந்து கொண்ட அவள் கழுதையை விட்டுக் கீழே இறங்குகிறாள். அவள் இறங்கும்போதே அவளுடைய "தேடல்" தகப்பனாருக்குப் புரிந்திருக்க வேண்டும்; "என்ன வேண்டும்?" என்று கேட்கிறான்.

"நீர்ப்பாய்ச்சலான நிலம்" வேண்டும் என்று கேட்ட அவள் தனக்கு இருந்த "வறட்சியையும்" சுட்டிக் காட்டுகிறாள். தகப்பனுடைய இருதயம் பரிதபித்திருக்க வேண்டும். "நிலம்" தான் கேட்டாள்; அவனோ "நிலங்களைத்" தந்தான் அல்லேலூயா! ஒருமையை (Singular) பன்மை (Plural) ஆக்கும் ஜெபம்!

நம்முடைய உரிமையை விட்டுவிடாதிருப்போம்; நம் அப்பாதானே! என்ன தயக்கம்? நீர்ப்பாய்ச்சலான நிலங்களைக் கேட்போம், விதைப்போம். சூரியன் உதிக்கும் திசையின் நிலங்களையும் கேட்போம், அது மறையும் திசையின் நிலங்களையும் விடாதிருப்போம். பூமியின் ஒருமுனை துவங்கி மறு முனை வரைக்கும் சுவிசேஷமாக வசனங்களை விதைப்போம். சமுத்திரத்தின் எல்லையெங்கும் வேத வசனமாகிய இயேசுவை விதைப்போம், அது நீர்ப்பாய்ச்சலான நிலம், விளைந்தே தீரும்.

***தைரியமாக இந்தக் கடைசித் தருணத்திலாவது நமது நிலையில் இருந்து இறங்கி வருவோம்.***

"அந்த நாய்" பற்றி இன்னும் சில காரியங்கள்: கதவு (Gate) பூட்டப்படாமல் இருக்குமானால் தள்ளிக் கொண்டு உள்ளே வந்து விடும்; வீட்டுக் கதவையும் தள்ளித் திறந்து உள்ளே எட்டிப் பார்க்கும். அந்த நாய் இப்படி செய்வதினால் கோபம் வந்து ஒரு நாள் கூட அதை நான் விரட்டியடித்தது கிடையாது. அதனுடைய விடாப்பிடியான குணத்தால் கவரப்பட்டு இன்னும் நல்ல சாப்பாட்டைக் கொடுக்க நான் முயற்சியெடுப்பேன். ஒரு சாதாரண மனித அன்பு இவ்வளவாக செயல்பட முடியுமானால்; தேவ அன்பு?

***தேவன் எவ்வளவு பெரியவர் என்பது தெரிந்தால்; அவரது அன்பின் அளவும் புரியும்.***

நாம் வாழும் பூமி "சூரியக் குடும்பத்தில்" ஒன்று. சூரியன் பூமியை விட 200 மடங்கு பெரியது. சூரியன் இருக்கும் 'Milky way' ல் 48,000 கோடி (more) நட்சத்திரங்கள் உள்ளன. இதே போல 10,000 கோடி (more) மண்டலங்கள் இருக்கிறது. இத்தனை மகத்துவமுள்ள

மகா பெரிய தேவனின் அன்பும் அதே அளவுடைய பரிமாணத்தில் இருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை இல்லையா?

அக்சாளைப் போல குதிரை மேல் ஏறிய பிறகு யோசிக்கலாம் என்று இருக்க வேண்டாம். குதிரை புழுதியைக் கிளப்பியபடி ஓட ஆரம்பித்த பிறகு எதுவும் செய்ய முடியாது. குதிரையைக் கட்டிலிருந்து அவிழ்க்கும் போதே யோசியுங்கள்; அல்லது அதன் மேல் சேணம் வைத்து ஏறும் போதாவது யோசித்து விடுங்கள்; செயல்படுங்கள்! நீர்ப்பாய்ச்சலான வயல்வெளிகளை நம் கையகப்படுத்துவோம்.

## கசப்பான வேர்: (எபி.12:15)

“முளைத்தெழும்பி” கவனியுங்கள்! வேர் முளைக்க வேண்டுமானால் அது விதையிலிருந்துதான் முளைத்தெழ முடியும். கசப்பான விதையை இருதயத்தில் போட்டது யார்? மத்.13:28 வருபவனேதான்! அவனிடம் இருக்கும் கசப்பான விதைகள்: “மன்னிக்க முடியாத தன்மை, பழிவாங்கும் உணர்வு, வன்மம் ...” பட்டியல் நீண்டு கொண்டே போகும் என்பதால் கலா.5:19-21 ல் வரும் “மாம்சத்தின் கிரியைகள்” பட்டியலை வாசித்து விடுவது நல்லது.

விதையிலேயே தோண்டி எடுத்துவிட்டால்; துளிர்விடாது, வேரும் முளைக்காது. வேர் முளைக்க ஆரம்பிக்கும் போதே பிடுங்கிப் போட்டு விடுவதில் மிக அவசரம் தேவை. சல்லி வேர்கள் முளைத்துவிட்டதானால் பிடுங்குவது கஷ்டம், வேர்களும் அறுந்து போகும்.

சீன நாட்டின் “சோகோ” நகரைச் சேர்ந்த “ஹன்” என்பவருடைய 10 மாத பெண் குழந்தை நீண்ட நாட்களாக சுவாசக் கோளாறினால் அவதிப்பட்டு வந்தது. “நிமோனியா”வாக இருக்கலாம் என்று முடிவெடுத்துக் கொடுக்கப்பட்டச் சிகிச்சைகள் வீணாகப் போனது. பிறகு “பீஜிங்”கில் உள்ள “செங்கோ பல்கலைக் கழக” ஆஸ்பத்திரியில் சேர்த்து அறுவை கிசிச்சை அளித்தனர். குழந்தையின் நுரையீரலில் 3 செ.மீ. உயரத்துக்குப் புல் வளர்ந்திருப்பதைப் பார்த்து அதிர்ந்தனர். வீட்டிலுள்ள புல்வெளியில் குழந்தை விளையாடும்போது; மூக்கின் வழியாக புல்லின் விதை புகுந்து நுரையீரலை அடைந்திருக்கிறது. பிறகு அங்கிருந்த நல்ல சூழ்நிலையால் வளர்ந்திருக்கிறது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்! (ஆனால் இதற்கு முன்பாக யாருக்கும் இப்படி நடந்ததில்லை என்றும் தெரிவித்தனர்.) (தினத்தந்தி 21.9.2007 “வெளிநாட்டுச் செய்திகள்” பக்.13)

கவனியுங்கள்; குழந்தையின் மீது எந்தத் தவறும் இல்லை; விளையாடும் போது இந்த விபரீதம் நடந்திருக்கிறது அவ்வளவுதான். சின்ன விதை சேங்கோ பல்கலைக்கழக மருத்துவமனையின் எல்லைகளையே கலக்கியது. விடாப்பிடியான முயற்சிகள் புல்லைப் பிடுங்கியெறிந்து குழந்தையின் உயிரைக் காப்பாற்றியது. சுவாசக்கோளாறு (Breathing problem) தானே என்று கவனிக்காமல் சமாளித்தபடி இன்னும் சில மாதங்கள் கடத்தியிருந்தால்?

## கசப்பு விதையை வளர விட்டுவிட்டால் என்ன நடக்கும்?

“கலக்க”முண்டாகும். சிந்தனைகள் குழம்ப ஆரம்பிக்கும். தேவனுடைய பிள்ளைகளின் சிந்தனையின் அடித்தளமே (Basement) “கிறிஸ்துவின் சிந்தை” தான். கசப்பான வேர்கள் அதனூடாக துளை போட்டுச் செல்லும் போது அந்த சிந்தை கெடுக்கப்படுகிறது. அது கொஞ்சம் கொஞ்சமாக சாத்தானுடைய சாயலைப் பெற்றுக் கொள்கிறது.

விஷயம் இத்தோடு நிற்பதில்லை; அடுத்ததாக என்ன நடக்கிறது?

அநேகரைத் “தீட்டு”ப்படுத்துமாம். அதாவது அடுத்தவர்களையும் அது பாதிக்கிறது.

மாமிசத்தின் கிரியைகள் மொத்தம் 17 பிரிவுகள் (17 sections) அமைத்து வேலை செய்கிறது.

- ☛ விபச்சாரம்: ஒரு மனிதனுடைய இருதயத்தில் இந்த விதை முளைத்தெழும்பும் போது; அது இன்னொரு நபரையும் பாவத்துக்குள் இழுத்து; அவனை(ளை)யும் தீட்டுப்படுத்துகிறது.
- ☛ வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம்: மேற் சொன்னது பொருந்தும்.

- ☛ **விக்கிரக ஆராதனை:** சிலை வழிபாடு மட்டுமல்ல; தேவன் இருக்க வேண்டிய இடத்தில் வேறு எது இருந்தாலும் அது விக்கிரகம் என்பது எல்லோருக்கும் தெரியும். ஒரு தகப்பனாருக்கு தன் பிள்ளையென்றால் உயிர்; அவன் மேல் பைத்தியமாக இருப்பதால் அவனை விக்கிரகமாக்கிவிடுகிறார். இதனால் அந்தப் பையனுக்கும் பிரச்சனைகள் வர வாய்ப்புண்டு. அளவுக்கதிகமாக செல்லமாக வளர்க்கப்படும் மகன் கெட்டுப்போக வாய்ப்புண்டு.
- ☛ **பில்லி சூனியம்:** இதனால் சீரழிந்த குடும்பங்கள் ஏராளம். இதில் சாத்தானுடைய தூதர்கள் (அசுத்த ஆவிகள்) இயக்கிவிடப்படுகிறார்கள்! அவர்கள் போய் என்னவெல்லாம் செய்வார்கள் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.
- ☛ **பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள்:**

  இவைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. இவைகளை அப்படியே வளர விட்டுவிட்டால்; "கொலை" யில் முடியும் ஆபத்தும் உண்டு.
- ☛ **பிரிவினைகள், மார்க்கபேதங்கள்:** இவற்றைத்தான் சபையில் பார்க்கிறோமே! இதனால் பொறா(ஆ)மை வேர் விடுகிறது. இந்த ஆமை சாதாரணப்பட்ட ஆமையல்ல; முயலையே முந்திச்செல்லும் (Overtake பண்ணும் ) ஆமை!
- ☛ **வெறி:** "குடி" நல்ல உதாரணம். குடிகாரனின் மனைவி, பிள்ளைகள், அம்மா, அப்பா எல்லோருடைய மனதிலும் அவனைப் பற்றிய கசப்பு பரவி நிற்கும்.
- ☛ **களியாட்டு:** இவன்தான் மேற்சொல்லப்பட்டவைகள் எல்லாவற்றிற்கும் "குரு"; அதாவது "சினிமா". கசப்பு மட்டுமல்ல; உலகத்தில் எத்தனை பாவங்கள் உண்டோ; அத்தனை பாவங்களையும் ஊக்குவித்து; வாத்தியார்களை அமர்த்திப் பாடம் சொல்லிக் கொடுக்கும். அர்த்தம் புரியாவிட்டால் புரட்டிப் பார்த்து தெரிந்து கொள்ள (Dictionary) அகராதியும் கொடுக்கும்! இளைய தலைமுறையினரின் இருதயத்தைக் கெடுக்கும், முடிவாக உயிரைக் குடிக்கும்.

கசப்பு விதை விழுந்து விட்டதா? பரவாயில்லை; ஒன்றும் குடி முழுகிப் போய் விடவில்லை. விதைக்குள் மரம் உறங்கிக் கொண்டுதான் இருக்கிறது! சீக்கிரமாக வந்து மண்வெட்டியை எடுத்துக் கொண்டு ஓடுங்கள்! அதன் தூக்கம் கலைந்து தலையை வெளியே நீட்டினால் போச்சு. பலர் கோடாரிகளுடன் வர வேண்டியதாயிருக்கும்! நம் தேவன் இயேசு திராட்சைத் தோட்டக்காரர். அவருக்குத் தோட்ட வேலை தெரியும். முன்னொரு காலத்தில் உங்கள் குறைகளை நறுக்கியெறிந்தவர் அவர்தான். விதையா பெரிய காரியம்? உங்களுக்கு உதவி செய்வார்! "எனக்கு கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது" என்று அறிக்கை செய்யுங்கள்; அடிக்கடி, கசப்புணர்வு தோன்றும்போதெல்லாம் செய்வோம். காலப்போக்கில் உண்மையாகவே இருதயத்தில் கிறிஸ்துவின் சிந்தை உருவாகியிருப்பதைப் பார்க்க முடியும். அதற்கு முன்பாகவே கசப்பு தன் இடத்தைக் காலி செய்துவிட்டுப் போயிருக்கும், அல்லேலூயா!

## *சங்கீதம் 23 (குட்டி பைபிள்!)*

குட்டி பைபிள் என்று சொல்லும் அளவுக்கு ஆழமான பல சத்தியங்களை உள்ளடக்கியது. அதனால் தான் சிறுபிள்ளை முதலாகவே இதை மனப்பாடமாக்கப் பயிற்சி கொடுக்கிறார்கள். இந்த சங்கீதம் விதையாகி என் இருதயத்தில் ஏற்படுத்திய விளைச்சலின் சில கதிர்மணிகள். பலருக்கு பிரயோஜனமாயிருக்க வாய்ப்புண்டு.

### *1. கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்.*

கர்த்தரை நம் மேய்ப்பராக நாம் தெரிவு செய்யும் முன்னதாக; அதாவது இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்கு முன்னதாக ஒரு குட்டிச்சாத்தான் நம் மேய்ப்பனாயிருந்தான்! அதனால் நாம் தாழ்ச்சியடைந்தோம்! நம் அப்பாவிடம் போய் சண்டை போட்டு; சொத்தை எழுதி வாங்கிக் கொண்டு போய் ... (பட்டிக்காட்டு கிராமங்களின் படிப்பறிவில்லாத அப்பாமார்கள் தன் பிள்ளைகளை இப்படியாகத்

திட்டுவார்கள். அவன் ஒரு உதவாக்கரை, ஊர்மேயப் போயிருக்கிறான், சாயங்காலம் வருவான் என்று!) ஏறக்குறைய இந்த வார்த்தைகள் தான் பொருத்தமாக இருக்கும்.)

நம் அருமை அப்பா வைர மோதிரம், காலணிகள், கொழுத்த விருந்துடன் காத்திருக்க; அந்தோ! மகனோ பஞ்ச காலத்தில் சிக்கி, ஒரு விவசாயியினுடைய விதையுமில்லாத, விளைச்சலுமில்லாத காய்ந்து போன வயல்காட்டில் பன்றிகளை மேய்த்துக் கொண்டிருந்தான். பன்றிகளுக்கு வயிறு பசிக்குமே என்று சரியான நேரத்தில் வந்த வேலைக்காரன் தவிடு குழைத்து வைத்தான். பரிதாபம், இந்த மனித ஜென்மத்தை மறந்தே போனான்.

சாத்தானையே மேய்ப்பனாக நீடிக்க விட்டிருந்தால்? செத்துப் போயிருப்பான்; நல்லகாலம் அவனுக்கு "புத்தி தெளிந்தது" எங்கேயிருந்து விழுந்தானோ, அந்த "ஆதி மேன்மையை" மீண்டும் ஆலம் விழுதாக பிடித்துக் கொண்டு தொங்கி ஏறினான்.

## 2. அவர் என்னை புல்லுள்ள...

எனக்கு 6 வயதாயிருக்கும் போது; ஆனைமலையில் (வெல்லோனி எஸ்டேட்) உள்ள (Elementary school) ஆரம்ப பள்ளிக்கு நடந்து செல்லும் போது வேடிக்கை பார்த்துக் கொண்டு செல்வதுண்டு. தேயிலைத் தோட்டங்களுக்கு நடுவாக விளைச்சலில்லாத பகுதிகளும் இருக்கும். அவைகளில் அடர்த்தியாகப் பச்சைக்கம்பளி போலப் புற்கள் வளர்ந்திருக்கும். நிறைய மாடுகள் மேய்ந்து கொண்டிருக்கும்.

அதைப் பார்க்கும்போது; இரண்டு வகையான சிந்தனைகள் எனக்குத் தோன்றுவதுண்டு. வீட்டில் பீன்ஸ் செடி வளர்க்க, தோட்டக்காரன் மூலமாகப் பாத்திகள் தயார் செய்து; அதில் இடைவெளி விட்டு பீன்ஸ் விதைகளை ஊன்றி வைப்பதைப் பார்த்திருக்கிறேன். இவ்வளவு புல் வளர்ந்திருக்கிறதே! விதை விதைத்தது யார்? என்று யோசிப்பதுண்டு. அந்த 6 வயது சிறிய மூளையில் இன்னொரு எண்ணம். அது! கையின் ஆள்காட்டி விரலைக் கண்ணுக்கு அருகில் வைத்துக் கொண்டு தூரத்தில் மேய்ந்து கொண்டிருக்கும் மாடுகளை அளவீடு செய்வேன். அவை 1 c.m. உயரம் கூட இருக்காது, ஆச்சரியமாயிருக்கும்! (Stereoscopic effect of the human eyes). ஆனால் அதற்குப் பிறகு அவ்வளவு சின்ன மாடுகளை நான் பார்த்ததில்லை. நல்ல மேய்ச்சல் காட்டுவதற்காக முன்னதாகவே விதை விதைக்கும் தேவன்! உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைந்தோம். அல்லேலூயா!

கரைபுரண்டு ஓடும் யோர்தான் நதியில் சென்று தண்ணீர் குடிக்க முடியாது. பக்கத்தில் போனாலே ஆளையும் இழுத்துக்கொண்டு போய்விடும். அதனால் தண்ணீர் தடாகத்தண்டையில் (Pool) அழைத்துப் போகிறார். பலவித போதனைகளால் அலைசடிப் பட்டு அலையாதபடி சரியான, வசன அடிப்படையிலான போதனைகள் தரப்படும் இடங்களுக்கு நடத்துவார். சகல வாசஸ்தலங்களிலும் மேய்ச்சல் காட்டுவார். அதனால் நமக்குப் பசியோ, தாகமோ, வருவதில்லை.

சாத்தான் மேய்ப்பனாக இருந்த காலங்களில்; "தார்" பாலைவனத்தில் மேய்ச்சல் காட்டினான்; அங்கே கானல் நீரைத் தேடி அலைந்தோம்; மானாகக் கதறினோம்; என்ன?... மறந்து போச்சா?

## 3. அவர் என் ஆத்துமாவைத் தேற்றி...

இயேசு நம் ஆத்துமாவைத் தேற்ற வேண்டுமானால்; அதற்கு என்னவோ நடந்திருக்கிறது, அது என்ன? சாத்தான் நம் ஆத்துமாவைச் சோக இருளில் ஊற வைத்திருந்தான். நம் நம்பிக்கையின் மீது இருள் மொய்த்துக் கொண்டிருந்தது. "ஆறுதலின் தேவனாக" இயேசு நம் ஆத்துமாவின் எல்லைகளில் வெளிப்படாமல் இருந்திருந்தாரேயானால்; கரைந்து இல்லாமல் போயிருப்போம். நம் வாயில் ஊற்ற வேண்டும் என்று தயாராக இருந்த பால் சங்கைச் சாத்தானின் கையிலிருந்து தட்டிவிட்டோம்!

சாத்தானும் நம் ஆத்துமாவைத் தேற்றிய காலங்களுண்டு! Past ஐ revert பண்ணினால் (இறந்த கால நினைவுகளுக்குள் சென்றால் பார்க்கலாம்.) எப்படியெல்லாம் தேற்றினான்? "வாழ்க்கை வாழ்வதற்கே" என்றான். "அனுபவி ராஜா அனுபவி" என்றான். "பாவம் என்பது அவரவர் கண்ணோட்டத்தைப் பொறுத்தது, இதெல்லாம் பாவமாகுமா?" என்றான். "ஜலதோஷம் என்பது ஒரு வியாதியல்ல, அதே போல் சிறிய பொய்கள் பாவமல்ல" என்றான். "எல்லாம் விதிப்படிதான் நடக்கும்" என்று சொல்லி தேவனுடைய இடத்தில் விதியை வைத்தான்.

அவன் சொன்னதெல்லாம் சரியாகத்தான் தெரிந்தது. அப்படியே நடந்தோம், இரட்சிப்பின் வெண் வஸ்திரத்தின் நிறம் மங்கி; சாம்பல் பூத்துப் போனது. செத்த ஈ பரிமள தைலத்தைக் கெட்டுப்போக வைத்தது. உண்மையில் நம் ஆத்துமா தேற்றப்படவில்லை; வியாகுலம் அதிகரித்தது.

இயேசு என்ற வல்லமையுள்ள நாமத்தினால் நீதியின் பாதை நமக்கு முன்பாக விரிந்தது. அதில் ஜீவன் இருந்தது; இன்னொரு பக்கத்தில் சாத்தானின் அநீதியின் பாதை விரிந்தது; அதில் "மரணம்" இருந்தது. நம் choice தான். இந்த இரண்டு பாதைகளும் சந்திக்கும் இடத்தில் நின்று, நாம் சிந்திக்க வேண்டியது மிக அவசியம்.

நானும் ஓர் காலக்கட்டத்தில் அப்படி ஒரு இருவழிப் பாதையில் நிறுத்தப்பட்டேன். அநீதியின் பாதையில் ரோஜாப் பூக்கள் கொத்துக் கொத்தாக வழிமறித்து; விழியைப் பறித்தன! அந்த அழகு நம் சாரோனின் ரோஜாவையே மறக்க வைத்தது. ஒரு நிமிஷம் தான் "சாரோனின் ரோஜா" தன்னிலிருந்த வாசனைத் தைலத்தை என் மீது ஊற்றினார்; உணர்வு வந்தது.

"ஆண்டவரே, நீதியின் பாதையில் நடக்க ஆசைதான்; ஆனால் அங்கே மலர்களில்லையே?" என்றேன்! "மலர்கள் இல்லைதான், ஆனால் மகுடம் உண்டே!" என்றார். தேவன் கட்டாயப்படுத்தவில்லை. நீதியின் பாதைக்கு நேராகக் கையை நீட்டிச் சரி என்று (Yes) சொன்ன பிறகுதான் அதன் வழியாகக் கையைப் பிடித்து நடத்தினார்.

அநீதியின் பாதையை நோக்கிக் கையை நீட்டியவர்களைச் சாத்தான் நடத்திக் கொண்டிருக்கிறான். அவர்கள் விரும்பியபடியெல்லாம் வாழக் கற்றுக் கொடுக்கிறான். மாமிசத்தின் கிரியைகள் பட்டியலில் வரும் எல்லா பாவங்களுக்கும் உதவி செய்கிறான். அவற்றின் மூலமாகவே பரலோகம் செல்லலாம் என்ற நூதன உபதேசத்தை வேறு கொடுக்கிறான்.

## 4. நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே ...

நீதியின் பாதை இலகுவாக (smooth) இருந்தது என்று சொல்வதற்கில்லை. இருள் போர்வையைத் தூக்கிக் கொண்டு வந்தது. தீவிரவாதிகளுக்கும், சம்பல் கொள்ளைக்காரர்களுக்கும் தான் இருள் பிடிக்கும்; ஏனென்றால் அவர்கள் இருளின் பயங்கரங்களோடு பழகி விடுகிறார்கள். இருட்டான இடங்களிலும் அவர்களுக்குக் கண்கள் தெரியும்! தங்கள் காரியம் வெளியே தெரியக்கூடாது என்பதற்காக இருளிலேயே நடக்க விரும்புகிறார்கள். (யோபு.24:17) அப்படிப்பட்ட இருட்டான பிரதேசங்களிலும் தேவ பிள்ளைகள் நடந்து போக வேண்டியதாயிருக்கிறதே, ஏன்?

இருளில் இருக்கும் ஜனங்கள் மத்தியில் தான் நம் வேலையே! நம்மை முதலில் இருளில் நிறுத்திப் பழக்கப்படுத்திக் கொண்டால் தானே அங்கேயுள்ளவர்களை வெளிச்சத்துக்கு இழுத்துக் கொண்டு வர முடியும். என்றாலும் என் நேசரின் காலடிச் சத்தம் என்னருகில் கேட்டுக் கொண்டே இருந்தது. நான் தனியாக நடக்கவில்லை. அவரின் கையிலிருந்த கோலும், தடியும் நீண்டு வந்து இருள் போர்வையை விலக்கித் தூக்கி எறிந்தன.

சாத்தானுடன் அநீதியின் பாதையில் நடந்து கொண்டிருப்பவர்கள் இருளில் தடவித்

திரிகிறார்கள். பயந்து நடுங்குகிறார்கள். மனிதர்களை நம்புவதால் அவர்களின் படகு தத்தளிக்கிறது. நண்பர்கள் ஓடிப் போகிறார்கள்; தனியாக இருண்ட குகைப் பாதைக்குள் நடக்க வேண்டியதாகி விடுகிறது. கிருபை கிடைக்காத காரணத்தினால் அவர்களுக்கு இரவெல்லாம் தூக்கம் வருவதில்லை "நாளைக்கு என்ன நடக்குமோ?" என்ற பயத்தால். குறி சொல்லுகிறவர்களிடம் போகிறார்கள். (இந்தப் பாதையில் போய்க் கொண்டிருப்பவர்கள் நின்று நிதானித்து; திரும்பவும் நீதியின் பாதை வழியாக நடக்கலாம். இயேசு காத்துக் கொண்டிருக்கிறார்.)

## 5. என் சத்துருக்களுக்கு ...

எல்லோருக்கும் பொதுவான ஒரே "சத்துரு" அவன் சந்தேகமேயில்லாமல் சாத்தான்தான். அவனுடைய ஆளுகைக்குட்பட்டவர்கள் நமக்கு எதிராக வந்தாலும்; உண்மையில் அவர்கள் நம் எதிரிகளல்ல. அவர்களை ஆளுகை செய்கிற (regulate) சாத்தானுடைய தூதர்கள்தான் சத்துருக்கள்! அவர்களை அவன் அடக்கி வைத்திருப்பதனால்; அவனை மீறி அவர்களால் எதுவும் செய்ய முடிவதில்லை. அதனால் தான் நம்மை எதிர்க்கிறார்கள். உண்மையில் தாங்கள் செய்வது என்னவென்றே அவர்களுக்குத் தெரிவதில்லை. அதனால்தான் நம் தேவன் இயேசுகிறிஸ்து தன்னைக் குத்தினவர்களுக்காக ஜெபித்தார்.

சாத்தானுக்கு முன்பாக நமக்கு "பந்தி" வைக்கிறார்; அதாவது நம்மை மேன்மைப்படுத்துகிறார், தூக்குகிறார், கன்மலையின் மேல் நிறுத்துகிறார். கழுகின் சிறகுகளைத் தருகிறார், கன்மலையின் வெடிப்புகளில் குடியிருப்பை ஏற்படுத்தித் தருகிறார். உன்னதங்களில் உட்கார வைக்கிறார், கிறிஸ்துவின் சிந்தையைத் தருகிறார், கிறிஸ்துவின் பார்வையைத் தருகிறார், தன் குமாரனுடைய சாயலுக்கொப்பாக மறுரூபமாக வைக்கிறார். அபிஷேகிக்கிறார், நிரம்பி வழியச் செய்கிறார் (surplus). அதனால் அடுத்தவர்களின் எல்லைகளுக்குள்ளும் பாய்ந்து சென்று அவர்களுக்கும் ஆசீர்வாதமாக மாறுகிறோம்.

நம்மில் கிறிஸ்துவின் சாயல் இருப்பதைப் பார்க்கும் சாத்தான் பற்றிக் கொண்டு எரிகிறான். காரணம் அவனுக்குச் சத்துரு தேவன் இயேசுதான்! அதனால் அவருடைய ஆளுகைக்குட்பட்டவர்களை அவன் எதிரியாகப் பார்க்கிறான். தேவ ஜனங்களுக்கு முன்பாக தன் ஜனங்களை உயர்த்துகிறான்! பந்தி வைக்கிறான். தேவனை அறியாத புறஜாதியார் "ஏகபோக"மாக வாழ்வதற்கு இதுதான் காரணம்.

அவர்களுக்கு அருவெறுப்பான செட்டைகளைத் தருகிறான், இருளுக்குள்ளாகப் பறந்து போகிறார்கள். பாதாளத்தில் குழி வெட்டி உட்கார வைக்கிறான். பிசாசின் சிந்தனையைத் தருகிறான். தன் சாயலைத் தருகிறான். அவர்களின் மூலமாக அடுத்தவர்களின் எல்லைகளிலும் தன்னுடைய விதைகளைத் தூவ வைக்கிறான்; கெடுக்கிறான்.

## 6. என் ஜீவனுள்ள நாளெல்லாம்...

"என்னுடைய ஒவ்வொரு விடியலும் தேவனுடைய கிருபையையும், அவர் தரும் நன்மையையும் சார்ந்திருக்கிறது" (All my tomorrows depend on your mercy and goodness) என்று தைரியமாகச் சொல்லலாம். அதிகாலைப் பனித்துளி போல அது தானாகப் பொழியும். கேட்க வேண்டியதில்லை.

தேவன் நமக்காக ஆயத்தம் செய்திருக்கும் காரியங்களைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை. ஆனால் பரிசுத்தாவியானவர் வெளிப்படுத்தினார். பரலோகம் எப்படியிருக்கும்? தேவனுடைய அன்பின் ஆழ, அகல, உயர, நீள அடிப்படையில் Cubical (கனசதுரம்) ஆக இருக்கும்.

(வெளி. 21:16) அங்கே நமக்கு "முடிவே இல்லாத" (நீடித்த நாட்கள்) வாழ்க்கை நமக்குக் கிடைக்கும்.

## ஒரு சின்ன இடைவெளி: (சாட்சி அறிவிப்பின் நேரம்)

*அப்-1:8 பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.*

**விதைத்தால் அறுவடை நிச்சயம் உண்டு என்ற சத்தியத்தை ஆணித்தரமாக எழுதிக் கொண்டிருக்கும் நான்; அதற்கு ஆதாரமாக என் (எங்கள்) வாழ்க்கையில் நடந்த சம்பவங்களையும் எழுதினால் இன்னும் ஆணித்தரமாக (strong) இருக்கும்.**

**சுவரில் வசனங்களை எழுதி ஒட்டிவிட்டு, ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்தவர்களாக இருந்த காலத்தில் எல்லாம் நன்றாகத்தான் இருந்தது (தோன்றியது) ஆனால் அந்த வாழ்க்கை முடிவின் பயங்கரங்கள் மறைபொருளாயிருந்தது. அன்பு தேவன் இயேசு 99 ஆடுகளை ரோட்டோரமாக விட்டுவிட்டு; காணாமல் போன ஒரு ஆட்டைத்தேடிக் கொண்டிருந்த காலக்கட்டத்தில் நாங்களும் சிக்கிக் கொண்டோம். தொழுவத்தில் கட்டப்பட்டு மேய்ச்சலைக் கண்டோம். என்றாலும் சத்தியத்தை அறிந்து கொள்ளும் விஷயத்தில் மிக மிக ஆரம்பக் கட்டத்தில்தான் இருந்தோம். பாரம்பரிய சபைகளைக் குறை சொல்வது என்னுடைய நோக்கமல்ல. அதனால் எந்தப் பிரயோஜனமும் இல்லை. தாய் சபையாக இருந்தது, நியாயப்பிரமாணத்தின் கீழாக எங்களைப் பாதுகாப்பில் வைத்திருந்தது. ஒரு எழுப்புதல் கூட்டத்தின் (Revival meeting) மூலமாக கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசத்திற்குள் நடத்தியது. என்றாலும் ஆகாரப் பற்றாக்குறை காரணமாக ஆத்துமா பட்டினியால் வாடியது என்ற உண்மையை சொல்லித்தான் ஆக வேண்டும். யாரையும் வருத்தப்படுத்தக் கூடாது என்று முடிவெடுத்தால் பரிசுத்தாவியானவரை வருத்தப்படுத்த வேண்டியது வரும்.**

**நாற்றங்கால் கண்டிப்பாக அவசியம். ஆனால் அங்கேயே பயிர் வளர முடியாதே! வயிறு நிறைய 2 அல்லது 3 அல்லது 4 அல்லது 5 இட்டிலிகளாவது தேவை. ஒரு விள்ளல் கொடுத்தால்? அது பசியை அதிகமாக்கியதுதான் மிச்சம். அதுவும் நன்மைக்காக அமைந்தது. வேறு இடத்தில் இருந்து சாப்பாடு வந்தது! இயேசுவே அதை வாய்க்கச் செய்தார்.**

எசே-34:12 ஒரு மேய்ப்பன் சிதறுண்ட தன் ஆடுகளின் நடுவே இருக்கிற நாளில் தன் மந்தையைத் தேடிக்கொண்டிருக்கிறதுபோல, நான் என் ஆடுகளைத்தேடி, மப்பும் மந்தாரமுமான நாளிலே அவைகள் சிதறுண்டுபோன எல்லா இடங்களிலுமிருந்து அவைகளைத் தப்பிவரப்பண்ணி,

எசே-34:13 அவைகளை ஜனங்களிடத்திலிருந்து புறப்படவும் தேசங்களிலிருந்து சேரவும்பண்ணி, அவைகளுடைய சுயதேசத்திலே அவைகளைக் கொண்டுவந்து, இஸ்ரவேல் மலைகளின்மேலும் ஆறுகள் அண்டையிலும் தேசத்தின் சகல வாசஸ்தலங்களிலும் அவைகளை மேய்ப்பேன்.

எசே-34:15 என் ஆடுகளை நான் மேய்த்து, அவைகளை நான் மடக்குவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எசே-34:16 நான் காணாமற்போனதைத்தேடி, துரத்துண்டதைத் திரும்பக்கொண்டுவந்து, எலும்பு முறிந்ததைக் காயங்கட்டி, நசல்கொண்டதைத் திடப்படுத்துவேன்; நியாயத்துக்குத்தக்கதாய் அவைகளை மேய்த்து,...

**ஆண்டவருக்குக் காணிக்கை கொடுப்பதைப் பற்றிய ஒரு சரியான விழிப்புணர்ச்சி இல்லாத காரணத்தினால் எங்களுக்கு நியமித்திருந்த "பொற்காலம்" வெறும் சிந்தனையளவில் நின்று போனது. வெட்டுக்கிளிகளும், பச்சைப்புழுக்களும் வந்தது உண்மைதான். ஆனால் ஏன் வந்தது? சத்தியத்தை அறியவில்லை; அதனால் அது எங்களை விடுதலையாக்கவும் இல்லை. சத்தியத்தை அறிய ஆரம்பித்தபோது; என்னை முன்குறித்த, அழைத்த நோக்கத்தைத் தேவனிடம் கேட்ட போது; அதற்குப் பதிலைத் தேவன் ஒரு தரிசனமாகவே கொடுத்தார். இந்த சத்தியத்திற்குள்ளாக என் கண்கள் திறக்கப்பட்டபோது; உணர்வு நரம்புகள் அதை ஆத்துமாவுக்குள் அனுப்பியபோது புத்தி வந்தது!**

ஆரம்பத்தில் "ஏனோ தானோ" என்று கொடுத்துக் கொண்டிருந்த காணிக்கைகள்; அதே "ஏனோ தானோ" விளைச்சலைத்தான் எங்களுக்குக் கொடுத்தது. பற்றாக்குறை வந்த போது; விதைப்பின் வேகம் அதிகரித்தது, அளவும் அதிகரித்தது. முடிவில் தேவன் தான் நீதியுள்ளவர் என்பதை நிரூபித்தார். என் கணவரின் மருத்துவச் செலவைத் (சுமார் 2 லட்சம்) (1,96,000 ரூபாய்) தேவன் அற்புதமாகச் சந்தித்தார். ஒரு இருதய அறுவை சிகிச்சைக்குத் (Heart Treatment) தேவன் தேவையான பொருளாதாரத்தைக் கொடுத்தது எப்படி நீதியின் விளைச்சலாகும்? கேள்வி சரிதான். வாக்குத்தத்தத்தின் படியாக வரும் ஐசுவரியம் ஒரு வியாதிக்கு செலவிடப்படுமானால் அது எப்படி பரலோக ஆசீர்வாதமாக இருக்க முடியும்? என்ற கேள்வி எனக்கே வந்தது. சிந்தனையின் முடிவில் அதற்கான பதிலும் கிடைத்தது.

உயிரைக் காப்பாற்ற உதவாத ஐசுவரியம் மற்றக் காரியங்களுக்கு மட்டும் எதற்கு? சுவரில்லாமல் சித்திரம் வரைந்த கதையாகத்தான் இருக்கும்.

தேவன் அவருடைய பாதையில் எங்களை நடக்கச் சொல்லி, விட்டுக் கொடுத்த போது; நிலைமை மிக மோசமானது போலத் தோன்றியது. எங்களுடைய வருமானம் பூஜ்யமாகிப் போனது, ஆனால் விசுவாசம் பூஜியமாகிவிடாதபடி தேவன் காத்தார். விசுவாசத்தை விடாமல் அப்பியாசம் (Practice) பண்ணினபோது; கொஞ்சம் விதை தானியம் தந்தார், விதைக்க உதவினார், விளையச் செய்தார். விளைச்சலை எங்கள் எல்லைகளில் தேவைக்கேற்ப அறுவடை செய்து கொண்டிருந்தோம். ஒரு முறை என் கணவர் சகோ. டேவிட்டுக்கு இருதயப்பிரச்சனைக்காக (Heart Problem) ஆஞ்சியோகிராம் மற்றும் ஆஞ்சியோ பிளாஸ்டி (Angiogram & Angio Plasty) க்கும் தேவையானதை எங்கள் நீதியின் விளைச்சலில் இருந்து அறுவடை செய்ய முடிந்தது. அற்புதம் என்பது தேவ ஜனங்களுக்கு ஒரு ஆச்சரியமல்ல என்றே எனக்குத் தோன்றுகிறது. நம் தேவன் சர்வ வல்லவர் என்பது நமக்குத் தெரியும். இதுவா அவருக்குப் பெரிய விஷயம்? ஆண்டவர் தன் சீடர்களுக்கு விட்டுச் சென்ற பணி என்ன?

அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,

நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28:18-20)

## மனுஷனை நம்புகிறதைப் பார்க்கிலும்...

எரே-17:5 மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே-17:6 அவன் அந்தரவெளியில் கறளையாய்ப்போன செடியைப்போலிருந்து, நன்மைவருகிறதைக் காணாமல், வனாந்தரத்தின் வறட்சியான இடங்களிலும், குடியில்லாத உவர்நிலத்திலும் தங்குவான்.

எரே-17:7 கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

எரே-17:8 அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத்தன்வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனிகொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான்.

ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்ற ஆசை எல்லா மனுஷருக்குள்ளும் இருக்கிறது. ஒரு சிறு குழந்தை முதலில் ஜெபிக்கக் கற்றுக் கொள்ளும் போது; "இயேசுவே என்னை ஆசீர்வதியும், என் அப்பா, அம்மாவை ஆசீர்வதியும், பாட்டி, தாத்தாவை ஆசீர்வதியும்," ... இப்படியாக நீண்ட பட்டியலிட்டு முடிவில் ஆமென் என்று முடிக்கிறது.

எப்படியாவது ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்று விரும்பும் மனிதன் தேவன் மேல் நம்பிக்கை வைக்காமல் போகும்போதுதான் பிரச்சனை ஆரம்பமாகிறது.

19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரபல ரஷ்ய எழுத்தாளர் இவான் கிரிலோவ் (Ivaan Girilov) எழுதிய கதையிலிருந்து கொஞ்சம்: ஆற்றோரமாக ஒரு சிறிய வண்டி நின்று கொண்டிருக்கிறது. அதை ஒரு கயிற்றால் கட்டி ஒரு கழுகு மேலே வானத்தை நோக்கி இழுக்கிறது. ஒரு நண்டு அதைப் பின்னோக்கி இழுக்கிறது. சுறாமீன் அதைத் தண்ணீருக்குள் இழுக்கிறது. வண்டி எந்தத் திசையில் போகும்?

ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்று விரும்பும் மனிதன்; அதற்கு கர்த்தரைச் சார்ந்துதான் செயல்பட்டாக வேண்டும்; அதுதான் வேத சத்தியம். ஆனால் அந்தப் பாதையைப் பற்றிய வெளிச்சம், தெளிவு, ஞானம், இல்லாத காரணத்தினால் தேவனை அறிந்த பெரும்பான்மையான ஜனங்கள் கூட உலக வழிகளையோ, அல்லது சாத்தானின் வழிகளையோதான் தெரிவு செய்கின்றனர். ஆசீர்வாதம் வரும்போது; அதைத் தேவன்தான் தருகிறார் என்று நினைத்தும் கொள்கின்றனர்.

கழுகின் மேல்நோக்கு இழுப்பு, சுறாமீனின் பக்கவாட்டு இழுப்பு (OB) நண்டின் பின்புற இழுப்பு (OC) (இணைகரம் ஒன்றைக் கற்பனையில் வரைந்து கொள்வோம்) அதுமட்டுமல்ல வண்டியின் கீழ்நோக்கிச் செயல்படும் விசை ஒன்றும் உண்டு. கழுகு மேல் நோக்கி இழுப்பதால் அது வண்டியின் எடையை குறைக்கிறது, அல்லது ரத்து செய்து விடுகிறது. அதனால் கழுகு உண்மையில் நண்டுக்கும், சுறாமீனுக்கும் உதவிதான் செய்திருக்கிறது. அதனால் வண்டி நகராமல் அதே இடத்தில்தான் இருக்கும் என்று கதையை முடிக்கிறார். அவர் கூறியது சரிதானா?

கர்த்தருடைய வழிகளில்தான் ஆசீர்வதிக்கப்படுகிறோம் என்று சொல்லிச் சமாளித்துக் கொண்டு; உலக வழிகளில் பணம் சம்பாத்தியம் செய்யும் மனிதன் நிலைமை என்ன? அவன் கர்த்தருக்குள் நிலைத்திருக்க முடியுமா? என்பதே கேள்வி!

முடியாது என்றுதான் இயற்பியல் சட்டம் (Physics law) சொல்லுகிறது, வேத வசன விதிகளும் சொல்லுகிறது. கிரிலோவ் கதையில் வரும் இயந்திரவியலின்படி இந்தப் பிரச்சனை தீர்த்து வைக்கப்படுகிறது. நண்டு நிலத்தில் நின்றபடி இழுத்தாலும் (பின்புற இழுப்பு), மீன் தண்ணீருக்குள் இருந்து இழுத்தாலும் (பக்கவாட்டு இழுப்பு) OB, OC ன் தொகு பயனான OD தண்ணீருக்குள் வண்டியை அமைவதால் அந்த விசை இழுத்துக்கொண்டு தண்ணீருக்குள் போய் விடும்!




ஆண்டவரின் பெயரைச் சொல்லி உலக வழிகளில் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளப் பார்க்கும் தந்திரமான வழிகளுக்கு ஆண்டவர் துணைபோக மாட்டார். நன்றாக இருப்பதுபோல்தான் தோன்றும், கற்பனையில் சிறகடிக்கத் தோன்றும், சத்தமாக சிரிக்கத் தோன்றும், கனவு மாளிகை கட்டத் தோன்றும். முடிவில்? எச்சரிக்கை: "இராட்சத சுறா மீன் ஒன்று வந்து கொண்டிருக்கிறது!"

எரே-17:11 அநியாயமாய் ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறவன் முட்டையிட்டு அவயங்காத்தும், குஞ்சுபொரிக்காமற்போகிற கவுதாரிக்குச் சமானமாயிருக்கிறான்; அவன் தன் பாதி வயதிலே அதைவிட்டு, தன் முடிவிலே மூடனாயிருப்பான்.

## *பாலைவனக் கனவுகள்:*

எரே-17:5 மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே-17:6 அவன் அந்தரவெளியில் கறளையாய்ப்போன செடியைப்போலிருந்து, நன்மைவருகிறதைக் காணாமல், வனாந்தரத்தின் வறட்சியான இடங்களிலும், குடியில்லாத உவர்நிலத்திலும் தங்குவான்.

சங்-42:1 மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது.

தேவனை அறிந்து கொண்டபிறகும் சுயத்தையும் (will power), மனிதர்களையும், உலகத்தையும் நம்புகிற மனிதன் தன் ஓட்டத்தில் பாலைவனப் பொய்த்தோற்றங்களைத்தான் சந்திக்கிறான். கானல் நீரைப் பற்றி ஓரளவுக்கு எல்லோருக்குமே தெரியும்.

பாலைவனத்தில் சூரியன் மணலைச் சூடாக்கி அதற்கு ஒரு ஆடியின் (Mirror)-ன் பளபளக்கும் தன்மையை தருகிறது. மணற்பரப்பின் மேலுள்ள சூடான காற்று அடுக்கின் அடர்த்தி மேலேயுள்ள அடுக்குகளை விடக் குறைவாக இருப்பதால் இது நடக்கிறது. தூரத்திலுள்ள ஒரு பொருளிலிருந்து (உயர்ந்த மரம் அல்லது கட்டடம்) சாய்வாக வரும் ஒளிக்கதிர்கள் இவ்வடுக்கிற்கு வந்து (கண்ணாடி மீது மிக விரிவான கோணத்தில் பட்டு, அதனால் பிரதிபலிக்கப்படுவதைப் போல) மேற்புறமாக வளைகின்றன. பாலைவனப் பிரயாணி ஒரு தண்ணீர் பரப்பைப் பார்ப்பதாகவும், கரையிலுள்ளவைகள் அதில் பிரதிபலிக்கப்படுவதாகவும் நினைக்கிறான். சில வெயிலடிக்கும் நண்பகல் நேரங்களில் பெரிய தார்ச்சாலைகளிலும் கூட இதைக் காணக்கூடியதாய் இருப்பதை அறிந்திருப்பீர்கள்.

உலக காரியங்கள் மிக அழகாகத் தோற்றமளிக்கும்படியாக சாத்தான் கலர் கலர் கண்ணாடிகளைக் கொண்டு வந்து மாட்டி விடுகிறான். உலகத்தைச் சார்ந்து கொள்ளப் பழக்குகிறான். உலகச் செல்வத்தின் மயக்கம், மனிதர்களுக்குத் தரப்படும் முக்கியத்துவம், தன்னம்பிக்கை என்கிற போர்வையை மூடிய பெருமை இவை யாவும் தேவனை விட்டு ஒருவனைத் தூரமாக இழுத்துக்கொண்டு போய்விடுகிறது. நிரந்தரமில்லாத உலகக்காரியங்களை நிரந்தரமானது என்று நம்பிவிடுகிறான். மாயை அவனை ஏமாற்றி அவனுக்கு முன்பாக ஓடி அவனை அலைக்கழிக்கிறது.

ஒளிக்கதிர்கள் காற்றடுக்கை ஒரு கண்ணாடி போன்ற திடப்பொருள் என்று ஏமாந்து அதில்பட்டு மேல்நோக்கி வளைவதைப் போல கர்த்தரைவிட்டு விலகுகிறவனுடைய வழிகள் திசைமாறுகின்றன.

அடர்த்தி அதிகமான காற்று, குறைவான காற்றின் பகுதிக்கு வந்து; அதை மேலே தள்ளிவிடுகிறது. இவ்விதமான காற்றின் இயக்கம் எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது. மணல் பரப்பின் மேலுள்ள காற்றடுக்கும் புதிது புதிதாக சூடாக்கப்பட்டு காற்றால் நகர்த்தப்பட்டுக் கொண்டே இருக்கிறது. அதனால் எப்போதும் மணல் பரப்பின் மீது சிறிதளவு அடர்த்தி குறைவான காற்று இருந்துகொண்டே இருக்கிறது.

சாத்தான் இடைவிடாமல் தன் ஜனங்களுக்காக வேலை செய்துகொண்டே இருக்கிறான். கடின உழைப்பு (Hard work) செய்கிறான், அதிகப்படி நேரம் வேலை (Over time duty) பார்க்கிறான். தன்னை விட்டுப் போகாதபடி பல அனுகூலங்களை அவர்களுக்குச் செய்து

கொடுக்கிறான். (உ.ம்) தெருப்பிள்ளையாருக்கு தேங்காய் உடைத்தால் கேட்டது கிடைக்கும் என நம்பச் செய்கிறான்.) அவர்களைத் தன்னுடைய எல்லைக்குள் தக்க வைத்துக் கொள்கிறான். இவ்விதமாக பாலைவனத்தில் ஆசைகாட்டி மான்களைக் கதற வைக்கிறான்.

யோசிப்போம், அழகான பாதைகள் இருக்க, சொரிமணல் வழிகள் எதற்காக? அங்கே புதை குழிகள் இருக்கலாம். கண்ணிகள் இருக்கலாம், வேடன் வலையையும் விரித்திருக்கலாம். தேவனுடைய கோப சாபத்துக்கு ஆளாகிக் காய்ந்து, கறுகறுத்து சுடுகாட்டில் மண்டை ஓடுகளுக்கு நடுவாகப் பறக்கும் வௌவாலின் நிலைமை வருமுன்பாகத் தேவனைத் தேடுவோம்; அவருக்குள்ளாக ஜீவன் தப்ப ஓடுவோம்.

கர்த்தரை நம்பினால் இப்படியான கானல் நீர்ப் பிரச்சனைகளில் சிக்கிக்கொள்ள மாட்டோம்.(?) நம் எல்லைகளுக்குள் சாத்தானால் வேலை செய்ய முடியாது; அதனால் அடர்த்தி குறைவான காற்றடுக்கு உருவாகாது!) நிஜமான நீர்நிலைகள் (இயேசு) நமக்கு இருக்கும். (எரே-2:13 என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள்.) நம் வேர் அவருக்குள்ளாக ஊடுருவுவதால் கனிகள் கொத்துக்கொத்தாகி கொப்புகளைக் கீழே இழுக்கும்! அல்லேலூயா!

## *வலை:* (Net)

நீதி-1:17 எவ்வகையான பட்சியானாலும் சரி, அதின் கண்களுக்கு முன்பாக வலையை விரிப்பது விருதா.

தேவ ஜனங்களுக்கு வலையை விரிப்பது யார்? என்ன காரணம்? என்ன செய்தால் தப்பிக்கலாம்?

பாட்டி சொன்ன கதை ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது. ஒரு வேடன் காட்டில் புறாக்களுக்கு வலை விரித்து (பச்சைப் புல் தரையில் அதே பச்சை நிற பிளாஸ்டிக் வயரினால் (plastic wire) பின்னப்பட்ட வலை) அதன் மேல் புறாவுக்குப் பிடித்த பயிர் விதைகளைத் தூவி வைத்தான். மறைந்திருந்து கவனித்துக் கொண்டிருந்தான். கொஞ்ச நேரத்தில் பறந்து வந்த புறாக்கள் உணவைப் பார்த்ததும்; யோசிக்காமல் அதன் மேல் இறங்கிக் கொத்தி, சாப்பிட ஆரம்பித்தன. வேடன் ஓடி வருவதைப் பார்த்ததும்தான் அதற்குக் காரியம் புரிந்தது. பறக்க முயன்றபோதுதான் கால்கள் வலையில் சிக்கியிருப்பதைக் கவனித்தன.

வேடன் பறவைகள் வருவதற்கு முன்னதாகவே; அவைகள் பார்வைக்கு மறைவாக இந்தக் காரியத்தைச் செய்தான். அவற்றின் பார்வைக்கு முன்பாக செய்திருப்பானேயானால் புறாக்கள் சமயோசிதமாக அவற்றின் மேல் இறங்காமல் பறந்திருக்கும்.

தேவ ஜனங்களின் பாதைகளில் வலையை விரித்து வைப்பது சாத்தானின் பிரதானமான வேலைகளில் ஒன்று. அதிலும் இளைய(ளைஞர்) சமுதாயத்தினர் மீதுதான் அதிகக் கவனம் அவனுக்கு. அவர்களை அழித்துவிட்டால்; வருங்கால சுவிசேஷ வேலைகளைத் தடைசெய்து விடலாம். தேசங்களின் திறந்த வாசல்களில் ஈ ஓட்டலாம்; பாதாளத்தை “ஆ” என்று வாயைப் பிளக்க வைக்கலாம் என்று வரைபடம் (diagram) போட்டு செயல்படுகிறான். பாதாளத்தின் திறவுகோல் நம் தேவன் இயேசுவிடம்தான் இருக்கிறது; அவன் பாச்சா பலிக்காது. அதனால் தைரியமாக வேலை செய்யுங்கள்.

உலகத்தையே கம்ப்யூட்டர் (computer) மூலம் ஒன்றிணைக்கும் “வலை”க்கும் எச்சரிக்கையாயிருப்போம்! சோதோமின் பாவ விதைகளைச் செயற்கைக்கோள் (satellite) மூலம் தூவி; விரல் நுனிவரை விஷம் ஏற்றுகிறான். விரலைத் தொடர்ந்து கண்ணும், தொடர்ந்து மனதும், தொடர்ந்து காலும், அதைத் தொடர்ந்து வாழ்க்கையும் போகிறது. எல்லாவற்றையும் தொலைத்துவிட்டுக் கடைசியில் உயிரோடு முற்றுப்புள்ளி (fullstop) வைக்கிறது.

உன்னதச் சிறகுகள் (கழுகின் சிறகுகள்) இருந்தால் மட்டுமே தப்ப முடியும். ஏசா-40:31 கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.

வேடனின் வலையில் சிக்கிக் கொண்ட புறாக்களில் அனுபவமுள்ள ஒரு வயதான புறா ஒரு ஆலோசனை சொன்னது: (வேடன் 50 அடி தூரத்தில் ஓடி வந்து கொண்டிருந்தான்) "நான் ready, one, two, three என்று சொல்லுவேன், உடனே எல்லோரும் ஒன்று போல் ஒரே நேரத்தில் உயர வலையையும் தூக்கிக் கொண்டு பறக்க வேண்டும், தப்பி விடலாம்" என்றது. அதே போல செயல்பட்டு வானத்தில் வலையுடன் பறந்தன! சாத்தானே உனக்கு ஒரு பெப்பே! உன் வலைக்கும் ஒரு பெப்பே!!

ஒன்றும் குடி முழுகிப் போய்விடவில்லை. இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட முடியாத பாவத்தை எந்த மனிதனாலும் செய்ய முடியாது. மன்னிப்புக் கேட்டுத் திரும்பி விடலாம். பெருங்கழுகின் இறக்கைகளை ஜெபித்துப் பெற்றுக்கொண்டு; புயலுக்கும் மேலாகப் பறந்து... உயர்ந்த மலையின் நீர்வீழ்ச்சி துவங்கும் இடத்திற்குப் போய்விடலாம்!

(வலையுடன் பறந்த பறவைகள் தன் நண்பனான எலியிடம் போய்; வலையை அறுத்துவிடச் சொல்லி வேண்டிக்கொள்ள; எலி அறுத்து விட ... இந்த சமாச்சாரமெல்லாம் இங்கே தேவையில்லாத விஷயம்) எப்படியோ அவை தப்பித்துக் கொண்டதுதான் இங்கே முக்கியம் (highlight!)

யோசு-23:12 நீங்கள் பின்வாங்கிப்போய், உங்களுக்குள்ளே மீதியாயிருக்கிற இந்த ஜாதிகளைச் சேர்ந்து, அவர்களோடே சம்பந்தங் கலந்து, நீங்கள் அவர்களிடத்திலும் அவர்கள் உங்களிடத்திலும் உறவாடினால்,

யோசு-23:13 உங்கள் தேவனாகிய கர்த்தர் இனி இந்த ஜாதிகளை உங்களுக்கு முன்பாகத் துரத்திவிடமாட்டார் என்றும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த இந்த நல்ல தேசத்திலிருந்து அழிந்துபோகுமட்டும், அவர்கள் உங்களுக்குக் கண்ணியாகவும், வலையாகவும், உங்கள் விலாக்களுக்குச் சவுக்காகவும், உங்கள் கண்களுக்கு முள்ளுகளாகவும் இருப்பார்கள் என்று நிச்சயமாய் அறியுங்கள்.

தேவனை அறியாத புறஜாதியார் நமக்கு வலையாக மாறுவதைப் பார்க்கிறோம். தேவ ஜனங்கள் தங்கள் நிலையை (position) மறந்து அவர்களோடு கலப்பதால் (mingle) அவர்களின் தேவர்களின் (சாத்தானுடைய தூதர்களின்) வல்லமைகளுக்குள்ளாக போய் மாட்டிக் கொள்ளுகிறார்கள். அதனால் முடிவுபரியந்தம் நம் கதி இதுதான் என்று பழைய ஏற்பாட்டின் வசனத்தின் படி பிரச்சனையை முடித்துவிடக் கூடாது. ஒரு பிரச்சனை எதனால் தோன்றுகிறது என்பதை மட்டும் வேதம் நமக்குத் தெரிவிப்பதில்லை; அதற்கான "விடைகாணலையும்" (solution) நமக்குத் தருகிறது. இந்தப் பிரச்சனையிலிருந்தும் இயேசுவால், அவருடைய கிருபை தயவு இரக்கங்களால் நமக்கு விடுதலை உண்டு. சங்-9:15 ஜாதிகள் தாங்கள் வெட்டின குழியில் தாங்களே விழுந்தார்கள்: அவர்கள் மறைவாய் வைத்த வலையில் அவர்களுடைய காலே அகப்பட்டுக் கொண்டது.

துன்மார்க்கன் ஏழைகளைத் தன் வலையால் பிடிப்பதை (சங்-10:9 தன் கெபியிலிருக்கிற சிங்கத்தைப்போல மறைவில் பதிவிருக்கிறான்; ஏழையைப் பிடிக்கப் பதிவிருந்து, ஏழையைத் தன் வலைக்குள் இழுத்துப் பிடித்துக்கொள்ளுகிறான்.) வசனம் நமக்குத் தெரிவிக்கிறது. சங்-10:4 துன்மார்க்கன் தன் கர்வத்தினால் தேவனைத் தேடான்; அவன் நினைவுகளெல்லாம் தேவன் இல்லையென்பதே. தேவன் இல்லை என்ற எண்ணம் துன்மார்க்கனுக்கு இருப்பதால் தேவ ஜனங்களைப் பார்க்கும்போது; அதிலும் குறிப்பாக ஏழைகளைப் பார்க்கும்போது அவனுக்கு இளப்பமாகத் (cheap) தெரிகிறது. ஆனால்

அவனுடைய வலையை இயேசு கிழிப்பார். (சங்.25:15) சங்-141:10 துன்மார்க்கர் தங்கள் வலைகளில் அகப்படுவார்களாக; நானோ அதற்குத் தப்பிக் கடந்துபோவேன்.

தேவ ஜனங்களுக்கு "எதிரிகள்" என்பது பழகிப் போன சமாச்சாரம். உலகம் தோன்றியது முதல் இந்நாள்வரையில் இதே கதைதான். சங்-35:7 முகாந்தரமில்லாமல் எனக்காகத் தங்கள் வலையைக் குழியில் ஒளித்து வைத்தார்கள்; முகாந்தரமில்லாமல் என் ஆத்துமாவுக்குப் படுகுழி வெட்டினார்கள். ஆனால் தங்களுடைய அநீதியின் விளைச்சலை அறுவடை செய்துதானே ஆக வேண்டும்? சங்-35:8 அவன் நினையாத அழிவு அவனுக்கு வரவும், அவன் மறைவாய் வைத்த வலை அவனையே பிடிக்கவுங்கடவது;

## *தேவனே அனுமதிக்கும் வலை: நம்மைச் சரிப்படுத்தத்தான். (சங். 66:11, 12)*

ஆகா, ஓகோ என்று புகழுகிறார்களா? உடனே 2 அடி பின்னால் நகருங்கள், உற்றுப் பாருங்கள் (மனக்கண்களினால்) அவர்களின் கைகளில் கண்ணுக்குத் தெரியாத வலை தொங்கிக் கொண்டிருப்பது தெரியும்! (நீதி.29:5)

சிலந்திப் பூச்சியின் வலையைக் கூர்ந்து பார்த்தால்; அதனுடைய ஞானம் (இல்லையில்லை; சத்துவமற்ற ஜெந்துவுக்கு இவ்வளவு ஞானத்தைக் கொடுத்த தேவனுடைய ஞானம் புரியும்.) ஆத்துமாக்களுக்கு வலைவிரிப்பவர்கள் ஞானவான்கள். அவர்களுக்குப் பரலோகத் தங்க மாளிகையில் வாழ்க்கையுண்டு.

பெண்களின் இருதயத்தில் உருவாகும் வலை. தப்பித்துக் கொள்ள "சற்குணம்" என்ற சிறகு தேவை. பிர-7:26 கண்ணிகளும் வலைகளுமாகிய நெஞ்சமும், கயிறுகளுமாகிய கைகளுமுடைய ஸ்திரீயானவள், சாவிலும் அதிக கசப்புள்ளவளென்று கண்டேன்; தேவனுக்கு முன்பாகச் சற்குணனாயிருக்கிறவன் அவளுக்குத் தப்புவான்; பாவியோ அவளால் பிடிபடுவான்.

மீனவர்களின் வலைகள் கடற்கரையில் காயவைக்கப்பட்டிருப்பதைப் போல; சாத்தானுடைய வலைகள் உலகமெங்குமுண்டு. பிர-9:12 தன் காலத்தை மனுஷன் அறியான்; மச்சங்கள் கொடிய வலையில் அகப்படுவதுபோலவும், குருவிகள் கண்ணியில் பிடிபடுவதுபோலவும், மனுபுத்திரர் பொல்லாத காலத்திலே சடிதியில் தங்களுக்கு நேரிடும் ஆபத்தில் அகப்படுவார்கள்.

மத்-13:47 ... பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது. ஆத்துமாக்களைப் பிடிக்கும் பரலோகத்துக்கு ஒப்புவமையாக, வலையை இயேசு காட்டுகிறார்.

கடைசியாக இரட்சிப்பின் சுவிசேஷம் வலைக்கு ஒப்பாக இருக்கிறது. இதனால் ஆத்தும மீன்களைப் பிடிக்க வேண்டும். அதற்கேற்றபடி வலையைப் பராமரிக்க வேண்டியதாயிருக்கிறது.

1. வலைகள் பழுது பார்க்கப்பட வேண்டும். சுவிசேஷப் பணி பரிபூரணமாக வெற்றியடைய தகுந்த காரணத்தைக் கண்டு பிடித்து; வேத வசனங்களின் அடிப்படையில் திருத்தி அறிவிக்க வேண்டும். பழுதில்லாத விதைகள் தேவை; அப்போதுதான் நல்விளைச்சல் கிடைக்கும். (மத்.4:21)

2. அனுபவமில்லாமல் மீன் பிடிக்க முடியாது; ஆலோசனை தேவை. ஆத்தும ஆதாயப் பணியில் தேவனுடைய ஆலோசனையில்லாமல் போனால் வெறுங்கைதான் மிஞ்சும். சுவிசேஷ வலை இருதயத்தின் ஆழமான பகுதியான ஆவியில் போடப்பட வேண்டும். வெறும் பெயர்க்கிறிஸ்தவனாகவோ, கல்யாணக்கிறிஸ்தவனாகவோ, கல்லறைக் கிறிஸ்தவனாகவோ ஒருவனை மாற்றுவதால் கிறிஸ்துவுக்குள் அவனுக்கு எந்த பிரயோஜனமும் இருக்காது. (லூக்.5:4)

3. வசனம்தான் ஜீவனுள்ளது; அதுதான் கிரியை செய்யும். அதனால் சுவிசேஷம் அறிவிக்கும்போது வசனங்களை அதிகம் சேர்த்துச் சொல்ல (எழுத) வேண்டும். (லூக். 5:5)

4. இப்படிச் செய்யும்போது; வலை "கிழிந்துபோகத்தக்கதாக; ஆனால் கிழியவில்லை" அதிக மீன்கள் கிடைத்ததாம்! சபையில் இடம் போதாமல் விரிவாக்கம், அல்லது கிளை சபைகள் அமைக்க வேண்டிய அளவுக்குப் பலன் இருக்கும். (லூக்.5:6)

"இழுக்க முடியாத அளவுக்கு" ஆத்துமாக்கள் இருப்பதால் பல மேய்ப்பர்களுக்கு ஊழியம் கிடைக்கும்; பிரித்துக் கொடுக்கப்படுவதால். (யோ.21:6,8)

"வலை கிழியாது!" சுவிசேஷம் முடிவுக்கு வரப்போவதில்லை; வசனங்களை அழிவு மேற்கொள்ள முடியாது. நிரம்பிய மீன்களைக் கரையில் கொட்டிவிட்டு; மீண்டுமாக வலைகள் தன் வேலைக்குத் திரும்பிவிடும். (Retirement) ஓய்வு இல்லாத நிரந்தர வேலையுள்ளவன் சுவிசேஷகன் மாத்திரமே! 58 வயது கடந்தாலும் அவனுடைய இளமை கடந்து போவதில்லை! அல்லேலூயா.

## நம்முடைய உள்ளான மனிதனின் மனக்கண்களைப் பற்றி...

நம்முடைய சரீரத்திற்குக் கண்கள் இருப்பது போல; நம் ஆவிக்குரிய சரீரத்திற்கும் கண்கள் உண்டு. நம் சரீரக் கண்கள் உலகத்தில் செயல்படுவதுபோலவே; ஆவிக்குரிய கண்களும் ஆவிக்குரிய உலகத்தில் செயல்படுகிறது.

எட்கர் ஆலன் போ கதையில் விவரிக்கப்படும் உருப் பெருக்கத்தை எடுத்துக் கொண்டால் (விதைகள் முதல் பகுதி) உருப்பெருக்கம் அடைந்த பூச்சியில் புதியதாக எந்த விவரத்தையும் பார்க்க முடிவதில்லை. சந்திரன் நடுவானில் இருப்பதைவிட; தொடுவானத்தில் இருக்கும்போது மிகப் பெரியதாகத் தோற்றமளிக்கிறது. என்றாலும் நிலாவைப் பற்றிய புதிய விபரங்கள் (details) எதுவும் அதில் தெரிவதில்லை. யெ. பெரல்மானின் அனுபவம் ஒன்று: அவர் பள்ளிச் சிறுவனாக இருந்த போது மூடிய கண்ணாடிக் கதவருகே உட்கார்ந்து ரோட்டை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தபோது; ரோட்டைத் தாண்டி இருந்த ஒரு வீட்டின் சுவரில் இருந்து சுமார் 4 மீட்டர் அகலமுள்ள ஒரு பிரமாண்டமான கண் ஒன்று அவரை உற்றுப் பார்ப்பதை உணர்ந்தாராம். உண்மையில் அது கண்ணாடியில் தெரிந்த அவருடைய கண்ணின் பிம்பம்தான். தூரத்தில் உள்ள சுவரின் அளவுக்கேற்ப அதைப் பெரியதாக உருப்பெருக்கிக் கற்பனை செய்து கொண்டிருக்கிறார். ஆனாலும் அந்த அதிபயங்கரமான பெரிய கண்ணில் எந்தப் புதிய விவரத்தையும் பார்க்க முடியவில்லை. இப்படிப்பட்ட உருப்பெருக்கத்தால் விஞ்ஞானிகளுக்குப் பிரயோஜனமும் இல்லை.

நாம் இரட்சிக்கப்படும்போது; நம் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படுவதால் நமக்கு வேதம் புரிய ஆரம்பிப்பது என்னவோ உண்மைதான். என்றாலும் கிரியை இல்லாமல் இருப்போம். வசனத்தை நம் வாழ்க்கையில் கொண்டு வராதவரை அதைப் புரிந்துகொண்டாலும் பிரயோஜனம் இருப்பதில்லை.



"அணுதரிசனி (Microscope)" ஏன் உருப்பெருக்கம் செய்கிறது? "குறிப்பிட்ட ஒரு வகையில் ஒளிக்கதிர்களின் பாதையை அது மாற்றுகிறது?" என்று எளிதாக பௌதிகம் படித்த மாணவன் பதிலைச் சொல்லிவிட்டுப் போய்விடுவான். ஆனால் உண்மையான காரணத்துக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. எது உண்மையான காரணம்? ஒரு வசனத்தைச் சொல்லி அதற்குரிய அர்த்தத்தைக் கேட்டால்; பரிசுத்தாவியானவரின் ஒத்தாசையில்லாமல் அதற்குப் பதில் சொல்லவே முடியாது. சொன்னாலும் அது தவறாகவே இருக்கும். விதை என்றால் என்ன அர்த்தம் என்று கேட்டால்

“அவரைக் காய்க்கு உள்ளாக இருக்குமே அது” என்றுதான் பதில் சொல்ல முடியும்.

இதற்குப் பௌதிகப் பாடப்புத்தகத்தை மூடி வைத்து விட்டு கொஞ்சம் வெளியே வர வேண்டும். பார்க்கப்படும் பொருள் பெரிதாகத் தோன்றுவதால்; அது உருப்பெருக்கம் செய்கிறது என்று ஆகிவிடாது. அகன்ற பார்வைக் கோணத்தில் அப்பொருள் பார்க்கப்படுவதனால்தான் இது நடக்கிறது. அதன் பிம்பம் விழித்திரையில் அதிகமான பரப்பை எடுத்துக் கொள்கிறது.

ஒரு நிமிடத்திற்குக் குறைவான பார்வைக் கோணத்தில் பார்க்கப்படும் ஒரு பொருள் தெளிவான வடிவம் இல்லாமல் வெறும் புள்ளியாகவே நம் சாதாரணக் கண்களுக்குத் தெரிகிறது. அதன் விவரங்களை நம்மால் காணவும் முடிவதில்லை. ஏனென்றால் இப்பார்வைக் கோணத்தில் பிம்பம் ஒரே ஒரு பார்வை உயிரணுவின் மீதுதான் விழுகிறது.

பவுல் ஜெபிக்கும் “பிரகாசமுள்ள மனக்கண்கள்” தான் நம் ஆவிக்குரிய கண்களுக்கு முன்னதாக வைக்கப்பட வேண்டிய மைக்ராஸ்கோப் என்று கூடச் சொல்லலாம். மனக்கண்கள் எல்லோருக்குமே உண்டு. ஆனால் அதைப் பிரகாசிப்பிக்கப் பரிசுத்தாவியானவர் தேவை. அபிஷேகம் இல்லாவிட்டாலும் வசனங்களின் பொருள் கொஞ்சம் விளங்கத்தான் செய்யும்; நாம் இரட்சிக்கப்பட்டிருப்பதால்! ஆனால் அது “ஒரு புள்ளி அளவான” விவரமாகத்தான் இருக்கும்.

ஆனால் மைக்ராஸ்கோப்பும், டெலஸ்கோப்பும் பார்க்கப்படும் பொருளிலிருந்து வரும் ஒளிக்கதிர்களின் திசையை மாற்றி அதிக அளவுள்ள பார்வைக் கோணத்தில் காட்டுகின்றன. (உ.ம்) விழித்திரை பிம்பம் அதிகமான பார்வை உயிரணுக்களின் மீது விழும்படி பெரிதாக்கப்படுகிறது. (உ.ம்) முன்பு ஒரே புள்ளியில் ஒன்றிப்போன விவரங்களை இப்போது தனித்தனியாகப் பார்க்கமுடிகிறது. ஒரு மைக்ராஸ்கோப்பின் உருப்பெருக்கும் திறன் 100 என்றால்; நாம் ஒரு பொருளைப் பார்க்கும் கோணத்தைப் போல 100 மடங்கு அதிகமான பார்வைக் கோணத்தில் அப்பொருளை அது காட்டுகிறது.

பரிசுத்தாவியானவரின் அபிஷேகம் “சகல சத்தியத்திற்குள்ளேயும்” நம்மை நடத்துகிறது. ஆகையால் வசனங்களின் ஆழங்களுக்குள் சென்று (இரும்புத் தாழ்ப்பாள்களை முறித்து, வெண்கலக் கதவுகளைத் திறந்து ஒளிப்பிடத்திலிருக்கும் பொக்கிஷத்தை எடுப்பது போல) 100 அல்லது 1000 அல்லது அதற்கு மேலாகக் கூட தகவல்களைச் சேகரிக்கும்படி செய்கிறது.

மைக்ராஸ்கோப் பார்வைக் கோணத்தைப் பெரிதாக்காவிட்டால்; உருப்பெருக்கம் செய்யப்பட்ட பொருளைப் பார்ப்பதாய் நாம் எண்ணினாலும்; உண்மையில் அதனால் உருப்பெருக்கம் செய்யவே முடியாது. (உ.ம்) மைக்ராஸ்கோப் நமது பார்வை எல்லைகளை விரிவடையச் செய்து; ஒரு புதிய உலகத்திற்கே நம்மை அழைத்துச் செல்கிறது.

புதிய வானம் புதிய பூமிக்கு நம்மை அழைத்துச் செல்வதில் நம் தேவனுடைய ஆவியானவர் எத்தனையாய் முக்கியப் பங்கு வகிக்கிறார் என்பதைச் சிந்தித்துப் பார்ப்போம். பிரகாசமுள்ள மனக்கண்களுக்காக ஜெபிப்போம். அந்த மைக்ராஸ்கோப்பை நமக்கு இலவசமாகத் தர இயேசுகிறிஸ்து காத்திருக்கிறார்! எபே-1:19 தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

## *ஒரு வசனத்தைக் கவனிப்போம்:*

யோவா-15:16 நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்.

இந்த வசனத்தை ஆவிக்குரிய உள்ளான கண்ணின் Stereoscopic effect-ன் படி பார்த்தால்; நம்முடைய தேவைகளை இயேசுவின் நாமத்தினால் பிதாவினிடத்தில் கேட்டால்; அதை அவர் நமக்குத் தருவார் என்பது வரைக்கும்தான் புரியும். அவ்விதமாகவே கேட்டுக்கொண்டே இருப்போம். பல காரியங்களை நாம் தேவனிடமிருந்து பெற்றிருக்கவே மாட்டோம். நமக்கு ஜெபிக்கத் தெரியவில்லை, தேவனுக்குச் சித்தமில்லை என்று நம் மனதை சமாளித்துக் கொண்டே ஓடிக் கொண்டிருப்போம்.

ஆனால் நம் ஆவிக்குரிய கண்களின் Microscopic effect-ன்படி பார்த்தால்; "அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய் கனி கொடுக்கும்படிக்கும்," என்ற சத்தியம் புரியும். அதாவது ஜெபித்தும்; கனியில்லாமல் வாழ்ந்ததினால்; நாம் ஜெபித்தது கிடைக்காமல் போனது என்ற உண்மை புரிய ஆரம்பித்திருக்கும்.

அடுத்த கட்டமாக, அந்தக் கனி நிலைத்திருக்கும்படியும் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது விளங்கும். இதற்காகவே தேவன் நம்மை ஏற்படுத்தினார், நம்மைத் தெரிந்து கொண்டார், அதே நேரத்தில் நாம் அவரைத் தெரிந்து கொள்ளவில்லை... இப்படியாக உருப்பெருக்கத்திறன் 100, 1000, 10000 என்று அதிக அளவில் கூடக் கூட அதற்கேற்ற சத்தியம் நமது விரிவடைந்த பார்வையின் எல்லைகளில் விழுகிறது. புரிந்தது வரைக்கும் போதும், மீதி போகப் போகப் புரியும். நாம் யாருமே பரிபூரணப்படவில்லை, பரிபூரணத்துவத்தை நோக்கிக் கொஞ்சம்கொஞ்சமாக முன்னேறிக்கொண்டே இருக்கிறோம், அவ்வளவுதான். ஆனாலும் இக்கடைசிக்காலத்தில் வேகத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அதிகப்படுத்தினால், நமக்கும், நம் பிள்ளைகளுக்கும், சமுதாயத்திற்கும், இந்தியாவிற்கும், அகில உலகத்திற்கும் நல்லது.

Microscope நாம் தரிசனங்களைப் பெற்றுக் கொள்ளவும் பேருதவியாக இருக்கும். புதிய காரியங்களை அனுதினமும் தரிசிப்பதால் ஓட்டமும் உற்சாகமாக இருக்கும்.

## *உயிருடன் புதைக்கப்படும் எதுவும் சாவதில்லை:*

நிஜத்திலும் நிஜம்! சமீபத்தில் ஒரு நாள் செய்தித்தாள் வாசித்துக் கொண்டிருந்தபோது; பெற்ற குழந்தையை உயிருடன் புதைத்துவிட்டுத் தற்கொலை செய்து கொண்ட ஒரு பெண்ணைப் பற்றி செய்தியை வாசிக்க நேர்ந்தது. நான்கு நாட்களுக்குப் பிறகு குழந்தை உயிருடன் மீட்கப்பட்ட செய்தி என்னை அவ்வளவாக ஆச்சரியப்பட வைக்கவில்லை. ஏனென்றால் குஜராத் பூமியதிர்ச்சியில் சிக்கி இடிபாடுகளிடையே புதையுண்டு 13 நாட்களுக்குப் பிறகு மயக்க நிலையில் இருந்து மனிதர்கள் மீட்கப்பட்ட செய்தியைப் படித்திருந்ததால்!

செத்த விதையைப் புதைத்தால் அது முளைப்பதில்லை. அதனால்தான் விதையை உயிருடன் புதைக்கிறோம். ஆனால் புதைத்த பின் அது சாகிறது; ஆனால் அதனுடைய தியாகம் நிலத்தை பீறிக் கொண்டு வெளியே வருகிறது. 30... 60... 100 என்று பலனும் தருகிறது. நம்முடைய விதைப்பின் அறுவடை தொடர்ந்து நடக்கிற ஒன்றாக இருக்கிறது. ஒரு பீன்ஸ் விதையை விதைக்கும்போது; அது வளர்ந்து கொடி விட்டு சரியாக 100 காய்களைக் காய்த்தவுடன் தன் கணக்கை முடித்துக் கொள்வதில்லை. அது சொல்வழக்கில் வரும் ஒரு கணக்கீடு. அந்தக் கொடி தன் உயிர் இருக்கும்வரையில் காய்த்துக் கொண்டே இருக்கும். பறிப்பவர்களும் எண்ணுவதில்லை; அவர்களின் கவனமெல்லாம் பீன்ஸ் பொரியலில்தான்! விதைக்குள்ளாக ஒரு விருட்சம் உறங்கிக் கொண்டிருக்கிறது. விதை தன்னைச் சாக ஒப்புக்கொடுத்தால்தான் மரம் தன் தலையை வெளியே காட்ட முடியும். விதை தன் உயிரை விட மறுத்தால்; மரத்தின் உறக்கம் நிரந்தர உறக்கமாகிவிடும்.

வட இந்தியாவில் உயிருடன் புதைக்கப்பட்ட இரத்த சாட்சிகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்போம். ஆனால் அவர்கள் சாகவில்லை. இன்றும் அவர்களுடைய சாட்சியை வார்த்தைகளாக அவர்களுடைய புத்தகங்களின் வழியாக பார்க்க முடிகிறது. மதத் தீவிரவாதிகளால் கிரஹாம் ஸ்டெயின்ஸ் மற்றும் அவர்களது 2 புதல்வர்களையும், அவருடைய வாகனத்தை (car) மட்டும் தான் எரிக்க முடிந்தது. ஆனால் திருமதி. கிரஹாம் ஸ்டெயின்ஸ்

அவர்களின் விசுவாசத்தை எரிக்க முடியவில்லை. அல்லேலூயா. சிலுவையில் தலைகீழாக அடிக்கப்பட்ட பேதுருவின் ஜீவ வார்த்தைகள் இன்றும் நம் கைகளில்! பவுல் அப்போஸ்தலனைத் தலையை வெட்டிக் கொன்ற போது; அவருடைய தலை 3 முறை பந்துபோல துள்ளி விழுந்ததாம்! அவருடைய நிருபங்கள் இன்றும் உயிருடன் நம் கைகளில் படபடக்கின்றன.

வேதத்தின் வசனங்கள் சுவிசேஷம் அறிவிக்கும்போது; கோதுமை மணிகளாகத் தூவப்படுகின்றன. அவைகளில் கிறிஸ்துவின் ஜீவன் இருப்பதால்; மனிதர்களின் இருதயத்தில் இரட்சிப்பைத் துளிர்விட வைக்கிறது. பரிசுத்தாவியானவர் அதற்குத் தோட்டக்காரராகப் பொறுப்பெடுக்கிறார்.

இதே காரியத்தைத் தேவன் நம்மில் எதிர்பார்ப்பதில் எவ்வித ஆச்சரியமுமில்லை. கனி கொடுப்பது மாத்திரமல்ல, அதில் நிலைத்திருக்கவும் (Continuously) எதிர்பார்க்கிறார். கனி கொடுக்கவே அவர் நம்மை ஏற்படுத்தினார் (நாட்டினார்). ஒரு மரத்தின் உயிர்த்தன்மையை அதன் இலைகள், பூக்கள், காய்கள், கனிகளை வைத்துத்தான் அறிய முடியும. கனியில்லாத மரத்தால் யாருக்கு என்ன பிரயோஜனம்? வாழை மரத்தின் கனிக்காலம் முடிந்ததும் அதை வெட்டிப் போடுவதன் காரணம் இப்போது புரிந்திருக்கும்.

நம் ஜீவன் (கிறிஸ்து எனக்கு ஜீவன்... பிலி.1:21) நம்மில் நிலைத்திருக்க நமக்கு ஆவியின் கனிகள்தான் உதவி செய்கின்றன. நாம் கனி கொடுத்து கிறிஸ்துவின் ஜீவனை நம்மில் தக்க வைத்துக் கொண்டால்தான் உயிருடன் இருக்க முடியும். அதாவது நம்முடைய உள்ளான மனுஷன் உயிருடன் இருக்க முடியும். நம் உள்ளான மனுஷன் உயிருடன் இருந்தால்தான் ஜெபிக்க முடியும்; தேவனால் பதில் தரவும் முடியும். அதாவது இயேசுவின் நாமத்தில் நாம் ஜெபித்தும் கனியில்லாமல் இருந்தால் ஏன் பதில் கிடைக்கவில்லை என்பது இப்போது புரியும். தேவன் பக்கத்தில் எந்தத் தவறும் இல்லையென்பதும்; நாம் சத்தியத்தை அறிந்து கொள்ளாததினால்தான் தவறு நடக்கிறது என்பதும் புரிந்திருக்கும். செத்த மனிதர்கள் ஜெபிப்பதில்லை. தேவனை அறியாத பெயர்க்கிறிஸ்தவர்கள் ஜெபிக்கத்தானே செய்கிறார்கள்? என்ற கேள்வி தோன்றலாம். அது என்ன பெரிய விஷயம்; தேவனே இல்லாத புறஜாதியார்களும் ஜெபிக்கத்தான் செய்கிறார்கள்.

யோவா-9:31 பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம், ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார்.

வசனம் நிலையானது, மாறாதது (fixed). தேவனுக்குச் சித்தமானதைச் செய்தால்; (கனி கொடுத்தால்) ஜெபத்திற்குப் பதில் வரும். தேவனுக்குச் சித்தமானதைச் செய்யாதிருந்தால் (கனி கொடுக்காவிட்டால்) பதில் வராது அவ்வளவுதான்.

## *அத்தி மரத்தை ஏன் சபித்தார்?*

மாற்-11:13 அப்பொழுது இலைகளுள்ள ஒரு அத்திமரத்தைத் தூரத்திலே கண்டு, அதில் ஏதாகிலும் அகப்படுமோ எனறு பார்க்கவந்தார். அத்திப்பழக் காலமாயிராதபடியால், அவர் அதினிடத்தில் வந்தபோது அதில் இலைகளையல்லாமல், வேறொன்றையும் காணவில்லை.

அத்தி மரத்தின் மேல் எந்தத் தவறும் இல்லாதது போல மேலோட்டமாகத் தோன்றலாம். காரணம் "அத்திப்பழக் காலமாயிராதபடியினால்" என்று பார்க்கிறோம். அத்திபழக் காலம் வருவதற்கு சில மாதங்களுக்கு முன்னதாகவே அதன் இலைகளின் கணுப் பகுதியில் சிறிய மொட்டுக்கள் போன்ற அமைப்பு காணப்படும். அதையும் பறித்துச் சாப்பிடலாம். அந்த மொட்டுக்கள் இருந்தால்தான் காலம் வரும்போது அதனால் கனி கொடுக்க முடியும். ஆண்டவர் இயேசு "ஏதாவது அகப்படுமோ" என்று பார்க்க வந்தது அந்த மொட்டுக்களைத்தான்.

ஆனால் அதில் இலைகளேயல்லாமல், கணுக்களின் மொட்டுக்கள் இல்லாததினால்; கனி காலத்திலும் அதில் பழம் பழுக்காது என்பதை அறிந்து கொண்டார். அதனால் தான் சபிக்கிறார். மத்21:19 ...இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக்கடவது என்றார்; உடனே அத்திமரம் பட்டுப்போயிற்று. அது கனி கொடுக்காவிட்டால் என்ன, சும்மா நின்றுவிட்டுப் போகட்டுமே என்று நினைக்கலாம். ஆனால் பழுக்காத மரம் நிலத்தைக் கெடுத்துப் போடும் என்று கர்த்தர் சொல்லுகிறார். வசனத்தைக் கவனியுங்கள்:

லூக்-13:7 அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி: இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடி வருகிறேன்; ஒன்றையுங் காணவில்லை, இதை வெட்டிப்போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான்.

மரங்களின் வேர் பல மீட்டர் தூரத்துக்கு நிலத்தினடியில் செல்லுமாகையால்; அது நிலத்தின் தண்ணீர் மற்றும் சத்துக்களை உறிஞ்சி; மற்ற கனிகொடுக்கும் மரங்களுக்குப் போதிய தண்ணீர், உரம் கிடைக்காமல் செய்து விடுகிறது. ஆவியானவரின் அபிஷேகம் இருந்தும் கனிகள் இல்லாத வெற்று வாழ்க்கை வாழ்ந்தால்; ஆண்டவருக்காகக் கனி கொடுப்பவர்களின் வாழ்க்கையையும் அது பாதிக்கிறது.

ஆஸ்திரேலியா கண்டத்தில் பல தனித்துவமான தாவர விலங்கு வகைகள் காணப்படுகின்றன. பிளாட்டிபஸ், கோலா கரடிகள், பறக்கும் நரிகள், பலவிதமான முதலை வகைகள், விஷப் பாம்புகள், சிலந்திகள், பாக்ஸ் ஜெல்லி மீன்கள், ஈமு என்ற பெரிய பறவை போன்றவை ஆஸ்திரேலியாவில் வாழுகின்றன. என்றாலும் முதலிடம் பெறுவது தனது குட்டியைத் தன் வயிற்றுப் பையில் சுமந்து செல்லும் வித்தியாசமான தோற்றமுள்ள கங்காருதான். இது ஆஸ்திரேலியாவின் அடையாளமாகவே உள்ளது. நமக்குக் கூட ஆஸ்திரேலியா என்றதும் நினைவுக்கு வருவது கங்காருதான்.

பரிசுத்தாவியானவர் வரங்கள், ஊழியங்கள், தரிசனங்கள், அந்நியபாஷை ... இப்படியாகப் பல காரியங்களைத் தருகிறார். என்றாலும் எல்லோரையும் கவர்ந்திழுக்கும் ஒரே காரியம் ஆவியானவரால் இருதயத்தில் ஊற்றப்படும் “அன்பு” மாத்திரம்தான். “வானத்தில் ஆயிரக்கணக்கான நட்சத்திரங்கள் கொட்டிக் கிடந்தாலும், நிலவுதானே நினைவில் நிற்கிறது!”

## அன்பு:

***(அன்பில்லாத ஆவிக்குரியவனின்** exam paper-ல் ‘absolute zero’ **என்று** mark **போடப்படுகிறது.):***

9 வகையான ஆவியின் கனிகள் பழுக்கின்றன. (கலா. 5:22,23) இந்தக் கனிகளுக்கு வித்திட்டு முளைக்க வைப்பவர் பரிசுத்தாவியானவர். **சந்தோஷம் + சமாதானம் + நீடிய பொறுமை + தயவு + நற்குணம் + விசுவாசம் + சாந்தம் + இச்சையடக்கம் = அன்பு** என்று சுருக்கமாக முடிக்கலாம்.

அன்பின் கனிகளின் எண்ணிக்கையை நாள்தோறும் அதிகரிப்போமானால் நம் எல்லைகளில் தேவனிடமிருந்து பல அனுகூலங்கள் கிடைக்கிறது. நம் பிள்ளைகளின் எல்லைகளில் தேவனுடைய இரக்கம் பெருகுகிறது (உபா.5:10).

வரப்போகிற எழுப்புதலுக்கே விதைகள் அன்புதான்! உலகின் ஜீவ ஜந்துக்களுக்கும் (மிருகங்கள், பறவைகள், ஊர்வன, நீர்வாழ் உயிரினங்கள்) சுகவாழ்வு கிடைக்கும். (உபா.11:13,14,15)

பலவான்களாக்குவார், ஐசுவரியவான்களாக்குவார், பராக்கிரமசாலிகளாக்குவார். (உபா.11:22-25) தேவனிடத்தில் அன்பு கூர்ந்தால் பொய்த் தீர்க்கதரிசிகளுக்குத் தப்புவிக்கப்படுவோம். (உபா.13:2,3) இரத்தப் பழிகளுக்கு விலக்கப்படுவோம். (உபா.9:10), பிழைப்புண்டாகும் (உபா.30:6), தீர்க்காயுசு (உபா.30:20), காணிக்கையை விட முக்கியமானது (மத்.12:33), பாவ மன்னிப்பைப் பெற்றுத்தரும் (லூக்.7:47), விசுவாசிகள் என்பதற்கான அடையாளம் (யோ.13:35),

தேவன் தன்னை, தன்னுடைய இரகசியங்களை வெளிப்படுத்துவார், வசனங்களின் முத்திரை உடைக்கப்படும். (யோ.14:21), நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறோம். (ரோ.13:8), கிருபை உண்டாயிருக்கும். (எபே.4:24), சுவிசேஷம் பரவுகிறது. (பி-.1:17), மார்க்கவசமாக உயிரைக் காக்கிறது; சாத்தானிடமிருந்து (1தெச.5:8), பின் மாற்றத்திலிருந்து மீண்டும் தேவனிடம் வர உதவி செய்யும். (எபி.6:20), ஜீவகிரீடம் கிடைக்கும். (யாக்.1:12), பரலோக இராஜ்யம். (யாக்.2:5), மகிமை நிறைந்த சந்தோஷம் கிடைக்கிறது. (1பேது.1:8), பாவம் செய்யாதபடி காப்பாற்றும். (1பேது.4:8), இயேசுவுக்குள் நிலைத்திருக்க உதவும். (1யோ.2:5), ஒளியில் நடக்கலாம். (1யோ.2:10), தேவனை அறியலாம். (1யோ.4:8), பயத்தைப் போக்கடிக்கும். (1யோ.4:18), பரலோகத்துக்கேதுவான இரக்கத்தை இயேசுவிடமிருந்து பெறலாம். (யூதா.1:21), இப்படியாக வேதத்தில் அன்பைப் பற்றி 205 வசனங்கள் இருக்கிறது.

அன்பை விதைப்போம், அன்பு பயிராகும். நாம் இயேசுவின் சாயலாக, மறுரூபமாக அது உதவி செய்யும். காரணம், தேவன் அன்பாகவே இருக்கிறார்.

## சுக வாழ்வு கிடைக்க எதை விதைக்க வேண்டும்?

அப்பொழுது விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்; கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும். ஏசா.58.8.

“அப்பொழுது” என்ற வார்த்தைக்கு முன்பாக அந்த விதை எது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏசா.58.6,7 ல் பல காரியங்கள் வருகிறது. ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமானால்; சுவிசேஷத்தை அறிவிப்பதும் (வசனம் விதைக்கப்படுகிறது), ஏழைகளுக்கு இரங்குவதும் (அவர்களுக்கு நம் உதவி போய் சேரும் போது; நம் ஐசுவரியம் நல்ல நிலத்தில் விழுகிறது). நாம் ஆசீர்வதிக்கப்படும்போது; நம் சுக வாழ்வு துளிர் விடுகிறது. “விளைச்சலாக” எதுவெல்லாம் கிடைக்கிறது? நம்முடைய ஜெபத்துக்கு உடனடியாகப் பதில் வருவதுதான் அந்த விளைச்சல்! பிறகென்ன, எதை வேண்டுமானாலும், எவ்வளவு வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

“கீழ்ப்படிதலை” விதைக்கும்போது தேவனுடைய பதில் விளைச்சலாக... நம் நீதி முன்னாலே... கர்த்தரின் மகிமை பின்னாலே... நாம் நடுவிலே பாதுகாப்பாயிருப்போம்.

## விதைகளைக் கெடுத்துப் போடும் விளைச்சல்கள்!

முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாயிருக்கிறார்கள்; கேட்டவுடனே போய், பிரபஞ்சத்திற்குரிய கவலைகளினாலும் ஐசுவரியத்தினாலும் சிற்றின்பங்களினாலும் நெருக்கப்பட்டு, பலன்கொடாதிருக்கிறார்கள். (லூக்.8:14)

முட்செடிகளுக்குள் விதைகள் விழுகிறதென்றால்; அதற்கு முன்னதாகவே அங்கே முள் விதைகள் விதைக்கப்பட்டிருக்க வேண்டும். அவற்றின் விளைச்சல்தான் முட்செடிகள். அவைகள் கவலை விதை, உலக ஐசுவரிய விதை (பண ஆசை), சிற்றின்ப விதை (கண்களின் இச்சை) ஆகிய மூன்றும்தான் என்பது வசனத்திலேயே இருக்கிறது. இந்த முட்செடிகள் வேரோடு பிடுங்கப்பட்டு, சுட்டெரிக்கப்பட்டு, நிலம் பண்படுத்தப்படாவிட்டால்; கோதுமை விதைகளின் நிலைமை அதோ கதியாகிவிடுகிறது!

மாற்-4:7 சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; முள் வளர்ந்து, அது பலன் கொடாதபடி, அதை நெருக்கிப்போட்டது.

நல்ல விதை போடப்பட்டதும் வளர்ந்திருக்கும் முட்செடிகள் தான் வளருவதை நிறுத்திக் கொள்வதில்லை, தொடர்கிறது. உலகப் பாவங்கள் கண்களை மறைக்கிறது.

வேதம் வாசிக்க ஆரம்பிக்கும் முன்னதாக, அல்லது ஒரு தேவசெய்தியைக் கேட்பதற்கு முன்னதாக; ஜெபித்து முட்செடிகளை இருதயத்தை விட்டு அகற்றி விடுவது நல்லது.

அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியாவில் நடந்த சர்வதேச பறங்கிக்காய்ப் போட்டியில் 80 பறங்கிக்காய்கள் பங்கேற்றன. ஒரேகான் மாநிலத்தைச் சேர்ந்த “தட் ஸ்டர்” உற்பத்தி செய்த 691 கிலோ எடையுள்ள பறங்கிக்காய் முதலிடம் பெற்று championship பட்டத்தை வென்றது.

சில வாரங்களில் அழுகப் போகும் ஒரு பறங்கிக்காயின் விதைக்கு இத்தனை முயற்சி (risk) எடுக்கப்பட்டது. ஆனால் அழியாமல் இருந்து நித்திய ஜீவனைக் கொடுக்கப்போகிற வசன விதையின் நிலையோ?...

## *முள்ளில் விதைக்கப்பட்ட வசனங்களின் நிலை:*

அமெரிக்காவில் “எர்னி சேம்பர்ஸ்” என்ற எம்.பி (செனட் உறுப்பினர்) கடவுள் மீதே வழக்குத் தொடர்ந்துள்ளார்! இயற்கைச் சீற்றங்கள், உயிரிழப்புகள், தீவிரவாதம் போன்றவற்றைக் கடவுள் பெருமளவில் ஏற்படுத்தி வருவதாகவும், கடவுளின் இந்தச் செயல்பாடுகளுக்கு நிரந்தரத் தடை விதிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்.

“நெப்ராஸ்கா - ஒமகா” கோர்ட்டில் வழக்கைத் தொடர்ந்துள்ள இவர்; கையில் நோட்டீசை வைத்துக் கொண்டு “எங்கேயிருந்தாலும் கடவுளே இங்கே வா” என்று கத்தினார். ஆனால் கடவுள் வரவில்லை; என்றாலும் கடவுள் எல்லா இடத்திலும் இருப்பதால், அவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கை அவர் தெரிந்து கொள்வார் என்றார் எர்னி சேம்பர்ஸ்.

இயற்கை சீற்றங்களுக்கு, தானே தான் காரணம் என்று கடவுளே பைபிளில் ஒத்துக் கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்! (ஆதாரம்: தினத்தந்தி 21-09-2007)

சங்-2:4 பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் நகைப்பார்; ஆண்டவர் அவர்களை இகழுவார்.

அவரை இயக்கியது சந்தேகமேயில்லாமல் சாத்தான்தான் என்பது வெட்ட வெளிச்சம். அதனால் இவரை ஓரம் கட்டிவிட்டு; திரைக்குப் பின்னால் இருக்கும் சாத்தானின் நோக்கம் என்னவென்று பார்ப்போம். தேவனின் வல்லமை அவனுக்குத் தெரியும். பூமியை அவர்தான் ஆளுகிறார் என்பதும் தெரியும். அவ்வளவு பெரிய தேவனுடன் மோத முடியாது என்பதும் தெரியும். பிறகு ஏன் இப்படி? அவனுக்கு மூளை குழம்பி விட்டதா? அதற்கும் chance இல்லை; சாத்தானுக்குத்தான் மூளை குழம்பி விட்டது! தன்னுடைய குழம்பிய மூளையின் சிந்தனைகளை வெளிப்படுத்த ஒரு மனிதனைத் தெரிவு செய்திருக்கிறான், அவ்வளவுதான்.

## *சாத்தானால் இயக்கப்பட்டவன் சுட்டிக் காட்டிய வசனங்களில் சில கீழே:*

யோசு-24:7 அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்; அப்பொழுது அவர் உங்களுக்கும் எகிப்தியருக்கும் நடுவே அந்தகாரத்தை வரப்பண்ணி சமுத்திரத்தை அவர்கள்மேல் புரளச்செய்து, அவர்களை மூடிப்போட்டார்;

ஏசா-51:15 உன் தேவனாயிருக்கிற கர்த்தர் நானே, அலைகள் கொந்தளிக்கத்தக்கதாய்ச் சமுத்திரத்தைக் குலுக்குகிற சேனைகளின் கர்த்தர் என்கிற நாமமுள்ளவர்.

2சாமு-24:13 அப்படியே காத் தாவீதினிடத்தில் வந்து, அவனை நோக்கி: உம்முடைய தேசத்திலே ஏழு வருடங்கள் பஞ்சம் வரவேண்டுமோ? அல்லது மூன்று மாதம் உம்முடைய சத்துருக்கள் உம்மைப் பின்தொடர, நீர் அவர்களுக்கு முன்பாக ஓடிப் போகவேண்டுமோ? அல்லது உம்முடைய தேசத்திலே மூன்று நாள் கொள்ளைநோய் உண்டாக வேண்டுமோ? இப்போதும் என்னை அனுப்பினவருக்கு நான் என்ன மறுஉத்தரவு கொண்டு போக வேண்டும் என்பதை நீர் யோசித்துப்பாரும் என்று சொன்னான்.

எரே-46:10 ஆனாலும், இது சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவரின் நாளும், அவர் தம்முடைய சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டுகிற நாளுமாயிருக்கிறது; ஆகையால், பட்டயம் பட்சித்து, அவர்களுடைய இரத்தத்தால் திருப்தியாகி வெறித்திருக்கும்; வடதேசத்தில் ஐப்பிராத்து நதியண்டையிலே சேனைகளின்

கர்த்தராகிய ஆண்டவருக்கு ஒரு யாகமும் உண்டு.

ஏசா-25:10 கர்த்தருடைய கரம் இந்த மலையிலே தங்கும்; கூளம் எருக்களத்தில் மிதிக்கப்படுவதுபோல, மோவாப் அவர்கீழ் மிதிக்கப்பட்டுப்போம்.

ஏசா-29:6 இடிகளினாலும், பூமி அதிர்ச்சியினாலும், பெரிய இரைச்சலினாலும், பெருங்காற்றினாலும், புசலினாலும், பட்சிக்கிற அக்கினிஜுவாலையினாலும், சேனைகளின் கர்த்தராலே விசாரிக்கப்படுவாய்.

ஆதி-12:17 ஆபிராமுடைய மனைவியாகிய சாராயின் நிமித்தம் கர்த்தா பார்வோனையும், அவன் வீட்டாரையும் மகா வாதைகளால் வாதித்தார்.

1சாமு-14:15 அப்பொழுது பாளயத்திலும் வெளியிலும், சகல ஜனங்களிலும், பயங்கரம் உண்டாய், தாணையம் இருந்தவர்களும் கொள்ளையிடப்போன தண்டிலுள்ளவர்களுங்கூடத் திகில் அடைந்தார்கள்; பூமியும் அதிர்ந்தது; அது தேவனால் உண்டான பயங்கரமாயிருந்தது.

1சாமு-16:14 ...கர்த்தரால் வரவிடப்பட்ட ஒரு பொல்லாதஆவி அவனைக் கலங்கப்பண்ணிக்கொண்டிருந்தது.

தேவன் நல்லவர், அவர் நன்மைதான் செய்வார், தேவையானால் தீமைகளை அனுமதிக்கிறார். ஒரு வசனத்தை வைத்து முடிவு செய்யக் கூடாது. அந்த வசனம் உள்ள அதிகாரத்தை, தேவையானால் அதற்கு முன் & பின் அதிகாரங்களையும் சேர்த்து வாசிக்க வேண்டும்; அப்போது புரியும்.

## அறிவில்லாதினால் சங்காரம்:

என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சிறைப்பட்டுப்போகிறார்கள்; அவர்களில் கனமுள்ளவர்கள் பட்டினியினால் தொய்ந்துபோகிறார்கள்; அவர்களுடைய திரளான கூட்டத்தார் தாகத்தால் நாவறண்டுபோகிறார்கள். ஏசா-5:13

என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்; ...ஓசியா-4:6

பழைய கால ரோமானியர்கள் நீர்க்குழாய்களை நிலத்தினடியில் புதைக்கவில்லை. உயரமான தூண்களின் மேலேயே அவற்றை அமைத்தனர். ஏன் இவ்விதம் செய்தனர்? இரண்டு கொள்கலங்களை நீண்ட குழாய் ஒன்றினால் இணைத்தால் நீர் ஒரே மட்டத்திற்கு உயராது என்று இஞ்சினியர்கள் பயந்தார்கள். நிலத்தினடியில் நீர்க்குழாய்களை அமைத்தால் சில இடங்களில் நில அமைப்பின் மாறுபாடுகளால் நீர் மேல்நோக்கிப் பாயவேண்டியதாயிருக்கும் என்றும், அது நடக்காது என்றும் நினைத்தனர். அதனால் அவர்களின் நீர்க்குழாய்கள் வழியெங்கும் மேலிருந்து கீழ்நோக்கியே செல்கின்றன. பல இடங்களில் சுற்றுவழியிலோ, உயரமான வளைவுகளைக் கட்டி அவற்றின் மேலோயோ அமைக்க வேண்டியிருந்தது. அக்வா மார்ட்ஸியா (Aqua Mardshia) என்ற நீர்க்குழாயின் நீளம் 100 கி.மீ., என்றாலும் அதன் இரண்டு நுனிகளுக்கும் இடையே உள்ள தொலைவை அளந்தால் 50 கி.மீ., தான் இருக்கிறது.

பௌதிகத்தின் ஒரு சிறிய ஆரம்ப விதி தெரியாமல் போனதால் பொறியியலாளர்கள் (engineers) 50 கி.மீ., அதிகமாகக் குழாய்களை அமைக்க வேண்டியதாயிருந்தது. ரோமானிய அடிமைகள் 1000 மடங்கு அதிக வேலையும் செய்ய வேண்டியதாயிருந்தது. ரோமானியர்கள் தங்களின் மூதாயர்கள் கட்டிய நீர்க்குழாய்களில் எஞ்சியிருப்பவற்றை இன்றும் உபயோகித்து வருகின்றனராம். முழு அளவில் வெற்றியடையாவிட்டாலும் ஏதோ சமாளிக்கின்றனர்.

தேவனைப் பற்றிய அறிவில்லாததினால் நம் முன்னோர்கள் எண்ணிக்கையிலடங்காதோர் பல குறைவுகளோடு, பிரச்சனைகளோடு, வேதனைகளோடு வாழ்ந்து முடித்துப் பரலோகம் போய்ச் சேர்ந்தும் விட்டார்கள். எப்படியோ பரலோகம் போனால் மட்டும் போதும் என்றிருந்தால் இவர்களுடைய வழியைப் பின்பற்றலாம். நம் தேவன் இயேசு சிலுவையில் நமக்குத் தேவையான அனைத்து ஆசீர்வாதங்களையும் ஏற்படுத்தி வைத்திருக்க; இன்னும் பழைய உடன்படிக்கையின்படியே பல முயற்சிகளைச் செய்து சோர்ந்து போய்

விழுந்துகொண்டேயிருக்கிறார்கள். அப்-13:39 மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே நீங்கள் எவைகளினின்று விடுதலையாகி நீதிமான்களாக்கப்படக்கூடாதிருந்ததோ, விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான் என்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது

பழைய உடன்படிக்கையின் காரியங்களை நேரடியாகவே எடுத்துக்கொண்டிருந்த காலங்களில் என் விசுவாச வாழ்க்கையின் ஓட்டம் மிக தாமதித்தது. ஆமை முயல் கதையாகிப் போனது. என் விசுவாசத்தைத் தூங்க வைத்து விட்டு; அவிசுவாசம் முந்திக்கொண்டு தலைதெறிக்க ஓடியது! ஒன்றை முயற்சி செய்தால் இன்னொன்று வழுக்கிற்று. பொய் சொல்லக்கூடாது என்று முயற்சித்தால் அன்றைக்கு அதிகமாகக் கோபம் வந்தது. எதையும் சாதிக்கலாம் (will power) என்று வீராவேசமாக எழும்பியபோது; குதிரையைக் காணோம்! (?). பரிசுத்தத்தைக் காக்க வேண்டும் என்று முயற்சித்தால் (practice) ஒரு நாளைக்கு முன்னதாகவே குமுதமும் ஆனந்தவிகடனும் வீட்டுக் கதவைத் தட்டும்; ஒரு good news புதிய தொடர்கதை ஆரம்பிச்சிருக்கு என்பார்கள். சத்தியத்தை அறிந்துகொள்ளாத முயல் வேகம் பிரயோஜனமில்லாதது. சத்தியத்தை அறிந்துகொண்டால்; ஆமை வேகம் கூட பாராட்டப்படக் கூடியதாயிருக்கும். ரோம-1:17 விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது.

இக்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்குப் புதிய உடன்படிக்கை மட்டும்தான்; மாற்று வழி சொல்லப்படவில்லை. இயேசு கிறிஸ்து நமக்காக ஜீவனைக் கொடுத்திருக்க; காலத்துக்கு முன் நாம் ஏன் சாக வேண்டும்? சங்-118:17 நான் சாவாமல், பிழைத்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன்.

யெகோவா ரஃபாவாக தேவன் தன் வல்லமையை விளங்கச் செய்துகொண்டிருக்க நாம் ஏன் நம் ஐசுவரியத்தை மருந்து, மாத்திரை என்று வீணடிக்க வேண்டும்? ...நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்... (யாத்-15:26)

தேவன் நம் பாவத்தையெல்லாம் மன்னித்து விட்டிருக்க; என்றோ, பத்து வருஷங்களுக்கு முன்னதாகச் செய்த ஒரு பாவத்தை; தேவன் ஆழ்கடலில் போட்டுவிட்ட பாவத்தை நீர்மூழ்கிக் கப்பலில் போய் தோண்டி எடுத்து வரத்தான் வேண்டுமா? உங்களுக்கென்ன வேறு வேலையில்லையா? அவர் திரும்ப நம்மேல் இரங்குவார்; நம்முடைய அக்கிரமங்களை அடக்கி, நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார்.(மீகா-7:19)

இயேசு நம் சாபத்தையெல்லாம் விலக்கியிருக்க; என் அப்பா திராட்சைக் காய்களைத் தின்றார்; எனக்குப் பல் கூச்சமாக இருக்கிறது என்று பல் டாக்டர்களிடம் போய்க்கொண்டிருக்கிறோம். எரே-31:29 பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்று அந்நாட்களில் சொல்லமாட்டார்கள். எசே-18:2 பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்னும் பழமொழியை நீங்கள் இஸ்ரவேல் தேசத்தைக்குறித்தச் சொல்லுகிறது என்ன?

தேவன் நம்மை ஐசுவரியவான்களாக்கியிருக்க; நாம் பரதேசிகள் என்று சொல்லிக் கொண்டு கண்ணுக்குத் தெரியாத திருவோடுகளுடன் அலைகிறோம். எபே-2:19 ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து,...

நிறுத்துவோம் நம் முட்டாள்தனத்தை! காருக்குள் மூட்டையைத் தலையில் சுமந்தபடி உட்கார்ந்திருந்த மனிதனின் கதையைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். மோட்சப் பிரயாணம் ஜாண் பனியன் பாவ மூட்டையை சிலுவையின் அடிவாரத்தில் உருட்டித் தள்ளிவிட்ட விஷயம்

இவருக்குத் தெரியாது போலிருக்கிறது. தேவன் நம் சுமையை இலகுவாக்கியிருக்கிறார். அவரே சுமந்தும் கொள்கிறார். நாமோ இன்னும் நுகத்தடியை இழுத்துக் கொண்டு நடக்கிறோம். கிரியை செய்ய முயற்சித்து கிருபையைத் தொலைத்து விட்டு கையைப் பிசைந்து கொண்டிருக்கிறோம்.

எபி-11:40 அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார். நியாயப்பிரமாணத்தால் முயற்சித்த பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்கள் பூரணமடையாமல் பரலோகம் சேர்ந்தார்கள். நாமோ புதிய உடன்படிக்கை சார்ந்த கிருபையால் பூரணராகும்படி கடந்து போய்க்கொண்டிருக்கிறோம். அவர்களையும் பூரணப்படுத்துகிறோம். அரைகுறையாக இருந்த ஓவியம் வரைந்து முடிக்கப்படுகிறது. பாதியில் நின்ற கட்டிடம் திரும்ப எழுப்பப்படுகிறது. “கிரியை” என்ற கட்டுரைக்குக் கிருபையால் முடிவுரை எழுதுகிறோம். நாம் பாக்கியம் பெற்றவர்கள். அல்லேலூயா.

பழைய துருத்தியில் பழைய ரசத்தை ஊற்றித் தனியாக வைத்துக் கொள்வோம். புதிய துருத்தியில் புதிய திராட்சை ரசத்தைச் சேகரித்து வைப்போம். பழையது சுவையானதுதான். ஆனால் புதிய ரசத்துடன் சேர்த்தால் புதிய ரசம் சீக்கிரத்தில் புளித்துவிடும்.

புதிய ஏற்பாட்டின் புத்தகங்களைத் தியானிப்போம்; அதன் வெளிச்சத்தில் பழைய ஏற்பாட்டை வாசிப்போம். பரிசுத்தாவியானவரின் ஆலோசனையுடன் கிருபை சார்ந்த காரியங்களை எடுத்துக் கொள்வோம். வெற்றி நிச்சயம்!

## *ஓர் உதாரணம்:*

1) மத்-13:7 சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; முள் வளர்ந்து அதை நெருக்கிப்போட்டது.

எரே-4:3 யூதா மனுஷரோடும், எருசலேமியரோடும் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நீங்கள் முள்ளுகளுக்குள்ளே விதையாதிருங்கள், உங்கள் தரிசுநிலத்தைப் பண்படுத்துங்கள்.

2) மாற்-2:18 யோவானுடைய சீஷரும் பரிசேயருடைய சீஷரும் உபவாசம்பண்ணிவந்தார்கள். அவர்கள் அவரிடத்தில் வந்து: யோவானுடைய சீஷரும் பரிசேயருடைய சீஷரும் உபவாசிக்கிறார்களே, உம்முடைய சீஷர் உபவாசியாமலிருக்கிறதென்னவென்று கேட்டார்கள்.

ஏசா-58:7 பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்.

## *இளைய சமுதாயத்தினர் மத்தியில் தன் விஷத்தின் விதைகளைத் தூவும் சாத்தானின் நூதன அணுகுமுறைகள்:*

மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், ... இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று.∴ உங்களுக்குச் சொல்லுகிறேன்.(கலா.5:19-21)

இந்த வசனத்தில் வரும் பாவங்களைச் சாத்தான் உலகத் தோற்றமுதல் இதுவரைக்கும் தன்னுடைய ஞானத்தில் பலவிதமான பரிணாமங்களில் உருமாற்றம் செய்து; காலத்துக்கேற்ப

எளிதாக விழுந்து வளரும் வகையில் வடிவமைத்து விதை தூவி வருகிறான். அதுவும் நல்ல நிலத்தில் விழுந்து 30, 60, 100 ஆகப் பலன்கொடுத்து வருகிறது. அந்த விதைகளைப் பற்றி... (இதைப் பற்றி பல ஊழியக்காரர்கள் நிறைய எழுதிவிட்டார்கள்; அதனால் என் பங்குக்குச் சில காரியங்கள் மாத்திரம் சுருக்கமாக...)

***Love: (காதல்):*** அந்தப் பாவங்களின் பரிணாம வளர்ச்சிதான் இது. ஆண்டாண்டு காலமாக இந்த வளர்ச்சி இருப்பதால் இது உறுதியாகி விட்டது. இது பாவமல்ல, பரிசுத்தமானது என்று சாத்தான் பற்பல ஆண்டுகளாக கல்வெட்டுக்கள், காவியங்கள், காப்பியங்கள், மூலமாக விளக்கம் சொல்லி வந்தான். காலப்போக்கில் சிறுகதைகள், தொடர்கதைகள், திரைப்படங்கள் என்று போய் கடைசியாக வலையில் (net) முடித்திருக்கிறான். இனி அவனுடையத் திட்டம் எந்த அளவில் இருக்கிறது என்று தெரியவில்லை. அதைத் தெரிந்துகொண்டு சல்லி வேர்முதலாய்ப் பிடுங்கி எறிய வேண்டும்.

## *Lust: (காமம்)*

பரிசுத்தமானது, தெய்வீகமானது, கத்தரிக்காய் போன்றது, மண்ணாங்கட்டியானது என்று மெதுவாகக் காய்களை நகர்த்தி; கால்களை அடுத்த கட்டத்துக்குள் எடுத்து வைக்க வழி செய்கிறான். வசனத்தைக் கவனியுங்கள்:

நான் (இயேசு) உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று. மத்-5:28

ஒரு நிமிஷம்! கவனியுங்கள், எச்சரிக்கையுடன் பின்வாங்குங்கள்.

## *Sex: (செக்ஸ்)*

ஏராளமான அசுத்தங்களைக் கலந்து மர்ம நாவல்கள் எழுதிக் குவித்த ஒரு எழுத்தாளரின் ***சுருக்கமான விளக்கம் தொடர்ந்து வருகிறது...***

“வெறும் சைட்டோபிளாசச் சேர்க்கை” அவ்வளவுதான்! இந்தத் தெளிவு ஆவிக்குரிய இளைஞர்களுக்குக் கூட இல்லை, ஏதோ தலைபோகிற விஷயம் என்று நினைத்து, பறக்கும் குதிரையேறி உலகம் சுற்றி வருகிறார்கள்.

***Aids: (செக்ஸ்)*** குதிரைப் பந்தயத்தில் ஜெயித்தவர்களுக்குச் சாத்தான் தரும் கிரீடம்! (?) (Gift) கருப்புப் பார்சல்களில் விலாசம் தேடி வருகிறது.

## *Girl Friends, Boy Friends: (ஆண் / பெண் நண்பர்கள்)*

அப்போஸ்தல உபதேசத்தில் இல்லாத காரியங்களில் இதுவும் ஒன்று. ரயில் பாதை (Train Tracks) போல சென்று முடிவில் எங்கோ ஓரிடத்தில் வளையக்கூடியது (Flexible) இந்த விஷயம். இதைப் பற்றி பேசிய எத்தனையோ ஊழியர்களுக்கு “பட்டிக்காடு, காட்டான், நாட்டுப்புறம், கோமுட்டி தலை, இன்னும் என்னென்னவோ...” என்று பட்டப்பெயர்கள் சூட்டப்பட்டன. சபைக்குள்ளாகவே இந்தக் காரியம் இருக்கிறதே, எப்படி தவறாகும்? என்று யோசித்தால்...? அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை; நெற்றிக்கண் திறந்தாலும் குற்றம் குற்றமே!

Jurassic Park ஜூராசிக் பார்க்) என்ற ஆங்கிலத் திரைப்படம், சுமார் 13 வருஷங்களுக்கு முன்பு வந்து பிரபலமாகப் பரபரப்பூட்டிய சினிமா... அதில் வரும் ஒரு காட்சியில்... நோவா காலத்துக்கு முன்பாக வாழ்ந்த சில இராட்சத விலங்கினங்கள் (Dionasaurus) மீண்டுமாக

சில விஞ்ஞானிகளால் உருவாக்கப்படுகிறது. அவைகள் மனிதனுக்குத் தீங்கு செய்யாத அளவில் அவைகளுக்கு எல்லைகள் வகுக்கப்படுகின்றன. **(மின்சார வேலி, இராட்சத கூண்டுகள், பாதாள அறைகள் என்று).**

சுற்றிப் பார்த்த பார்வையாளர்கள் (visitors) சிலர் வாகனத்தில் (Jeep-ல்) இருந்தபடி இந்த விலங்குகளைப் பற்றி விமரிசனம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒருவர் தன் கையின் விரல்கள் ஐந்தையும் மடக்கி, நுனிப்பகுதியில் ஒரு சொட்டு தண்ணீரை விடுகிறார், அது வலதுபுறமாக வழிகிறது. மீண்டும் ஒரு சொட்டு தண்ணீர் விடுகிறார், அதுவும் வலதுபுறமாகவே... இப்படியாக ஆறேழு முறை செய்தபோதும் தண்ணீர் வலதுபுறமாகவே வழிகிறது. வண்டியில் இருந்த எல்லோரும் இந்த முறையில் தண்ணீரை விட்டால் அது வலதுபுறமாகத்தான் வழியும், இடதுபுறம் வழியாது என்ற முடிவுக்கு வருகின்றனர். அந்த நபர் மீண்டுமாக ஒரு சொட்டு தண்ணீரை விடுகிறார், மிகவும் எதிர்பாராமல் அது இடதுபுறமாக வழிந்து விடுகிறது!

அந்த இராட்சத விலங்குகளினால் எந்தவிதமான ஆபத்தும் வராது என்று சொல்ல முடியாது. சூழ்நிலை எப்போதும் ஒரே மாதிரியாக இருக்காது. அது மாறலாம். ஒரு வேளை அந்த விலங்குகளினால் மனிதர்களுக்கு ஆபத்து வந்தால்? அவைகள் எல்லைகளைத் தாண்டினால்? என்று அந்த விஞ்ஞானி சொல்லி முடிப்பதற்குள்ளாக ... அந்த இராட்சத மிருகம் அவர்களுக்கு முன்னால் நின்று கொண்டிருந்தது! மின்வேலியில் மின்னோட்ட தடை ஏற்பட்டதால்... மிருகம் அதை அறுத்தெறிந்து விட்டு, எல்லையைத் தாண்டிக் குதித்தது, ஓடியது...

எதிர்பாலரோடான பழக்கம், நட்பு (friendship) ஆரம்பத்தில், அல்லது கொஞ்சக்காலத்துக்குச் சரியாக போவதுபோலவும், தவறு எதுவும் நடக்காதது போலவும் தோன்றும். முடிவில் வளைத்து விடலாம் (வளைந்து விடும்) என்பதை அறிந்த சாத்தானின் நரித்தனமான அணுகுமுறைதான் இது. இளம் உள்ளங்களில் விதைக்க அவன் ரொம்பக் கஷ்டப்படவில்லை. விசுவாசித்தேன் அதனால் பேசுகிறேன் என்று ஆணித்தரமாக பவுல் சொன்னதுபோல என்னாலும் சொல்ல முடியும். இந்த விஷயம் (flexible) வளைந்துபோன சம்பவங்களை நான் நிறையப் பார்த்திருக்கிறேன், அதனால் பேசுகிறேன்! பேசவே கூடாது என்றும் அர்த்தம் எடுக்கக் கூடாது; புரிந்து கொள்ள வேண்டும், இப்படியே தர்க்கம் செய்து கொண்டே, ரொம்பக் காலத்துக்கு ஓட்டத்தைச் சமாளிக்க முடியாது.

இன்னும் பல காரியங்கள் உண்டு, அதில் ஓரினச் சேர்க்கையும் (Homo, lesbian) அடங்கும். இதைப் பற்றி எழுதத் தெரியவில்லை, ஆனால் வசனம் தெரியும்.

ரோம-1:27 அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர்மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து, தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள்.

அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது.

அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி,

அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்.

இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.

தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத்தொழுது சேவியாமல் சிருஷ்டியைத்தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஆமென்.

இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்; அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள்.

**So... இது ஏன் நடக்கிறது? எப்படி நடக்கிறது? என்னதான் நடக்கிறது? இப்படிப்பட்ட பல கேள்விகளுக்கு வசனத்திலேயே பதில் இருக்கிறது, கூர்ந்து கவனித்துப் பாருங்கள்.**

தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்.

**விளக்கம் சுருக்கமாக: இயேசுதான் தேவன் என்று தெரிந்தும் அவரை ஏற்றுக்கொள்ள மனதில்லாமல் போகும்போதுதான் இது நடக்கிறது. இயேசு இல்லாத இருதயம் செத்துக் கருப்பாகி, ... அப்படியே இந்த அசுத்தங்களின் பக்கமாகத் திரும்புகிறது. சாத்தான் பொறுப்பெடுத்துக் கொண்டு, இருதயத்தை அவனுடைய விருப்பத்திற்கு இயங்க வைக்கிறான். பரிசுத்த தேவனால் பரிசுத்தமாகப் படைக்கப்பட்ட நம் சரீரத்தை எப்படி வைத்திருக்கிறோம்? உள்ளே சாக்கடையை ஓட விட்டுக்கொண்டிருக்கிறோமா? நின்று நிதானிப்போம்.**

**இளைஞர்களே, நீங்கள் இயேசுவுக்காகவே வாழுங்கள்... சாத்தானை உங்கள் தோளின் மீது கையைப் போட விடாதிருங்கள். அவன் "கொல்லவும், அழிக்கவும்" மாத்திரம்தான் வருகிறான், வேறு எதற்காகவும் வருவதில்லை. இப்போதே எச்சரிக்கையாகிவிடுங்கள், இனிமேல் காலம் செல்லாது.**

**பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் இயேசுவுக்காக ஊழியம் செய்ய... எதையாகிலும்... தாவீதைப் போல திராணிக்குத் தகுந்தபடி (1 நாளா. 29:1-6) (5000 கோடி ரூபாய் அல்ல) எதையாகிலும் விதைத்து வையுங்கள்.**

## வயதானவர்களே,
## இளைஞர்களுக்காக ஜெபியுங்கள்.

### விதைகள் – பகுதி நான்குடன் ஒரு உரையாடல்:

**"நீ இப்படி முண்டியடித்துக் கொண்டு**
**வெளியேற முயன்றால்...**
**நான் கதவு திறக்க மாட்டேன்.**
**தேவனுடைய வேளை வரும்போது;...**
**உங்களைத் தகுதியான வாகனங்களில்...**
**ஆடம்பரமில்லாத அழகு உடைகளோடு...**
**அறுவடைக்காலத்திற்கு அடுத்த**
**பூப்பின்போது... அனுப்பி வைப்பேன்!"**

**- ஆசிரியர்**

உங்களது சந்தேகங்கள் - கேள்விகள் - ஆலோசனைகள் ஏதேனுமிருப்பின் எங்களுக்கு எழுதுங்கள். தொடர்பு கொள்ளுங்கள். இந்த e-Books அனைத்தும் புத்தக வடிவில் வெளியிடப்படவும் இன்னும் அநேகருக்கு பயனுள்ளதாய் அமையவும் ஜெபியுங்கள். உங்கள் அநுதின ஜெபத்தில் எங்களையும் எங்கள் ஊழியத்தையும் நினைத்துக் கொள்ளுங்கள். நன்றி!


எங்கள் முகவரி:

சகோதரி. **லதா டேவிட்**
**நித்தியர் இயேசு ஊழியங்கள்**
5-A/233, கால்டுவெல் காலனி 2-ம் தெரு கிழக்கு,
தூத்துக்குடி-628 008
தொலைபேசி: +91-461-23 77 88 9
அலைபேசி: +0-9442466250 & +0-9003456506

Email: sovereignjesus@gmail.com
Web : www.sovereignjesus.com

**Our Address:**

**Sis. LATHA DAVID**
SOVEREIGN JESUS MINISTRIES
**5-A/233, CALDWELL COLONY**
**SECOND STREET (EAST)**
**TUTICORIN-628 008**

**Ph.: +91-461-23 77 88 9**
**Mobile: +0-9442466250 & +0-9003456506**

Email: sovereignjesus@gmail.com
Web : www.sovereignjesus.com


★ ★ ★★ ★★ ★